94

வசந்தம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 JAN 1947
MADRAS

விய, மார்கழி
டிசம்பர், 1946

JL
ா211,N42VM
N46.5.9

எல்லா விதமான இன்ஷ்யூரன்ஸ் திட்டங்களுக்கும்

ஆயுள், நெருப்பு, கப்பல், விபத்து

மோட்டார்கார் பிறர் மீது ஏறி விபத்தேற்பட்டாலும், மோட்டார்களுக்கு ஏற்படும் சகல விபத்துக்களுக்கும், நம்பிக்கைக்கு உத்திரவாதம், தொழிலாளர் நலன்களைப் பாதுகாப்பதும், ரெயில், தபால், விமானம் முதலிய சகலவிதமான இன்ஷ்யூரன்ஸ் திட்டங்களும் அடங்கியுள்ள.

நியூ இந்தியா

அஸ்யூரன்ஸ் கம்பனி லிமிடெட்டில்

இன்ஷ்யூர் செய்யுங்கள்.

இந்தியாவிலேயே, சகலவிதமான இன்ஷ்யூரன்ஸ்களும் செய்யும் பெரிய கம்பெனி. டாடா குடும்பத்தினரால் துவக்கப்பட்டது.

மொத்த ஆஸ்தி சுமார் 9 கோடி ரூபாய்.

ஆக்டிங் சேர்மன்: ஜே. ஆர். டி. டாடா எஸ்கொயர்.

தலைமை ஆபீஸ்: மஹாத்மா காந்தி ரோடு, கோட்டை - பம்பாய்.

மதராஸ் கிளை: 4 & 5 முதல் லைன் பீச்.

PRECISION "Plus"



நிகரற்ற, பலம்

கடிகாரம் காலத்தை அளந்து காட்டுவதற்கு அவசியமான ஒரு சாதனம். அதனுடைய வேலை, மணி, நிமிஷம், விநாடி சரியான முறையில் காட்டுவதே. நாள், வாரக் கணக்கில் மட்டுமல்ல, ஆனால் வருஷக் கணக்கில்.

நிகரற்ற காலத்தைக் காட்டுவதே வெஸ்ட் எண்ட் கடிகாரங்களின் அடிப்படையான சக்தியாகும். அவை சரியான காலத்தைக் காட்டுபவை என உலகமெங்கும் கியாதி பெற்றது. உண்மையான உழைப்பும், திறமையுமே அதன் புகழுக்குக் காரணம். நிகரற்ற பலமும், நேர்த்தியான அமைப்பும் வாய்ந்த வெஸ்ட் எண்ட் கடிகாரங்களே உங்கள் பணத்தைக்கொண்டு வாங்கக் கூடியவை.

பட்த்தில் மேலே உள்ளது
நியூ காலிப்ரி 'ஜி'
(கீழே) கேட் ஆப் ரெகுலேடர்.

உற்பத்தியில் தாமதம் ஏற்படுவதால் விளம்பரத்தில் கண்டுள்ள விதங்களில் கொடுப்பது எப்பொழுதும் சாத்தியமில்லை. ஆனாலும் ஆர்டர்கள் அவ்வப்பொழுது கவனிக்கப்பட்டு கூடுமானவரை சப்ளை செய்யப்படும்.

WEST END WATCH Co

வெஸ்ட் எண்ட்
வாட்சு கம்பனி,

பம்பாய் — கல்கத்தா.

உங்கள் தினசரி உபயோகத்திற்கு

பனி மலைத் தென்றல் போன்று குளிர்ச்சி வாய்ந்ததும், அரிய மலர்களின் நறுமணம் போன்று களைப்பாற்றுவதுமான

டாடா ஒ–டி–கொலோன்

உங்கள் தினசரி உபயோகத்திற்காயினும் சரி, ஜுரத்தால் வேகும் நெற்றித் தடத்தை குளிரப்பண்ணுவதற்காயினும் சரி உகந்தது.

எப்பொழுதும் ஒரு பாட்டில் வீட்டில் கையோடு காவலாய் வைத்திருங்கள்.

டாம்கோ விற்பனை இலாகா,

நெ. 4/117. திருச்சி ரோடு :: கோயமுத்தூர்.

இலக்கிய வானில் ஒரு புத்தொளி!

இலக்கியம், சிறுகதை, கட்டுரை, கவிதை, நாடகம், விஞ்ஞானம்
இத்தனையும் நிறைந்ததாய் எழிலுடன் வெளிவருகிறது!

அமுதம்

(மாதம் ஒரு புத்தகம்)

பதிப்பாசிரியர்: கே. சி. எஸ். அருணசலம்

நிர்வாகி: பி. கே. கிருஷ்ணசாமி

விவரங்களுக்கு

அமுதம் காரியாலயம்

திருச்சிரோடு :: கோயமுத்தூர்.

OFFICE OF THE REGISTRAR ... 9 JAN 1947 MADRAS

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.

உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக நாள் உழைக்கும்.



மைசூர் கவர்ன்மென்ட் தயாரிப்பு.

கவர்ன்மென்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

MSK-10 TM



பிரசினை : ஆறு தீக்குச்சிகளைக் கொண்டு நான்கு முக்கோணங்கள் அமைக்கவும்.

விடை : ஒரு மேஜையின்மேல் 3 தீக்குச்சிகளை ஒரு முக்கோண வடிவமாக அமைக்கவும்; மீதி மூன்றைக் கொண்டு, படத்தில் காட்டியுள்ளபடி கூர் நுதிக் - கோபுரம் ஒன்றைப் பூர்த்தி செய்யவும்.



இத்தகைய பிரசினைகள் அறிவைத் தூண்டுவது மன்றி, ஓய்வு நேரங்களில் மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் அளிக்கின்றன. ஆனால், பொருளாதாரப் பாதுகாப்பைப்பற்றிய மிகத் தீவிரமான பிரசினையும் இருக்கிறது. இப் பிரசினையினால் நீர் சஞ்சலம் எதுவும் அடைய வேண்டியதில்லை: ஏனெனில் திட்டம் போட்டுச்

சேமிப்பதனால் நீர் இப்பிரசினையைத் தீர்க்க முடியும். நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளையும் ஸ்டாம்புகளையும் வாங்கி அதன் மூலமாய்த் தங்கள் பணத்தை வட்டிக்குப் போட்டு வைப்பவர்களின் கூட்டத்தில் நீர் சேர்ந்தால் வருஷந்தோறும் உம்முடைய சேமநிதி பெருகிக்கொண்டே வருவது மல்லாமல், உமக்குரிய பாதுகாப்பும் அதிகமாகிக் கொண்டே வரும். மேலே கண்டபடி செய்பவர்கள் தொகை நாளுக்குநாள் பெருகிக் கொண்டே வருகிறது. நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள் பணத்தை வட்டிக்குப் போட்டு வைப்பதற்குரிய மிகச் சிறந்த சாதனமாகும். அவைகளிலிருந்து அதிகபட்ச லாபம் கிடைப்பதோடு, அவைகளில் போட்டுவைத்த பணம் மிகப் பத்திரமாகவும் இருக்கிறது.

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்

இவை முக்கியமான அனுகூலங்களாகும் :—

1. நீர் நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை 5, 10, 50, 100, 500, 1,000 அல்லது 5,000 ரூபாய்க்கு வாங்கலாம்.

2. ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களுள் ஒவ்வொருவரும் (அவர் பெரியவராயிருந்தாலுஞ்சரி மைனராயிருந்தாலுஞ்சரி) 5,000 ரூபாய் வரையில் வாங்க முடியும். இரண்டு பேர் கூட்டாக 10,000 ரூபாய் வரையில் வாங்கலாம்.

3. இவைகளின் மதிப்பு 12 வருஷங்களில் 50 சத விதம் உயருகிறது. வட்டிக்குப் போட்டு வைக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாயும் ஒன்றரை ரூபாய் ஆகிவிடுகிறது. இது ...தொரு கவர்ன்மென்ட் பத்திரத்தின் ...மல் கிடைக்கக்கூடிய மிக உயர்ந்த ...ட்டியாகும்.

4. சம்பாதிக்கப்பட்ட வட்டிக்கு இன்கம் ...க்ஸ் செலுத்த வேண்டியதில்லை.

5. இவைகளை 2 வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட்டுகள் விஷயத்தில், 18 மாதங்களுக்குப் பிறகு) ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம்.

6. சிறு தொகைகளைச் சேர்த்து வைப்பவர்கள் 1 ரூபாய், 8 அணா அல்லது 4 அணாவுக்கு ஸேவிங்ஸ் ஸ்டாம்புகள் வாங்கலாம். இப்படி வாங்கிச் சேர்த்து வைக்கப்பட்ட ஸ்டாம்புகளின் மதிப்பு 5 ரூபாயானதும், அவைகளைக் கொடுத்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக ஒரு ஸெர்டிபிகேட் பெற்றுக் கொள்ளலாம்.

7. இந்த ஸெர்டிபிகேட்டுகள், ஸ்டாம்புகள் ஆகிய இரண்டையும் தபாலாபிஸுகளிலாவது கவர்ன்மென்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜென்டுகளிடமாவது ஸேவிங்ஸ் பீரோக்களிலாவது பெற்றுக் கொள்ளலாம்.

...ம்முடைய ஸேவிங்ஸ் க்ரூப்பில் இப்போதே சேரவும் !

AC-917M

ஆடை அணிவகுப்பில் இப்பொழுது அதிகம் அடிபடுவது

காலத்துக்கு தகுந்த பாஷனாக எல்லா நெம்பர் நூல், நிறம், பாட்டர்ன், அதிக நேர்த்தியாய் நெசவு செய்த துணிகள் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கத்தாரால் மதருஸ் மாகாணம் பூராவும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

ஜாஸ்தி சக்தியால் ஓட்டப்படும் யந்திரங்களைக் கொண்டு, பெருவாரியாக உண்டாக்கும் மில் துணிகளைவிட, கைத்றி சரக்குகளுக்கு பலம் நீடித்த உழைப்பு அழகு நேர்த்தி, உபயோகம் மென்மை மிகவும் அதிகம்.

மதருஸ் கூட்டுறவு கைத்துணிகள், சங்கத்தின், மதருஸ் மற்ற ஊர்களி லிருந்து நேராக குறிப்பிட்ட கருர் விலையில் விற்பனை செய்யப்படுவதால், நடுவி லிருக்கும் வியாபாரிகளின் லாபத்தை அகற்ற சாத்தியமாகிறது. ஆகவே, எங் களிடம் சாமான்கள் வாங்குவதால், உங்கள் பணம் மீதமடையும், கஷ்டமுமில்லை

வேஷ்டிகள், புடவைகள், சட்டைகள், டவல்கள், பிரி ன்ட்ஸ், சிங்கம்ஸ், சின்ட்ஸ், வீடு அலங்கரிக்கத் துணிகள், மேஜைத் துணிகள், படுக்கை விரிப்புகள், கைக்குட்டை கள், லுங்கிகள், அங்கவஸ்திரங்கள், கொசுவலைகள், க்வில்ட்ஸ், தலையணிகள்.

மதராஸ் கோவாபரேடிவ் கைத்தறி ஜவுளிகள்

கட்டுப்பாடு விலைகளில் புதிய சரக்குகள்

மதராஸ் ஹான்லூம் வீவர்ஸ் புரோவின்ஷியல் கோவாபரேடிவ் ஸொஸைடி லிட்., 6-A உட்ஸ் ரோடு, மௌண்ட் ரோடு, மதராஸ்.

இந்தியன் பாங்கு லிமிடெட்

தலைமை ஆபீஸ்: 'இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்'

தார்த் பீச் ரோடு : : மதராஸ்

சென்னை ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட் — திருவல்லிக்கேணி
மயிலாப்பூர் — தியாகராயநகர்
புரசவாக்கம் — மவுண்டுரோடு
எக்மோர்

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களுமுள்ளன.

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 69,96,600
செலுத்தப்பட்ட ,, ,, 50,79,613
ரிஸர்வ் நிதி ,, 56,87,200

டிபாஸிட்டுகள் ரூ. 17 கோடிக்கு அதிகம்

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விபரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர், செக்ரடரி

IBN 101

வசந்தம் சந்தா

வருஷ சந்தா	ரூ.	6—0—0
ஆறுமாத சந்தா	ரூ.	3—0—0
தனிப்பிரதி	ரூ.	0—8—0

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

மானேஜர்:—

வசந்தம் காரியாலயம்,
திருச்சிரோட், கோயமுத்தூர்.

வசந்தம்

மலர் 5	விய ௵ மார்கழி ௴	இதழ் 9

பொருளடக்கம்

மலர் மணம்	...	1
நாணயம் வேண்டும்	ரா. நா	3
ஆனந்தரங்கம் பிள்ளை	சர். ஆர். கே. எஸ்.	5
தாக சாந்தி	கு. ப. சேது அம்மாள்	8
இசைக் கலை	அ. கிருஷ்ணசாமி நாயுடு	14
மல்லிகை மொக்கு	தா. நாகலிங்கம்	17
பழமொழிகள்	அ. கிருஷ்ணமூர்த்தி	27
காதல் கடிதம்	கே. சீனிவாசன்	33
நமஸ்காரம்	'தானு'	35
தேன் கூடு	கே. சி. எஸ். அருணாசலம்	36
மாணிக்கம்	டி. சி. ராமசாமி	41
கலையும் ரசிகரும்	ரா. சு. மணி	52
தூய்மைச் சித்திரம்	பி. கணபதி சுப்ரமணியம்	54
காதற் கதை	ஆர். ஆறுமுகம்	62
நாகாநந்தினி	சி. கண்ணன்	69
ரோஜாவும் மல்லிகையும்	'தேவிகா'	76
மலர்ந்த மலர்	...	79
தீராத பிரச்னை	சி. சாந்தப்பன்	80

'வசந்த'த்தில் வெளிவரும் கதைகளில் காணப்படும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

[ஸ்தாபிதம் : 1906]

தமிழ் நாட்டின் தலை சிறந்த இன்ஷூரன்ஸ் கம்பெனி. மக்கள் நல்வாழ்வே அடிப்படை லட்சியமாகக் கொண்டது. இன்ஷூர் செய்வதற்கோ, பிரதிநிதியாக இருப்பதற்கோ ஏற்ற கம்பெனி.

பொருளாதார புள்ளி விவரங்கள்:

1945-ல் புது பாலிஸிகளுடைய பிரிமியம்	17,48,590
பழைய பாலிஸிகளின் பிரிமியம்:	48,04,520
இன்ஷூர் செய்தவர்களின் நடைமுறையிலிருக்கும் மொத்த தொகை	13,98,54,180
மொத்தம் செலுத்தப்பட்ட தொகை:	1,16,24,880

இந்தியாவெங்கிலும், வெளியிலும், கிளைக் காரியாலயங்களும் பிரதிநிதிகளும் இருக்கிறார்கள்.

யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்,
எஸ்பிளனேட், சென்னை.

கோவை கிளை ஆபீஸ்:

அவினாசிரோடு :: கோயமுத்தூர்

வசந்தம்

கௌரவ ஆசிரியர்கள்:
டி. கே. சிதம்பரநாத முதலியார். சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்.

நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான் — கம்பர்

மணமணம்

ஆசிரியர்

முகப்பை அலங்கரிப்பவர் திரு. ஆனந்தரங்கம் பிள்ளை அவர்கள்.

திரு. பிள்ளை அவர்களைப் பற்றி சர். ஆர். கே. எஸ். அவர்கள் அருமையான கட்டுரை ஒன்று அளித்திருக்கின்றார்கள்.

தமிழில் கவிஞர்கள் தொகை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இப்போது எல்லாப் பத்திரிகைகளும் கவிதைக்கு முக்கியத்துவம் அளித்து வருகின்றன. மக்கள் ரசனை உயர்ந்து வருகிறதென்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. 'காதற் கடித'த்தின் கவிஞர் கே. ஸ்ரீனிவாசன் அவர்கள், கவிஞர் மட்டுமல்ல! நாடகாசிரியர்; நாவலாசிரியர். ஆராய்ச்சிக் கட்டுரை ஆசிரியரும் கூட. ஆனால், ஆங்கில இலக்கிய உலகிலே எண்ணங்களைத் திளைக்க விட்ட அன்பர்

ஸ்ரீனிவாசன் இப்போது தமிழில் தொடங்கியுள்ள முதல் முயற்சி இது. முதல் கவிதையே என்ருலும் அன்று அலர்ந்த புது மலரின் மணமும், தமிழ்ப் பாங்கும் அதில் வாசமுடன் விசுகிறது.

சகோதரி சேது அம்மாள், கனிவு ததும்பும் நடையில், புத்த போதத்தின் உருக்கமான நிகழ்ச்சிகளை உதவி வருகிருர்.

சென்ற ஆடிமாத 'வசந்த' இதழில் 'கலேயும் கவர்ச்சியும்' என்ற தலைப்பில் ரா. நா. அவர்கள் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதன் எதிரொலிதான் ரா. சு. மணி இந்த இதழில் எழுதியிருக்கும் 'கலேயும் ரசிகரும்' என்ற இனிய கட்டுரை. கலேயையும் அதன் லக்ஷியத்தையும் ஆசிரியர் நல்ல முறையில் விளக்கியிருக்கிருர் அக் கட்டுரையில்.

தூய்மையின் எழிலே ஒரு அழகிய சொல்லோவியமாகத் தீட்டியிருக்கிருர் பி. கணபதி சுப்பிரமணியம், தமது தூய்மைச் சித்திரத்தில். இரண்டு கலேஞர்களின் உள்ள உணர்ச்சிகளைச் சித்திரிக்கும் இக்கதை சுவைத்துப் படிக்கக் கூடியது.

ஒரு அப்பாவி ஏழைக் குமாஸ்தாவின் சோக வாழ்க்கையை அழகாகப் படம் பிடித்துக்காட்டுகிருர், இளம்சொற்சிற்பி சி. சாந்தப்பன், 'தீராத பிரச்னே' என்ற சிறுகதையில்.

இந்த இதழில் வெளிவந்திருக்கும் 'தேன்கூடு' கே. சி. எஸ். அருணசலத்தின் ஒரு புது முயற்சி. கவிஞர் கற்பனைத் திறனும், இனிய எளிய சொல்லாட்சியும் இப்புது முயற்சியில் கை கோர்த்துக் களிநடம் புரிவதைக் காணலாம்.

வித்வான் அ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பழமொழி ஆராய்ச்சியில் இறங்கி, சில நல்ல கருத்துக்களை வெளியிட்டிருக்கிருர். அறிஞர் கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் 'இசைக்கலே'பற்றிய ஒரு சுவையான இலக்கிய ஆராய்ச்சி செய்கிருர்.

பலர் வெகு நாட்களாக ஆர்வமுடன் எதிர்பார்த்த சர். ஆர். கே. எஸ். அவர்களின் சிலப்பதிகாரக் கட்டுரைகள் (மதுரைக் காண்டம்) அடுத்த இதழிலிருந்து ஆரம்பமாகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிருேம்.

197249

நாணயம் வேண்டும்

ரா. நா.

நாணயங்கள் குறையக் குறைய, நாணயத்திற்குள்ள மதிப்பும் குறைந்து வருகிறது. பணம் என்றால் நோட்டுக்கள்தான் தென்படுகின்றன. தப்பித் தவறி நாணயங்கள் தென்பட்டால் அசல் வெள்ளியைப் பார்ப்பது அரிதாகி விட்டது. இதற்கும் நாணயம் என்கிற குணம் அரிதாவதற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கலாம். நாணயங்களை ஏராளமாகப் பெறும் ஆவலில் நாணயத்தை இழந்து விடுகிறார்கள். "நாணயமாயிருக்கிறவர்களுக்கு இது காலமில்லை'' என்கிற மயக்கம் ஏற்பட்டு நல்லவர்கள்கூட தங்கள் மதிப்பைக் கைவிடத் தொடங்கிவிட்டார்கள்.

சமீபத்தில் தமிழர் பண்பைப் பற்றி ஒரு தலைவர் பேசினார். "தமிழரிடம் பல புது நோய்கள் இடம் பெற்று விட்டன. துவேஷம் குரோதம் இரண்டும் மலிந்துவிட்டன. பண ஆசை அதிகரித்து விட்டது. அதற்காகப் பொய் சொல்கிறார்கள். தகாத முறையில் பணம் சம்பாதிக்க விரும்புகிறார்கள்'' எனப் பிரலாபித்தார். "இதைச் சீக்கிரம் களைந்தெறியாவிட்டால் தமிழர் பண்பாடு பாழ்பட்டுவிடும்'' என எச்சரிக்கை செய்தார்.

நாணயம் எனும் குணம் நம் உயிர். ஆனால் மேனாட்டில் நாணயம் ஒரு நல்ல தந்திரம் என்று கருதுகிறார்கள். நாளடைவில் நாணயமாயிருப்பது லாபம் இல்லாவிட்டால் நஷ்டம் என்பது அவர்கள் சித்தாந்தம். நாணயத்தை தந்திரம் என்கிற முறையில் கையாள்வது கூட பிரிட்டனில் குறைந்து வருகிறது என்று வருந்துகிறார் ஒரு மேனாட்டு ஆசிரியர். "பத்து வருஷங்களுக்கு முன் ஒரு கடைக்குப் போய் அங்கு நம்முடைய குடையையோ பவுண்டன் பேனாவையோ வைத்து மறந்து விட்டால், நாம் வீடு திரும்புதற்குள் மறந்துபோன சாமான் வீட்டிற்குத் திரும்பி வந்துவிடும். ஆனால் இப்பொழுது ஒரு பேனாக் கத்தியை வைத்து விட்டு மறந்து விட்டாலும் திரும்பி வருவதில்லை.

நாம் திரும்பிப்போய்ப் பார்த்தாலும் அது அங்கிருப்பதில்லை'' என்று கூறி 'நாணயம் ஒரு நல்ல தந்திரம் என்பதைக் கூட நாம் மறந்துவிட வேண்டுமா' என்று அங்கலாய்க்கிறார் இந்த ஆங்கிலேய ஆசிரியர்.

நம் நாட்டிலே பாதரட்சைகள் காணமற் போவதும், குடைகள் காணமற் போவதும் சர்வ சகஜமாகப் போய் விட்டன. தேவை மிகுந்திருப்பதனல் நாணயக் குறைவான செய்கைகள் நடக்கின்றன என்றும் கூறி விடுவதற்கில்லை. ஏழ்மைக்கும் திருட்டிற்கும் சம்பந்தமில்லை. எவ்வளவோ ஏழைகள் புண்ணிய பாவத்திற்கஞ்சி எல்லாம் 'தலைவிதி' என்று தங்களுக்கு வரும் கஷ்டத்தை மௌனமாக அனுபவிக்கிருர்கள்.

ஆனல் பணக்காரர்களில் சிலர் தங்களுடைய சுகபோகங்களை இழப்பதற்கஞ்சி, தகாத காரியங்கள் செய்து தங்களுடைய அசாதாரணத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுகிருர்கள். யுத்தத்திற்கு முன்னல் நமக்குக் கிடைத்து வந்த பண்டங்கள் இப்பொழுது கிடைப்பதில்லை. உயிரைக் காப்பதற்கான பொருள்களை வைத்துக் கொண்டு வாழ்வதற்கு அவர்கள் தயாராயில்லை. பணம் பத்தும் தரும் என்று தங்கள் பணத்தை செலவழித்து தகாத முறையில் தங்களுக்கு வேண்டுவன செய்து கொள்கிருர்கள்.

கள்ள மார்க்கெட் என்று கருதுகிறோம். கள்ள மார்க்கெட்டில் சரக்கு வாங்க ஆள் இல்லாவிட்டால் கள்ள மார்க்கெட் வியாபாரம் எப்படி ஓங்கும்? ஒருபுறம் கள்ள மார்க்கெட்டைத் தண்ணீர் ஊற்றி வளர்த்து விட்டு மற்ருெருபுறம் 'கள்ள மார்க்கெட் ஒழிக' என்று கோஷமும் செய்கிறோம்.

கேவலம் உடலை வளர்க்கும் பழக்கங்களில் ஈடுபட வேண்டாம் என்று நம் முன்னோர்கள் போதித்து வந்தார்கள். அந்த போதனையை நாம் கவனித்துக் கைப் பிடித்து வந்திருந்தால் இன்று நம் நாணயம் இவ்வளவு கேவலமான நிலைமைக்கு வந்திருக்குமா?

நம்மை நாமே கெடுத்துக் கொள்வதுடன் சமூகத்தையும் பாழ்படுத்துகிறோம். தகாத செயல்களினல். பணம் சம்பாதிக்கிறோம். எவ்வளவு சம்பாதித்தால் போதும் என்கிற நிர்ணயம் கிடையாது. கிடைத்தமட்டில் லாபம்தான் என்று மேலும் பண வேட்டையில் ஈடுபடுகிறோம். சரி பணமிருந்து அதனல் நமக்கோ, சமூகத்தாருக்கோ பிரயோசனப்படாவிட்டால் அது பிணத்திற்கு சமானம் என்கிற ஞானம் வருவதில்லை. அளவுக்கு மேல் அமிர்தமும் நஞ்சாகும் என்கிற ஞானம் வந்தால் சமூகத்தில் சீர்கேடுகள் ஏற்படாது. இந்த ஞானம் வந்தால் நாம் வேறெதற்கும் அஞ்ச வேண்டாம்.

★

ஆனந்தரங்கம் பிள்ளை

...சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்...

மேல் நாட்டு மக்களுக்குத் தினக் குறிப்பு (டயரி) எழுதி வைக்கும் வழக்கம் வெகு நாளாய் உண்டு. அனேக எழுத்தாளர்களும் அரசியல் வாதிகளும் எழுதி வைத்த தினக்குறிப்புகள் வெளியிடப் பட்டிருக்கின்றன. நாள்தோறும் தங்கள் வாழ்க்கையில் நேர்ந்த முக்கிய நிகழ்ச்சிகளைப் பற்றியும், தாங்கள் கண்டதும் கேட்டதுமான பல செய்திகளைப்பற்றியும் இவர்கள் அன்றாடு எழுதி வைப்பதை ஒரு வழக்கமாகக் கையாடி வருகின்றார்கள். இப்படி எழுதிவைக்கப்பட்ட தினக் குறிப்புகளில் சிலவற்றை சிறந்த இலக்கியமாகக் கருதி நாம் படிக்கின்றோம். மற்றும் சில தினக்குறிப்புகள் சரித்திர ஆராய்ச்சிக்கு அடிப்படையாகவும் பயன்படுகின்றன.

தினக்குறிப்பு எழுதும் வழக்கம் நம்மவர்களுக்கு இல்லையென்றே சொல்லலாம். சுமார் 200 வருடங்களுக்கு முன் வாழ்ந்த ஒரு தமிழ் வர்த்தகர் இந்த வழக்கத்தைக் கையாடி வந்தார் என்பது ஆச்சரியமென்றே சொல்ல வேண்டும். இந்த வர்த்தகர் பெயர் ஆனந்தரங்கம் பிள்ளை. இவர் புதுச்சேரியில் பிரெஞ்சு கவர்னரின் முக்கிய காரியஸ்தராயிருந்தவர். இவர் 1736ம் ஆண்டு முதல் 1760ம் ஆண்டு வரையில் ஒரு தினக் குறிப்பு தமிழில் எழுதி வைத்துக் கொண்டிருந்தார். இந்தக் குறிப்பில் இவர் பல நிகழ்ச்சிகளையும் அவைகளைப் பற்றிய தனது அபிப்பிராயங்களையும் ஒளிவு மறைவில்லாமல் எழுதி வைத்திருக்கிறார். இந்தக் குறிப்புப் புத்தகங்களைப் பற்றி வெகு காலமாக யாருக்கும் ஒன்றுமே தெரியாமலிருந்தது. 1846ம் ஆண்டில் ஒரு பிரன்ச்சுக் கலைஞருடைய முயற்சியால் இந்தக் குறிப்புகள் வெளியாயின. இவைகளில் பல அரிய சரித்திர நிகழ்ச்சிகள் அடங்கியிருக்கின்றன என்று தெரிந்ததும், சென்னை அரசாங்கத்தார் இவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து பனிரெண்டு புத்தகங்களாக வெளியிட்டிருக்கின்றனர்.

குறிப்பு, நள வருஷம் ஆவணி மாதம் 25ம் தேதி (1736ம் வருஷம் செப்டம்பர் மாதம் 6ம் தேதி) ஆரம்பமாகின்றது. "என் காதால் கேட்ட செய்திகளையும், என் கண்ணால் கண்ட நிகழ்ச்சிகளையும் நான் குறிக்கத் தொடங்குகின்றேன். கப்பல் போக்கு வரவுகளைப் பற்றியும், அதிசயமானதும் நூதனமானதுமான சம்பவங்

களைக் குறிக்கின்றேன்" என்ற சிறிய முகவுரையுடன் ஆனந்தரங்கம்பிள்ளை தன் தினக்குறிப்பை ஆரம்பிக்கிறார்.

ஆனந்தரங்கம் பிள்ளை 1709ம் ஆண்டு மார்ச் மாதம் 30ம் தேதி சென்னையைச் சேர்ந்த பெரம்பூரில் பிறந்தார். இவருடைய தகப்பனார் திருவேங்கடம் பிள்ளை ஒரு வர்த்தகர். தன் மைத்துனர் நைனியப்ப பிள்ளையின் தூண்டுதலால், திருவேங்கடம் பிள்ளை தன் குடும்பத்துடன் 1716ம் வருஷத்தில் புதுச்சேரிக்குக் குடியேறினர். நைனியப்ப பிள்ளை புதுச்சேரியில் ஒரு பிரபல வர்த்தகர். பிரன்ச்சு அரசாங்கத்தார் இவருக்கு "முதலியார்" என்ற பட்டத்தைக் கொடுத்திருந்தனர். முதன்மையாக இருக்கும் குடிகளுக்கு "முதலியார்" என்று பட்டம் கொடுப்பது அக்காலத்தில் வழக்கமாயிருந்தது.

தானப்ப முதலியார் என்னும் ஒரு பெரிய வர்த்தகர் புதுச்சேரியில் பிரன்ச்சு வர்த்தகக் கம்பெனியின் முக்கிய காரியஸ்தராயிருந்தார். இவர் கிருஸ்தவ சமயத்தைச் சேர்ந்தவர். இவருக்கும் புதுச்சேரி கவர்னருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டதால், இவருடைய ஸ்தானத்தில் நைனியப்ப பிள்ளை முக்கிய காரியஸ்தராக நியமிக்கப் பட்டார். இந்த ஏற்பாடு புதுச்சேரியிலுள்ள கிருஸ்தவப் பாதிரிமார்களுக்குப் பிடிக்கவில்லை. ஒரு இந்து முக்கிய காரியஸ்தனுயிருந்தால், தங்களுடைய பிரசார வேலைக்கு இடையூறாய் இருக்குமென்று நினைத்து, பாதிரிமார்கள் சூழ்ச்சி செய்து நைனியப்ப பிள்ளையை வேலையை விட்டு நீக்கும்படி செய்தார்கள். இது மட்டுமல்லாமல், பிள்ளையின் மேல் பொய்க் குற்றங்களைச் சாட்டி அவரைச் சிறைக்கும் அனுப்பி வைத்தார்கள். பிள்ளையின் சொத்துக்களும் கவர்னரால் பறிமுதல் செய்யப்பட்டன. நைனியப்ப பிள்ளையும் மனமுடைந்து சிறையில் மரணமடைந்தார்.

நைனியப்ப பிள்ளையின் மகன் குருவப்ப பிள்ளை தன் தந்தைக்கு ஏற்பட்ட அவமானத்திற்கும் சொத்து நஷ்டத்திற்கும் பரிகாரம் தேட பிரான்சு தேசத்தின் அரசனிடம் நேரில் முறையிடுவதென்று தீர்மானித்து 1719ம் வருஷத்தில் கப்பலேறி பிரான்சுக்குச் சென்றான். அந்த தேசத்தில் இவனுக்கு நல்ல வரவேற்புக் கிடைத்ததல்லாமல், அரசனுடைய பேட்டியும் எளிதில் கிடைத்தது. வந்த காரியமும் வெற்றி பெற்றது. பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களை குருவப்ப பிள்ளைக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றும் குருவப்ப பிள்ளையை முக்கிய காரியஸ்தனுக நியமிக்க வேண்டுமென்றும் அரசன் உத்திரவிட்டான். எப்படியோ பிரன்ச்சு தேசத்து அரசனுக்கு குருவப்ப பிள்ளையின் மேல் மிகுந்த அபிமானம் ஏற்பட்டு விட்டது. குருவப்ப பிள்ளையும் அரசன் முன்னிலையில் கிருஸ்தவ சமயத்தைத் தழுவினன். பட்டத்தையும் இழந்த சொத்தையும் பெற்று குருவப்ப பிள்ளை முக்கிய காரியஸ்தனுக புதுச்சேரிக்கு 1722ம் ஆண்டு திரும்பினன். புதுச்சேரிக்கு வந்ததும், தன்னுடைய மாமன் திருவேங்கடம் பிள்ளையை உதவிக் காரியஸ்தனுக நியமித்து, இருவரும் வெகு செல்வாக்குடன் காரியங்களை நடத்தி வந்தார்கள். இரண்டு வருஷத்தில் குருவப்ப பிள்ளை மரணமடைந்தான். அதற்குப்பின் கொஞ்சம் நாளில் திரு

வேங்கடம் பிள்ளையும் காலமானார்.

தன் தகப்பனார் திருவேங்கடம் பிள்ளை காலமான போது ஆனந்த ரங்கம்பிள்ளைக்கு வயது பதினாறு. மாமனுடைய ஸ்தானத்திற்காவது அல்லது தகப்பனுடைய ஸ்தானத்திற்காவது வருவதற்கு வயது போதாது. பெரிய குடும்பத்தின் பாரமும் தன் மேல் விழுந்தது. சொந்தமாக வியாபாரம் ஆரம்பித்து நடத்தி வந்தார். ஆனந்த ரங்கம்பிள்ளைக்கு தமிழ் இலக்கிய அறிவு கொஞ்சமுண்டு. வியாபார முறைக்கு வேண்டிய 'கணக்கு வளக்கு'ம் நன்றாய்த் தெரிந்தவர். நாளடைவில் பிரன்ச் பாஷையைப் பேசுவதற்கும் படிப்பதற்கும் நன்றாய்த் தெரிந்து கொண்டார்.

இந்தச் சமயத்தில் கனகராய முதலி என்பவன் முக்கிய காரியஸ்தனாயிருந்த போதிலும், புதுச்சேரி கவர்னருக்கு ஆனந்தரங்கம் பிள்ளையைப் பற்றி ரொம்பவும் நல்ல அபிப்பிராயம் உண்டாயிற்று. ரங்கம்பிள்ளையின் வர்த்தகமும் நாளுக்கு நாள் அபிவிருத்தியடைந்தது. கைத்தறிகளில் நெசவு செய்யப்பட்ட காலிகோ என்னும் துணி, வெளி நாடுகளில் ஏராளமாய் அச்சமயம் செலாவணியாய்க் கொண்டிருந்தது. ஆர்க்காட்டுக்கு அடுத்த லாலாபேட்டையில் கைத்தறி நெசவுச் சாலை ஒன்றை ரங்கம்பிள்ளை ஏற்பாடு செய்து தன்னுடைய தொழிலை மிகவும் அபிவிருத்தி செய்து வந்தார். 1742ம் ஆண்டு டூப்ளே என்பவர் புதுச்சேரி கவர்னராய் நியமிக்கப்பட்டார். இவருக்கும் ஆனந்தரங்கம்பிள்ளைக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. 1746ம் வருஷம் முக்கிய காரியஸ்தனாயிருந்த கனகராய முதலி இறந்து விடவே, ரங்கம்பிள்ளையை அந்த ஸ்தானத்துக்கு டூப்ளே நியமித்தார்.

ஆனந்தரங்கம்பிள்ளையின் செல்வாக்கு மேலும் மேலும் ஓங்கி வளர்ந்தது. செங்கல்பட்டு கோட்டையின் தளகர்த்தராகவும் ஜாகீர்தாராகவும் நியமிக்கப்பட்டார். கர்நாடக தேசத்து நவாப் இவருக்கு "மான் சப்தார்" என்ற பட்டத்தைக் கொடுத்து, 3000 குதிரை வீரர் அடங்கிய படையை வைத்துக் கொள்ளும் அதிகாரத்தையும் கொடுத்தார். பிள்ளை அவர்களின் கீர்த்தி எங்கும் பரவிற்று.

டூப்ளே புதுச்சேரி கவர்னர் ஸ்தானத்திலிருந்து போனது முதல் ரங்கம்பிள்ளையின் செல்வாக்கும் குறைந்து கொண்டே வந்தது. 1756ம் வருஷம் உத்தியோகத்தையும் இழந்தார். நாளுக்கு நாள் இவருடைய உடல் நிலையும் கெட்டது. 1761ம் ஆண்டு ஜனவரி மாதம் 12ம் தேதி ரங்கம்பிள்ளை காலமடைந்தார். இவர் காலமடைந்த நான்கு நாட்களுக்குப் பின் ஆங்கிலேயர் புதுச்சேரியை பிரன்சுக் கம்பெனியிடமிருந்து சண்டையில் கைப்பற்றினர். ரங்கம்பிள்ளை இறக்கும் பொழுது அவருக்குச் சந்ததி ஒன்றுமில்லை. இரண்டு மக்கள் அவருக்கு முன்னமே காலமடைந்து விட்டனர்.

ஆனந்தரங்கம்பிள்ளையின் தினக் குறிப்பு ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. தமிழில் இவர் எழுதிய குறிப்பின் ஒரு தொகுதியாவது இவர் எழுதி வைத்த படியே பதிப்பிக்கப் பட்டால் விசேஷமாயிருக்கும்.

தாகசாந்தி

கு. ப. சேது அம்மாள்

“யசோதரா, யசோதரா!”

கதவு தட்டும் சத்தமும், தொடர்ந்து சீலவதியின் குரலுமாக தூக்கத்திலிருந்த யசோதரையை எழுப்பின.

கண் விழித்து எழுந்துட்கார்ந்த யசோதரை திடுக்கிட்டாள். உதய சூரியன் உப்பரிகையின் உயரத்திற்கு வந்து விட்டான்! பரபரப்புடன் எழுந்து வந்து கதவைத் திறந்தாள் யசோதரை.

உள்ளே புகுந்த சீலவதி தலையோடு காலாக ஒருதரம் யசோதரையின் ஆகிருதியை ஏற இறங்கப் பார்த்தாள்.

மௌனமாகத் தலையை ஆட்டியபடி சிரித்துக் கொண்டாள்!

பிறகு, “சரி, தந்தையார் உன்னைக் காண விரும்புகிறார்......”

“எங்கே? இங்கே வந்திருக்கிறாரா?” என்று அயர்ந்த குரலில் கேட்டாள் யசோதரை.

“இல்லை, இல்லை! அங்கே உன்னை அழைத்து வரச் சொல்லி உத்தரவு அனுப்பி இருக்கிறார்!”

“இதோ, ஸ்நானம் செய்து விட்டுப் போவோம். சற்று இரு.”

“உம், உம், இருக்கிறேன்! ஸ்நானம் செய்து முகத்தைத் அலம்பி விட்டால் எல்லாம் போய் விடுமோ? அப்பா! ஸ்திரீ ஜாதியே மாய் மாலத்திற்கென்று பிரசித்தமாகி விட்டது உண்மைதான்—சொல்கிறார்களே, ஆண்களை தூஷித்து என்ன பயன்? ஊம், போ, போ, நாழிகை யாகிறது.”

“சீலா, நீ ரொம்ப தூரம் போகிறாய்........”

“இல்லவே இல்லை! உன் கிட்டத்தில்தான் இருக்கிறேன். இரவு பூரா நீ மயங்கிக் கிடந்ததை கதவிடுக்கின் வழியாகப் பார்த்துக் கொண்டே தானிருந்தேன்! உன் நினைவைக் கலைக்கக் கூடாது; கலைத்தால் மகா பாவமாயிற்றே என்று பேசாமலிருந்தேன்.....”

“சீச்சீ. மூடு வாயை, முஞ்சியைப் பார்!”

“ஏனோ உள்ளதைச் சொன்னால் உனக்கே னிவ்வளவு பொத்துக் கொண்டு வருகிறது? ஒரு இரவில் உடம்பு பழம் பிழிந்தது போல ஆகிவிட்டது! ராஜகுமாரனுடைய கண் வெட்டு சரியான வேலை செய்திருக்கிறது! போ. சீக்கிரமாக நீராடி விட்டு வா. காத்

திருப்பார் உன் பிதா அங்கு உனக்காக!''

"முன்னமேயே எழுப்புவதற்கென்னடீ, இவ்வளவு நாழி என்ன செய்தாய்?'' என்று சீலவதியை அதிகாரம் செய்து விட்டு அங்கிருந்து போனுள் யசோதரை, சீலவதியின் பதிலைக்கூட காதில் வாங்காமல்.

சென்று ஜிலு ஜிலு வென்று குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்து விட்டு, ஆடையணிந்து கொண்டு, திலகமிட்டுக் கொள்வதற்காக நிலைக் கண்ணுடியின் முன்பு நின்று தன்னைப் பார்த்த பொழுது தூக்கி வாரிப்போட்டது அவளுக்கு.

முகத்திலும், கண்களிலுமிருந்த மருட்சியும், சோர்வும் அகத்துணர்வை பறையடித்தது. பிதா கேட்டால் என்ன பதில் சொல்லுவது? என்ற பீதியில் கண்களின் கடைகளும் கன்னத்திலும் சிவப்பேறிற்று. உடல் துடித்தது.

துடித்து என்ன செய்கிறது? மனதை திடப்படுத்திக்கொண்டு நெற்றிக்கு இட்டுக் கொண்டாள். பிதாவுக்கு பதில் சொல்லவேண்டி வந்தால் என்ன சொல்வது என்று சிந்தித்துக் கொண்டே தகப்பனுருடைய இருப்பிடத்திற்குச் செல்ல ஆயத்தமாக வந்தாள்.

அதேசமயம், ஏன் இவ்வளவு நாழியாகியும்கூட தம் குமாரியை வரக் காணவில்லை யென்று அவரே யசோதரையின் மாளிகைக்கு வந்து கொண்டிருந்ததைக் கண்டாள் சீலவதி. "அதோ பார் யசோதரா, மன்னரே உன்னைத் தேடிக் கொண்டு வந்துவிட்டார். நீ செல்லு முன்பாக'' என்று முன் சென்று சுப்ரபுத்த மன்னரை அழைத்துக் கொண்டு வந்தாள் அவள்.

இரு கைகளையும் குவித்துக் கொண்டு வினயத்தோடு அமரிக்கையாக நடந்துவரும் தமது குமாரியைப் பார்த்த வண்ணமே நின்ருர் சுப்ரபுத்தன்.

அருகில் வந்து நின்று சிரம் குனிந்து வணங்கினுள் யசோதரை காணும் தோறும், களிப்பூட்டும் கட்டழகி யசோதரையை அழைத்து தம்மிரு கைகளாலும் குவித்திருந்த அவளுடைய தாமரை மொட்டுப் போன்ற கையை முத்தமிட எண்ணி அதைப் பற்றியவுடன் அப்படியே ஸ்தம்பித்து நின்ருர்.

கைகள் தாமாக அவள் கைகளை சோரவிட்டன. மறுபடியும் ஏதோஎண்ணம் தோன்றியவராக யசோதரையின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தார். க்ஷண மாத்திரத்தில் அவருடைய முகத்தில் கவலை படர்ந்து விட்டதைக் கண்ட சீலவதி முன் வந்து வணங்கி, "மகாராஜருக்கு மங்களமுண்டாகுக! சஞ்சலம் வேண்டாம். யசோதரை சௌக்யமாகவே இருக்கிருள்!'' என்ருள் துணிச்சலாக.

"சௌக்யமாக இருக்கிருளா? என்ன சொல்லுகிருய் சீலவதி நீ?''

"ஒன்றும் பயப்பட அவசியமில்லை, மஹாராஜா! நேற்றிரவு எங்களிருவருக்கும் தூக்கமே வரவில்லை. மேன் மாடத்து நிலவொளியில் உலாவியபடியே நேற்றைய மகோற்சவத்தைப் பற்றி பேசிக் கொண்டிருந்தோம் வெகு நேரம்வரையில். அந்த சீதளத்தால் ராஜகுமாரிக்கு லேசாக நீர் கொண்டிருக்கிறது. அவ்வளவு தான். வேறு ஒன்றுமில்லை!''

"நல்லவேளை தேகத்தில் சூடு கண்டிருக்கிறதே என்று அச்ச

மடைந்து விட்டேன். வா யசோதரா, இப்படி உட்கார் என் சமீபமாக. உன்னோடு சில வார்த்தைகள் பேசவேண்டி இருக்கிறது.'' என்று சொல்லி அருகிலிருந்த ஆஸனத்தில் மகளையும் உட்கார்த்தி தானும் அமர்ந்தார்.

சமயமறிந்த சிலவதி மெல்ல அவ்விடம் விட்டு சற்று அப்பால் சென்றாள்.

சிறிது நேரம் வரையில் ஒன்றுமே பேசாமல் தம் செல்வக் குமாரியின் மேனியைத் தடவியபடியே ஏதோ சிந்தித்தார். சிந்தனையின் தீவிரத்தால் அவருடைய கண்கள் கலங்கிச் சிவப்பதைப் பார்த்துக் கொண்டே இருந்த யசோதரை, அருமை நிறைந்த குரலில், ''தந்தையே, என்ன சிந்திக்கிறீர்கள் மௌனமாக? என்னிடம் சொல்லக்கூடுமானால்......''

''கண்மணி, 'பெண்ணைப் பெற்றாலே கவலைதான்' என்று லோகத்தார் சொல்லுவதைக் கேட்டு நான் பரிகசித்ததுண்டு அந்நாட்களில். இப்பொழுது 'சிந்தாமணி ரத்னம்' என்பார்களே அது போன்ற மேன்மை பொருந்திய உன்னைப் பெற்றது, வளர்த்தது எல்லாம் பெரும் கவலையும், திகிலுமாகவே ஆகிவிட்டது. மனதிற்குள்ளேயே குமைந்து கொண்டிருந்த வேதனையைக் கிளறிவிட்டு விட்டார் சக்கரவர்த்தி நேற்று...'' என்று சொல்லி நிறுத்தினர். மேலே பேச இயலாமல் துக்கம் நெஞ்சை அடைத்தது அவருக்கு.

யசோதரை உடனேயே ஒன்றும் சொல்லவில்லை. சாவதானமாக ''பெற்றோருக்கு மாறாத் துயரை அளிக்கும் இவ்வளவு பாக்கியசாலி நான் என்பது இவ்வளவு நாளும் எனக்குத் தெரியவில்லையே அப்பா,......'' என்று ஆற்றாமையோடு மொழிந்து செயலற்று ஒடுங்கிய யசோதரையை தன்னோடு அணைத்து, முகவாய் பற்றி நிமிர்த்திக்கொண்டு ''என் செல்வமே, மறுமுறை இம்மாதிரி சொல்லாதே உன் பிதாவின்முன்பு ஸர்வேஸ்வரனுடைய கடாக்ஷமும் மஹான் காலதேவருடைய நல்லாசியும் பலிதமாகி விட்டால் என்னை மிஞ்சிய ப்ராக்யசாலி யாருமே இல்லை யசோதரா!''

''காலதேவரா! அதுயார் அப்பா?''

''கேள், அவர் திரிகாலஞானியும் ஜீவன் முக்தருமான மஹான்; யோகி. ஸாமுத்ரிகா லக்ஷண சாஸ்த்ரம் கற்று, தீர்க்கதரிசன சக்தியும் பெற்ற ஞானி.''

''நீ சிறு குழந்தையாக இருந்த சமயம் கர்ம சிரத்தையாக நம் அரண்மனைக்கு விஜயம் செய்து, உன்னைப் பார்த்தார். ஒரு முகூர்த்த கால சவகாசம் உனது லக்ஷணங்களை பரிசோதித்து, பிறகு ஒரு நாழிகை யோசித்து ''இந்த உனது குமாரி, ஒரு காரியார்த்தமாக பிறந்த ஜீவன். அஸாதாரண அங்க லக்ஷணை அதை அறிவிக்கிறது திவ்யமாக. ராஜனே இந்த பவித்திர குமாரிக்கு உற்ற புருஷனை தேர்ந்தெடுக்க யான் தெரிவிக்கும் சில அடையாளங்கொண்டு தான் நீ நிர்ணயிக்க வேண்டும்.

''முதலாவது, அவன் ஏகசக்ராதிபத்யன், இரண்டாவது பால சூர்யனைப் போன்ற சுயம் பிரகாசனாக இருப்பான். இவ்விரண்டும் பொருந்திய அந்த யுவகுமாரனிடம் மூன்று கட்டளைகளைத் தெரிவி ஒன்று பூண் அகற்றிய உலக்கையை நட்டு நீர் வார்த்தல், இரண்டு

வருத்த நவ தான்யங்களை விரவி தண்ணீர் வார்த்தல், மூன்று, நீர் நிரம்பிய கடாரத்திற்கு உயர, ஒரு மலர் வலயத்துள் அசைந்தாடும் வைர மணியை ஒரே அம்பில் கீழே உள்ள தண்ணீர் கடாரத்தில் மிதக்கும் கிண்ணத்தில் வீழ்த்தல், இம் மூன்று கட்டளையும் நிறைவேற்றுபவனே இந்தப் பாலிகையின் கணவன்'' என்று ஸ்தாபித்து விட்டுச் சென்றார்.

சொல்லிவிட்டு அவர் போய் விட்டார் யசோதரா. அன்று முதலாக இந்த விசித்திர கட்டளைகளை எண்ணி எண்ணிப் பார்த்து மனச் சோர்வுக்கு ஒரு மாற்றுத் தெரியாமல், உன்னைக் காணும் தோறும் என் மெய் பதற, காலம் கழிக்கிறேன். என் சௌந்தரிய சிற்பமான நீ என்றென்றும் என் குமாரியாகவே இருந்து விடுவாயோ என்று திகிலுறுகிறேன்! இது இப்படி இருக்க, நேற்றிரவு சக்கரவர்த்தி என்னை அழைத்து தம் மகனுக்கு உன்னைக் கேட்கிறார்! ஏதோ அவர் மகனும், நீயும் ஒருவருக்காகவே மற்றொருவர் படைக்கப்பட்டதாக அவர் கருதுகிறாராம்! மேலும் இன்னொரு விசித்திர சங்கதியும் கூட தெரிவித்தார்.

''யசோதரா, அது உண்மையா என்பதை உன் வாயிலாகத்தான் நான் அறியவேண்டும். நேற்றைய தினம் பரிசளிப்பு விழாவின் போது இளவரசன் உன்னைக் கண்டு......மையலுற்ற தாகவும், நீயும் அதை அறிந்து கொண்டதாகவும், ஆந்தரீகமாக என்னிடம் வினவினாரே அது என்ன யசோதரா?''

யசோதரை நடுங்கினாள்; நினைத்த மாத்திரத்தில் அவள் உடம்பு ஜில் விட்டு விட்டது. முகத்தில் ஒளி இல்லை; கற்பதுமைபோல அசைவற்றுப் போனாள் அப்படியே.

அவளுடைய மௌனத்தைக் கண்ட சுப்ரபுத்தன் அவள் கைகளைப்பற்றி தன் கைகளிலெடுத்துக்கொண்டு, ''என் குலதனமே, என்ன யோசிக்கிறாய்? நடந்ததை என்னிடம் சொல்ல தயக்கமென்ன? யுவாவஸ்தை என்பது ஸகஜம்தானே?'' என்று சாதுர்யமாகக் கேட்டார் மன்னன்.

கடைசியாக அவர் கேட்ட கேள்வியிலிருந்து அவருடைய உற்சாகமும், உள்ளார்த்தமும் சேர்ந்து லஜ்ஜையை உண்டாக்கி விட்டது அவளுக்கு. முகம் சிவக்க, சட்டென்று கீழே குனிந்தது அவள் சிரம்!

அதைக் கூர்மையாகக் கவனித்துக் கொண்டார் சுப்ரபுத்தன். கவலை நீங்கியவர்போல அனைத்தையும் மறந்து குதூஹலமாகச் சிரித்தார்.

''யசோதரா, இவ்வளவு போதும்! சக்ரவர்த்தியின் வாக்கில் வருவது பொய்யாகக் கூடாதே அற முறைப்படி! நல்லது, ஸர்வேஸ்வரன் சித்தார்த்தனையே உன் மணாளனாக்கட்டும்.'' என்று சொல்லி மனதார ஆசீர்வதித்து விட்டு ஆஸனத்தைவிட்டு எழுந்தார். மகிழ்ச்சியுடன் இந்த வார்த்தையைச் சொல்லி விட்டு எழுந்து சென்று விட்டார் சுப்ரபுத்தன்.

அவர் சொன்ன விருந்தாந்தத்தைப்பற்றி சிந்தித்தபடியே மெய் மறந்து உட்கார்ந்திருந்தாள் யசோதரை.

வெகுநேரம் சென்ற பிறகு சேவதி வந்து அவளைக் கைப்பற்றி எழுப்பி உள்ளே அழைத்துச்

சென்ற போது உணர்வற்று நடந்து சென்று, அவள் சாய்வித்த மஞ்சத்தில் ஸ்மரணையற்று சாய்ந்து விட்டாள் யசோதரை.

நேரம் நகர்ந்தது. சூரியன் உச்சிவரைக்கு வந்துவிட்டான். சீலவதியின் முயற்சியால் பிரக்ஞை பெற்றுக் கண் விழித்தாள் யசோதரை.

நீரைத்தொட்டு முகத்தைத் துடைத்தாள் தோழி. கைகால்களை ஈர வஸ்திரத்தால் துடைத்துவிட்டு விசிறி யெடுத்து விசிறினாள்.

தாதிகள் ஆகாரங்களைக் கொணர்ந்து வைத்தார்கள். விசிறியை வைத்து விட்டு அன்னத்தைக் கலந்து கொண்டுவந்தாள் சீலவதி.

அன்னத்தைக் கண்ணால் கண்டதுமே கசந்தது அவளுக்கு! சீலவதியின் அன்னமெடுத்து வந்த கையை சிறுகப்பற்றி அகற்றினாள் வெறுப்புடன்.

ஏதோ வேண்டா வெறுப்பாக சிறிதாகிலும் உண்பாள் என்று நினைத்துக்கொண்டு வந்த சீலவதி, யசோதரையின் வெறுப்பைக் கண்டு திகைத்து நின்றாள் அப்படியே.

"ஏண்டீ நிற்கிறாய்? கொண்டு போ அப்பால். ஜில்லென்று குடிக்க ஏதாவது கொண்டுவா." என்றாள் யசோதரை.

மெள்ளமாக திரும்பிச்சென்று குளிர்ந்த நீரைக் கொணர்ந்து நீட்டினாள் சீலவதி.

அதை வாங்கி மடமட வென்று குடித்து விட்டு மறுபடியும் பொத்தென்று சயனத்தில் விழுந்தாள் ராஜகுமாரி.

சற்று ஆயாஸம் தணிந்து வரும் வரையிலும் நிதானித்துக் கொண்டு பிறகு மெதுவாக பேச ஆரம்பித்தாள் சீலவதி. ஹிதமான மெல்லிய குரலில், "இதோபார் யசோதரா, என்னை திரும்பிப்பார் சற்று," என்று கூப்பிட்டதும் யசோதரை முகத்தைத் திருப்பி விழிகளை மலர்த்தினாள். கண்களில் துயரம் தேங்கின.

மிகவும் இளகிய மனதுடன் வார்த்தை தடுமாற, "இனிமை பொருந்திய யசோதரா, எல்லாம் நானறிவேன். நீ உண்மையான உள்ளத்தோடு பூஜிக்கும் உன் மாதா உனக்கு ஹிதத்தையும், சுகத்தை அளிக்கும் வழிக்கு காரியங்களை இயற்றச் செல்லும், நீ ஏனோ இப்படி மாய்கிறாய்?"

"எது ஹிதத்தையும், சுகத்தை தரவல்ல வழி?"

"இப்போது நடைபெறுவது தான்!"

"எது? உலக்கையும், வறுபட்ட தான்யமும் முளைக்கப் போகிறதே; அதுவா?"

யசோதரையின் துக்கம் நிரம்பிய கேள்வி சீலவதிக்கு அழுகையைத் தூண்டி விட்டது! ஆயினும் க்ஷணத்தில் சமாளித்துக் கொண்டு நம்பிக்கை தொனிக்கும் குரலில் "என் உயிர்மீதும், என் தாயின் மீதும் ஆணை யசோதரா! நிச்சயமாக சித்தார்த்தனுடைய கை நீரால் அவை உயிர்க்கும்! உன் கழுத்தின் மணமாலை அவர் கையில் தானிருக்கிறது என்பதை நிச்சயமாக நம்பு. இந்த கோசலத்தின் ராணியாகப்போகிறாய் பார்!"

மௌனமாக வெறுவெளியைப் பார்த்துக்கொண்டிருக்கும் யசோதரையின் கண்கடைக ளிலிருந்து

கடகட வென்று நீர்பெருகி வழிந்தது. வழியும் அந்தக் கண்ணீர் நிரம்பிய பார்வையை சீலவதியின் புறம் திருப்பி, "தோழி, இந்த யுவராஜனுக்கு ஜனனவிழா ஏன் வந்தது, நானேன் வந்தேன், பரிசளிப்பு விசித்திர காரியம் நடைபெற்றது. ஏன் – எல்லாவற்றையும் தூக்கியடிக்கத்தக்க விசித்திர நிகழ்ச்சியாக நான் ராஜகுமாரன் முன் சென்று ஏனடீ பரிசு வேண்டினேன்?" என்று வாய்விட்டுச் சொல்லிப் பொருமினுள் யசோதரை.

அது அமைதி பெற்றதும், "யசோதரா, நீ எவ்வளவோ அமரிக்கையும் அறிவும் கொண்டவளாயிற்றே; இவ்வித அசம்பாவித துயரத்தை உதறித்தள்ள உன்னுல் இயலவில்லையா? எழுந்திரு மஞ்சத்தைவிட்டு, இதோபார், உனக்காக இதை வெகு சிரமப்பட்டு சம்பாதித்து வந்திருக்கிறேன்" என்று அவளைப் பற்றி எழுப்பினுள்.

சுருட்டப்பட்டிருந்த ஒருதிரைச் சீலைச் சுருளை யசோதரையின் கையில் கொடுத்தாள்.

"என்ன இது?" என்று கேட்டாள் யசோதரை சலிப்போடு.

"பிரித்துப்பார், உன் சலிப்பெல்லாம் பறந்துவிடும் க்ஷணத்திற்குள்ளாக! நான் போய் ஏதாவது உன்தாகசாந்திக்கு கொண்டு வருகிறேன்." என்று சொல்லி அங்கிருந்து சென்ருள் சீலவதி.

★

"ஒரு நல்ல மனிதனும், ஒரு சிறந்த அறிவாளியும் இவ்வுலகத்தின் போக்கைக் கண்டு பெரிதும் கோபங் கொள்வதுண்டு; சிலசமயங்களில் வருந்தப் படுவது முண்டு ஆனல், தன் கடமையைச் செய்யும் எவனும் அதனை வெறுப்பதில்லை."

— சௌதி

இசைக்கலை

அ. கிருஷ்ணசாமி நாயுடு

முதன் முதல் மக்கள் இயற்கையோடியைந்து வாழ்ந்து வந்தனர்; இயற்கையை ஆசிரியனாகக் கொண்டு கல்வி கற்றனர். அறிவு பெருக்கினர்; கலைகளைப் பயின்றனர். அங்ஙனம் பயின்றதில் இசைக் கலையும் ஒன்று. இசைக் கலையை மக்கள் கற்று வளர்ச்சியடைந்ததை "திருவள்ளுவர் வெண்பா" என்னும் நூலில் "வானாடு" என்ற பிரிவில் சொல்லுவதை நோக்குவோம்.

இமய மலையின் உச்சியிலுள்ள கௌரிசங்கர் அல்லது கற்றுகுமலை என்னும் இடத்திற்குத் திருவள்ளுவர் போகும் பொழுது இமயத்தின் சாரல்களில் கண்ட காட்சிகளில் இசைக் கலைக் காட்சியும் ஒன்று.

வண்டுகள் துளைத்த மூங்கில்களில் அத்துளைகளின் வழியாகக் கோடைக் காற்று புகும் பொழுது இனிய ஓசை உண்டாகின்றது. அவ்வினிய இசையுண்டாகும் மூங்கில் தூறின் பக்கம் இசை விருப்பமுள்ளவன் இருந்து கொண்டு ஒரு மூங்கிலைப் பலதுளைகள் செய்து ஊதி ஊதிப் பழகுகிறான். இங்ஙனம் மூங்கில் குழாயின் துளைகளின் வழியாக ஊதிப் பயின்ற பழக்கமே புல்லாங் குழல் பயிற்சி வளருவதற்குக் காரணமாயிற்று. புல்-மூங்கில்.

> "ஆடமைத் தும்பி அவிர்துளை யுட்புகூஉம்
> கோடை வளிநல் குழலிசையாய் — மாடொருவன்
> தேங்குழல் ஊதியூதித் தேர்ந்து வரல் ஓர்ந்துணர்ந்தான்
> வேய்ங்குழல் வந்த விதம்

(ஆடு அமை — அசைகின்ற மூங்கில்; தும்பி — வண்டு; அவிர் துளை — விளங்கும் துளை; கோடை வளி — கோடைக்காற்று; மாடு ஒருவன் — பக்கத்தில் ஒருவன்; வேய் — மூங்கில்)

மலையிலிருந்து படிப் படிப்பாய் ஆற்று வெள்ளம் பாறைகளில் படிந்து வருகின்றது. இங்ஙனம் படிப் படியாய்ப் பாறைகளில் வெள்ளம் விழும் இனிய ஓசையைச் செவியுற்ற அறிஞன் அவ்வோசைக் கிசையத் தொடையில் கையைத் தட்டுகிறான். இவ்வாறு தட்டிய பழக்கமே பின்னர் மத்தளம் முதலிய வாத்தியங்கள் வருவதற்கும் பழகுவதற்கும் காரணமாயிற்று.

படிப்படியாய் வெள்ளம் படிந்துவரும் பாறை
அடிப் பொலிவை ஆய்ந்த அறிஞன் — மடித்ததொடை
கைத்தலத்தால் கொட்டிக் கழுத்தசைத்தல் கண்டுணர்ந்தான்
மத்தளம் வந்த வகை.

மழை வளரும் இமயமலையின் சாரலில் மயில் இயற்கையாக ஆடிக் கொண்டிருக்கின்றது. இம்மயில் ஆடுவதைக் கண்ட பெண் மகள் தானும் அவ்வாறு ஆடி நடனத்தைப் பயின்று கொண்டிருக்கிறாள். இங்ஙனம் மயிலை ஆசிரியனாகக் கொண்டு நடனக்கலையை முதன் முதல் மகளிர் பயின்றிருக்க வேண்டும்.

மழைவளர் சாரல் மயிலியலி ஆடல்
கழைவளர் தோள் காரிகை கண்டு — இழை வளர்
பாடகம் ஆர்ப்பப் பயிலுவதைப் பார்த்தறிந்தான்
நாடகம் வந்த நலம்

கழை வளர் தோள் — மூங்கில் போன்ற தோள்; காரிகை — பெண்; இழை வளர் — இழைத்து வேலை செய்துள்ள; பாடகம் — காலில் அணியும் அணி;

ஓர் இளங்குயில் மரக் கொம்பின் மேலிருந்து கூவுகின்றது. இவ்விசையைக் கேட்ட பெண் தானும் அக்குயிலைப் போல இசையைப் பயிலலுற்றாள். இங்ஙனம் இசை பயிலுவதற்கு மேல் வரிச் சட்டமாக — ஆசிரியனாகக் — குயில் இருந்தது. மக்களுக்கு இயற்கையே ஆசிரியனானால் குயிலுமோர் ஆசிரியனே.

கொம்ப ரிளங்குயில் கூவும் இசை வழியே
வம்பரோர் மங்கை பயிலலுற்றாள் — இம்பர்
இசையுணர்த்தும் ஆசிரியன் இன்குயிலோ! ஈதோ!
இசை உலகம் ஏற்ற இயல்பு.

கொம்பர் — கொம்பு; வம்பர் — புதுமை;

காட்டில் ஒரு பெண் குறிஞ்சி என்னும் பண்ணைப் பாடினாள். அவ்விசையைக் கேட்ட வீரமுள்ள யானை மகிழ்ந்து நின்று கொண்டிருந்தது. இவ்வாறு முன்னாளில் காட்டு விலங்குகளை இசையினால் பழக்கி நாட்டு விலங்குகள் ஆக்கினர்.

பறம்பில் கொடிச்சி குறிஞ்சிப்பண் பாட
மறம்புகல் யானை மகிழும் — திறம்புகலின்
காட்டு விலங்கனைத்தும் கண்டிங்கன் இன்னிசையில்
நாட்டுவிலங் காக்கினரந் நாள்

பறம்பு — காடு; கொடிச்சி — பூங்கொடி போன்ற பெண்; குறிஞ்சி — ஒருவகை இசை; மறம்புகல் — வீரமுள்ள.

தன் கன்றுக்கும் பால் ஈயாமல் பாலை நமக்குக் கொடுத்துவரும் பசுக்களும், ஆடுகளும் மக்களிசையின் வசப்பட்ட பின்னர் அன்று போல் இன்றும் மக்களுடன் இருக்கின்றன.

ஈன்றதன் கன்றுக்கும் ஈயாமல் தன்னமிழ்தம்
ஆன்ற நமக்கீந்துவரும் ஆவினமும் — தூன்று
மருந்தளிக்கும் ஆடும் மக்களிசை வாய்ப்பட்டு
இருந்தளிக்கும் அன்றுபோல் இன்று

அமிழ்தம் — பால்; மருந்து — பால்; ஆட்டுப் பால் உணவாவதன்றி மருந்தும் ஆகும்.

கண்ணபிரான் குழலிசைக்கக் காட்டிலுள்ள விலங்குகள் அனைத்தும் இசையின் வசப்பட்டன என்று சொல்லுவதின் உண்மையாவது:— பழங்காலத்தில் விலங்குகளை மக்கள் வசப்படுத்துவதற்குச் செய்த வகையாகும்.

கண்ணன் குழலிசைக்கக் காட்டு விலங்கனைத்தும்
பண்ணின் வயப்பட்ட பால் கேளீர் — எண்ணின்
நயப்படா மாவினத்தை நல்லிசையில் முன்னோர்
வயப்படச் செய்த வகை

பழங்காலத்தில் பழக்கிய விலங்குகளும் பறவைகளும் அல்லாமல் இன்று பழக்கியவை ஒன்றும் இன்மையைக் கண்டு, திருவள்ளுவர் சிரித்தனர்.

அன்று பழக்கிய ஆவுபுள் மாவன்றி
இன்று பழக்கியதொன் றின்மையால் — இன்றறிவு
மிக்குடையேம் என்றுரைக்கும் மேதையரின் சொல் கேட்டுப்
பக்கென நக்கனனே பார்

மேதையர் — அறிவில் மேம்பட்டது. பஃகு — சிரித்தலின் ஒலிக்குறிப்பு. பக்கு — பஃகு.

முதன் முதல் மக்கள் பிறந்த இடம் மலை என்றும் அம்மலையிலிருந்து மக்கள் மற்றைய மருதம், முல்லை, நெய்தல் நிலங்களுக்குக் குடிபுகுந்தனர் என்றும் நிலநூல்வல்லார் கொள்கை. மலையினில் தோன்றிய மக்கள் பண்படுத்திய கலைகள் அனைத்தும் ஆறுகளைப் போல மற்ற நிலங்களிலும் அடைந்ததெனத் திருவள்ளுவர் பலநூல்களையும் நுண்மையாக ஆராய்ந்து சொன்னார். எல்லா நிலங்களுக்கும் மலைகளில் இருந்து யாறுகள் வருகின்றன. அவ்வாறு மலைநாட்டிலிருந்து கலைகளும் மற்றைய நாடுகளுக்கு வந்தன என்னும் நயம் அமைந்த செய்யுளைக் காண்போம்.

மலையில் முதல் முதல் மக்கள் பிறந்து
நிலையறிவில் பண்பட்ட நேர்மைக் — கலையனைத்தும்
ஆறாய் மருத முல்லை நெய்தல் அடைந்த தென்றான்
நூறாய்ச் சரிதம் நுனித்து

மருதம் — ஆற்றங்கரையிலுள்ள வயல் தோப்பு முதலிய நில்ங்கள்; முல்லை — மழை பெய்தால் விளையும் காட்டு நிலங்கள்; நெய்தல் — கடலைச் சார்ந்த நிலங்கள்.

தொடர் கதை:

அத்தியாயம் நான்கு

வீட்டு வாசலில் வந்து நின்ற வண்டியின் சத்தத்தைக் கேட்டு வெளியே வந்து பார்த்தாள் புவனேஸ்வரி. வண்டிக்காரனின் அருகில் உட்கார்ந்திருந்த முத்துசாமியின் முகம் அவள் பார்வையில் பட்டதும், வியப்பும் மகிழ்ச்சியும் பொங்க வண்டியருகில் குதித்தோடினாள். பட்டுப் புடவை படபடக்க வண்டியிலிருந்து இறங்கிய காமாக்ஷியம்மாளைக் கண்டதும் "அம்மா!" என்று அவளைக் கட்டிக் கொண்டாள். ஒருமாதமாக அம்மாளைப் பார்க்காதிருந்த குறையெல்லாம் அந்த ஒரு கணத்தில் தீர்ந்து விட்டது போல் இருந்தது அவளுக்கு. சற்று பதட்டம் அடங்கியதும் "அப்பா எங்கம்மா? வரவில்லையா? கார் என்னாச்சு? ரயில்லேயா வந்தே?" என்று கேட்டாள் ஆர்வம் தொனித்த குரலில்.

'அப்பா எங்கம்மா? வரவில்லையா?' என்ற கேள்வி காமாக்ஷியம்மாளை ஒரு உலுக்கு உலுக்கிற்று. முகத்தில் ஏற்பட்ட மாறுதலை வெகு சீக்கிரம் மாற்றிக் கொண்டு, "என்னமோ, கேஸ் விசாரிக்கணுமாம். கிராமத்துக்கு காரிலே 'டூர்' போயிருக்கிறார். வர ஒரு வாரத்துக்கு மேலாகுமாம். அதுதான் நானும், முத்துவும் வந்தோம்" என்றாள்.

இதற்குள் கீழே குதித்து வண்டியின் பின்புறமாக வந்த முத்து, வண்டியிலிருந்த சாமான்களைப் பார்த்ததும், "முதலில் இந்தச் சாமான்கள் எல்லாம் உள்ளே போகட்டும். பிறகு எல்லா விபரமும் நிதானமாகச் சொல்லலாம். ஏனென்றால் நிதானம்தான் எல்லா தானங்களையும் விடச் சிறந்தது என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்" என்றான்.

அத்துடன் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு புவனாவும் காமாக்ஷியம்மாளும் வண்டியிலிருந்த தூக்குக் கூடை, கூஜா முதலியவற்றை எடுத்துக்கொண்டு மலர்ந்த முகத்துடன் வீட்டிற்குள் நுழைந்தார்கள். வண்டிக்காரனுக்கு வாடகை கொடுத்து விட்டு முத்துவும் உள்ளே சென்றான்.

"வாங்க; வாங்க தம்பி. எப்ப, காலையிலே புறப்பட்டீர்களா?" என்று சம்பந்தியையும் முத்துசாமியையும் ஏககாலத்தில் வர

வேற்ருள் சமையலறையிலிருந்து வெளியே வந்த ராஜம்மாள்.

"ஆமாம். காலையிலேதான் புறப்பட்டோம். இவருக்கு கிராமத்தில் ஏதோ கலக விசாரணை யாம். அதற்காகப் போயிருக்கிருர். வர ஒரு வாரத்துக்கு மேல் பிடிக்கும் என்று சொல்லிவிட்டுப் போனர். அதனல்தான் அவர் வரமுடியவில்லை" என்று ராஜம்மாள் கேட்ட, கேட்காத கேள்விகளுக்குப் பதில் சொல்லிவிட்டுக் கையிலிருந்த தூக்குக் கூடையையும் கூஜாவையும் ஒரு புறமாக வைத்தாள்.

சம்பந்தி உட்காரப் பாய் எடுத்து விரித்து விட்டு, "உட்காருங்கள். நின்று கொண்டிருக்கிறீர்களே!" என்று சொன்னவள் புவன சமையல் அறையை விட்டு வெளியே செல்வதைப் பார்த்து, "புவன, தம்பிக்கு ஒரு பாய் கொண்டுபோய் விரி. உட்காரட்டும்" என்ருள்.

"பாய் வேண்டாம். நான் 'ஈஸி சேரி'ல் உட்கார்ந்து கொண்டேன்" என்ற பதில் முத்துவிடமிருந்து வந்தது.

புவன முத்துவிடம் சென்று பேச்சுக் கொடுக்கலானள். காப்பி போடுவதில் முனைந்திருந்தாள் ராஜம்மாள். சற்று நேரம் கழித்து, "மாப்பிள்ளை வர இன்னும் நேரமாகுமா?" என்று கேட்டாள் காமாக்ஷியம்மாள்.

"சாதாரணமாக ஆறு மணிக்கு மேலேதான் ஆபீசிலிருந்து வருவான். ஒவ்வொரு நாளைக்கு வருவதற்கு எட்டு மணி ஒன்பது மணி கூட ஆகிவிடும்" என்று சொல்லியபடி காப்பியைக் கலக்கி வைத்து விட்டு, பிறகு "இதோ வந்து விட்டேன்" என்று சொல்லிக் கொண்டு பின்புறம் சென்று நான்கு இலைகளை அறுத்துக் கொண்டு வந்தாள். தண்ணீர் விட்டு அவற்றை அலம்பி சமையலறையிலேயே மூன்று இலைகளைப் போட்டுத் தண்ணீர் வைத்தாள்.

பிறகு டப்பாவிலிருந்த முறுக்கிலிருந்து இலைக்கு இரண்டிரண்டு எடுத்து வைத்து, சற்று முன் தயாரான தோசையிலும் ஒவ்வொன்று வைத்து விட்டு, "எழுந்திருங்கள். காப்பி சாப்பிட்டு விட்டு சாவகாசமாகப் பேசலாம்" என்ருள்.

வெளியில் புவனவும் முத்துவும் பேசிக் கொண்டிருந்தார்கள், அடிக்கடி சிரித்தபடி. அதைப் பார்த்தவள், "புவன, இந்தா, தம்பிக்குத் தண்ணி கொண்டு போய்க் கொடு. கை கால் கழுவிக்கொண்டு காப்பி சாப்பிடட்டும்" என்று கையிலிருந்த செம்பை நீட்டினள். புவன செம்பை வாங்கிக் கொண்டு போய் முத்துவிடம் கொடுத்தாள். கை கால் அலம்பிக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தான் முத்து.

"நீங்களும் உட்கார்ந்து கொள்ளுங்கள்" என்று ராஜம்மாள் ஆனவரையில் சொல்லியும், "முத்து சாப்பிடட்டும். நாம் எல்லோரும் ஒன்ருக உட்கார்ந்து கொண்டால் போகிறது" என்று மறுத்து விட்டாள் காமாக்ஷியம்மாள். முத்து சாப்பிட்டு முடிந்ததும் பறிமாறிய இலையில் மூவரும் உட்கார்ந்து சாப்பிடலானர்கள். ஒருவகையாக காப்பிக் கடை முடிந்தது. அது முடிந்ததும் முடியாததுமாக இரவுச் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்வதில் கவனம் செலுத்தினள் ராஜம்மாள்.

"ராத்திரிச் சாப்பாட்டிற்கு இப்பொழுதிருந்தே என்ன அவசரம். சமையல் சாவகாசமாக ஆகட்டுமே. நீங்கள் வந்து கொஞ்ச நேரம் உட்காருங்கள்" என்ருள் காமாக்ஷியம்மாள்.

"வருகிறேன். நீங்கள் வெற்றிலை போடுங்கள். தீ வீணுகத் தானே போகிறது; உலையில் பருப்புப் போட்டுவிட்டால் அது பாட்டுக்கு வெந்து கொண்டிருக்குமல்லவா? புவனு, இன்னெரு வெத்திலைத் தட்டத்தை தம்பிக்குக் கொண்டு போய்க் கொடேன். போடட்டும்" என்ருள்.

"வேண்டாம். அவன் போடுவதில்லை."

"ஏன், வெத்திலை போடுவதில்லையா?"

அதென்னமோ கிறுக்கு. வெத்திலை பாக்குப் போட்டால் பிரசங்கம் செய்ய முடியாதாம். வார்த்தைகள் தடிப்பாகிவிடுமாம். வெத்திலை போடாததற்கு என்னென்னமோ காரண மெல்லாம் சொல்கிருன்" என்ற காமாக்ஷியம்மாள் பேச்சைக் கேட்டு ராஜம்மாள் மெல்லச் சிரித்தாள்.

"வெத்திலை பாக்குப் போட்டால் நாக்கு கொஞ்சம் தடிப்பாகும் என்பது என்னவோ உண்மைதான். அதுவும் அடிக்கடி போட்டால்தான். ஆனல் பேச முடியாமல் போய் விடாதே! பிரசங்கம் செய்வதற்கும், வெற்றிலை போடுவதற்கும்தான் என்ன சம்பந்தம்? யார் பிரசங்கம் செய்கிருர்கள் அப்படி?" என்று கேட்டாள் ராஜம்மாள்.

"வேறு யார்? நம்ம முத்துதான். அந்தக் கதையைச் சொல்கிறேன். நீங்கள் வந்து கொஞ்ச நேரம் உட்காருங்கள். பிறகு சமையல் வேலையைக் கவனிக்கலாம்" என்ற சம்பந்தியின் கட்டளையை மீற முடியாமல் பாயில் உட்கார்ந்தாள் ராஜம்மாள். அவர்களுக்கு எதிரில் சற்று தூரத்தில் புவனு உட்கார்ந்து காப்பியை ஆற்றிக் கொண்டிருந்தாள். ஈஸிசேரில் உட்கார்ந்து கையில் கிடைத்த ஏதோ புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தான் முத்து. அவன் கண்கள் கையில் இருந்த புத்தகத்தில் லயித்து இருந்தாலும், கருத்தெல்லாம் சமையலறையில் நடந்த பேச்சின் மேலேயே இருந்தது.

"கொஞ்ச நாளாகத்தான் இந்தப் பிரசங்கப் பைத்தியம் நம்ம முத்துவுக்கு ரொம்பப் பலமாகப் பிடித்திருக்கிறது. ஊரில் எந்தக் குப்பை மேட்டிலே எந்தக் கூட்டம் நடந்தாலும் சரி, முத்து அந்த இடத்திலே நிச்சயமாய் இருப்பான். பிரசங்கத்துக்குப் போகாத வேளைகளில் வீட்டிலே கண்ணாடி முன்னல் நின்று கொண்டு பைத்தியகாரன் மாதிரி வாயில் வந்ததையெல்லாம் பேசுவது. இப்படி அவன் காலம் போய்க் கொண்டிருக்கிறது. இந்தக் கொஞ்ச நாளாகத்தான் கண்ணாடிக்கருகில் போவதில்லை, நல்லகாலமாய்."

"பிரசங்கம் செய்யறது அப்படி ஒண்ணும் கேவலம் இல்லீங்கக்கா. எத்தனையோ பேர் எவ்வளவோ நல்ல நல்ல பிரசங்கமெல்லாம் செய்யறதில்லையா? போன வாரம் கூட அம்பாள் சந்நிதியிலே யாரோ ஒருத்தர் 'மீனுட்சி கல்யாணம்' பிரசங்கம் செய்தார். ரொம்ப நன்ருக இருந்தது. புவனுதான் வரமாட்டேன் என்று சொல்லி விட்டாள்.

நான் மட்டும் போய்க் கேட்டு வந்தேன். அந்த மாதிரி தானும் ஒரு பிரசங்கி ஆகவேணும் என்ற ஆசை போல் இருக்கு தம்பிக்கு?'' என்று தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தாள் ராஜம்மாள்.

“அந்த மாதிரி இருந்தால் பாதகமில்லையே. முத்து பேசும் போது வாயில் நுழையாத வார்த்தைகள் எல்லாம் வருகின்றன. அவன் என்ன பேசினான் என்று எனக்கே சரியாக விளங்குவதில்லை'' என்று மேலும் ஏதோ சொல்வதற்குள், “எப்படிப் புரியும் அரசியல் விஷயங்கள்? தப்பித் தவறி ஏதாவது பிரசங்கங்களுக்குப் போயிருந்தால்தானே அறைகுறையாகவாவது அவர்கள் பேசும் விஷயங்கள் விளங்கியிருக்கும்?'' என்ற முத்துவின் குரல் கணீரென்று கேட்டது.

“என்னமோ போ! எங்களுக்கெல்லாம் சேர்த்துத்தான் நீ பிரசங்கங்களைக் கேட்டும், பேசியும் தீர்த்து விடுகிறாயே! அரசாங்க விஷயத்தைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டிய அக்கரையும், அவசியமும் எங்களுக் கெதற்கு? அப்படித்தான் விஷயங்களைத் தெரிந்து கொண்டாலும் நாங்கள் அதைக் கொண்டு என்ன செய்து விடப் போகிறோம் பிரமாதமாக? என்னங்க?'' என்றாள் காமாக்ஷியம்மாள் ராஜம்மாளின் பக்கம் திரும்பி.

“ஆமாம்'' என்று சொல்வது போல் ராஜம்மாள் தலையை அசைத்தாள்.

“அதுதான் தவறு'' என்ற முத்துவின் குரல் சமையல் வீட்டிற்குள் உட்கார்ந்திருந்த மூவரையும் தூக்கி வாரிப் போட்டது. ஏககாலத்தில் மூவரும் திரும்பி முத்துவைப் பார்த்தார்கள்.

தொண்டையைக் கனைத்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தபடி முத்து பேச ஆரம்பித்தான்.

“தாய்மார்களே! சகோதரிகளே! இன்றைய நிலைமையையும் பத்து வருஷத்துக்கு முன் நம் தேசம், நாடு, மாகாணம், ஜில்லா, தாலூக்கா, ஊர், கிராமம், வீடு இவைகள் இருந்த நிலைமையையும் நாம் கொஞ்சம் கற்பனை செய்து கொண்டு நமது பெரியவர்கள் சொல்லியிருப்பது போல் எல்லா தானங்களிலும் சிறந்த நிதானத்



தைக் கடைப் பிடித்து சற்று பொறுமையாக யோசனை செய்து பார்க்க வேண்டும். எந்த விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் ஒவ்வொன்றிலும் எத்தனை எத்தனையோ மாறுதல்களைக் காண்கிறோம், இந்தப் பத்து வருஷத்திற்குள். உதாரணமாக நமது அன்றாட வாழ்க்கையின் ஜீவநாடியான அரிசி, பத்து வருஷங்களுக்கு முன் எப்படி இருந்தது நினைவு இருக்கிறதா? ஒரு நெல் இல்லாமல்,

ஒரு கல் இல்லாமல், ஒரு மண் இல்லாமல் எத்தனை சுத்தமாக இருந்தது? மீறி அவை இருந்தாலும் ஏதோ ஒரு மூட்டைக்கு அரைக்கால் அல்லது கால் படிக்கு மேல் இருக்காது. அத்தகைய அரிசியை இப்போது நாம் கண்ணில் காணுவதே ரொம்ப ரொம்ப சிரமமாக இருக்கிறது. இப்போது நாம் காணுவதெல்லாம் நெல்லும், கல்லும், மண்ணும் சரிக்கு சரி உள்ள அரிசிகள். அதிலும் வான வில்லைப் போல்

பச்சை, சிவப்பு, ரோஜா, கருப்பு முதலிய எத்தனையோ வர்ண அரிசிகள். இவைகளில் சில சமைக்கு முன் ஒரு நிறமாகவும், சமைத்த பின் மற்றொரு விதமாகவும் மாறும் விந்தைகள் அநேகம். இந்த விந்தைகளை யெல்லாம் ஒவ்வொரு ஓவியமாகத் தீட்டலாம். சரி, தொலையட்டும்.

பெண்கள் நிலைமையைத்தான் எடுத்துக்கொள்வோமே!

எத்தனை மாறுதல்கள்! பத்து ஆண்டுகளுக்கு முன்பு, இருக்கும் இடம் தெரியாமல் சமையல் அறைக்குள்ளாகவே அந்த இருளிலும் புகையிலும் புழுங்கிக் கொண்டிருந்த உங்களைப்போன்ற எத்தனையோ தாய்மார்களும் சகோதரிகளும், இன்று மேடை ஏறிப் பிரசங்க மாரி பொழிந்து இரட்டிப்பு கரகோஷம் வாங்குகிறார்கள். ஆண்களால் சாதிக்க முடியாத எத்தனையோ காரியங்களைப் பெண்கள் சாதித்து வருகிறார்கள். அவர்களது ஆணித்தரமான, அனல் கக்கும் பிரசங்கங்கள் எத்தனையோ ஆண்களையும் பெண்களையும் வீறுகொண்டு எழவைத்து விட்டன. ஆண்களும் பெண்களும் சமம்; ஆணுக்குள்ள உரிமை பெண்ணுக்கும் உண்டு என்ற கொள்கை பெருவாரியாக அமுலுக்கு வந்து கொண்டிருக்கிறது.

நமது அரும் பெரும் தலைவியும் நமது மதிப்பிற்கும் அன்புக்கும் பூரண பாத்திரமான ஜவாஹர்லால் நேருவின் சகோதரியும் ஆன ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் அமெரிக்காவில் சிங்கம் போல் நின்று முழக்கும் சங்கநாதம் அங்குள்ள சர்வ தேசத்தினரையும் கதிகலங்க அடித்து வருவதுபற்றி உங்களுக்கு எப்படித் தெரியும்? இந்திய தேசிய ராணுவத்திற்கு கேப்டன் லக்ஷ்மி தலைமை வகித்து நடத்திய மாபெரும் செயலைப் பற்றித்தான் நீங்கள் எப்படி அறிய முடியும்? சமையல் வீட்டிற்குள் புழுங்கிக்

கிடக்கும் வரை - நமக்கெல்லாம் அரசியலும், பட்டமும், பதவியும் எனத்திற்கு என்று நினைக்கும் வரை-வெளியுலகைப் பார்த்து நாம் விழிப்பு அடையாத வரை - பெண் சுதந்திரத்தைப் பறித்து பெண்ணை நாய் போல் அடிமையாக வைத்திருக்கும் ஆண் பேடிகள் இருக்கும் வரை - அது சாத்தியமல்ல; நடக்காதுதான்; முடியாதுதான்!

ஆனல் இந்நிலைமை அடியோடு மாற வேண்டும். தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும் புதிய விழிப்பை, எழுச்சியை, மலர்ச்சியை உண்டாக்கி விட்டுச் சென்ற எங்கள் பாரதியார் சொல்கிருர்,

"பட்டங்கள் ஆள்வதும்
சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள்
நடத்த வந்தோம்"

என்று தமது விடுதலைக் கும்மியில். அவர் அன்று கண்ட அந்தக் கனவு இன்று நனவாகி வருகிறது. எண்ணற்ற பெண்மணிகள் நாட்டின் விடுதலைப் போருக்கு உழைத்து வருகிருர்கள். எத்தனையோ பெண்மணிகள் எத்தனையோ விதமான தியாகங்கள் புரிந்திருக்கிருர்கள்; இன்னும் புரிந்து வருகிருர்கள். அத்தகைய மனப்பக்குவம், மனேதிடம், உறுதி, ஆற்றல் உங்களிடமும், உங்களைப் போன்ற மற்ற தாய்மாரிடமும், சகோதரிகளிடமும் வரவேண்டும். நாட்டின் நலனுக்கு, நாட்டின் முன்னேற்றத்திற்கு நீங்க ளெல்லோரும் ஜீவாதாரமாய் இருக்க வேண்டும். இது என் அடங்காத ஆசைக் கனவு. அந்தக் கனவு நனவாகும் நன்னுள் ஆண்டவன் அருளால் சீக்கிரம் வரவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டு எனது இந்தச் சிறிய சொற்பொழிவை முடித்துக் கொள்கிறேன்" என்று தன் நீண்ட பேச்சை முடித்தான்.

சமையல் அறையில் உட்கார்ந்திருந்த மூன்று பேரும் அசந்து போய் விட்டார்கள். ஒருவரும் வாய்திறக்கவில்லை. அந்த அறையில் கோர நிசப்தம் ஆனந்தத் தாண்டவம் ஆடியது.

அத்தியாயம் ஐந்து

முத்துசாமிக்கு இப்போது சுமாராகப் பிரசங்கம் செய்ய வந்தது. ஒரு கால் மணி நேரம் தட்டுத் தடங்கலின்றிப் பேசுவது இப்போது அவனுக்குச் சாத்தியமாக இருந்தது. அவன் பிரசங்கம் செய்வதையே கேட்டிராத புவனவும் ராஜம்மாளும் முத்துவின் பிரசங்கத்தைக் கேட்டுத் திகைத்ததில் ஆச்சரியம் இல்லை. என்ருலும் அவன் பேச்சை இரண்டொரு முறை பட்டும் படாமலும் கேட்டிருந்த காமாக்ஷியம்மாளும் கூட அவனதுஅப்போதைய பேச்சைக் கேட்டுத் திகைத்து விட்டாள்.

"பருப்பு வெந்து போயிருக்கும்" என்று சொல்லியபடி அந்த அறையின் நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டு எழுந்தாள் ராஜம்மாள். ஆறி விருவிருத்துப் போன காப்பியை அப்படியே வைத்து விட்டு எழுந்து முத்து இருந்த பக்கம் சென்ருள் புவன.

காமாக்ஷியம்மாள் எழுந்து ஒரு தூக்குக் கூடையிலிருந்த கோஸ், உருளைக்கிழக்கு, பீட்ரூட், சிவப்பு முள்ளங்கி முதலிய மலைக் காய்கறிகளைக் கீழே எடுத்து வைத்து விட்டு, சுற்று முற்றும் பார்த்து, "அறுகாமணை எங்கே? கொஞ்

சம் தருகிறீர்களா, இந்தக் காயை வேடுமானால் அரிந்து தருகிறேன்'' என்று கேட்டாள் ராஜம்மாளை.

"அதெல்லாம் வேண்டாம். நீங்கள் கொஞ்ச நேரம் பேசாமல் உட்கார்ந்து பேசிக் கொண்டிருங்கள். நான் எல்லாம் கவனித்துக் கொள்கிறேன். உங்களுக்கு ரயிலில் வந்தது சிரமமாக இருக்குமே, சற்று நேரம் படுத்துத் தூங்குங்களேன்'' என்று சொல்லி ஒரு தலைகாணியைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

"இல்லை, இல்லை வேண்டாம். என்ன சிரமம்'' என்று சொல்லிக் கொண்டே அறுகாமணையின் மேல் உட்கார்ந்து கோசைக் கையில் எடுத்துக் கொண்டு, "இதைக் கூட்டுக்கு நறுக்கட்டுமா?'' என்று கேட்டாள்.

"அடடா, வேண்டாம். நீங்கள் போய் சற்று நேரம் சிரம பரிகாரம் செய்து கொள்ளுங்கள். நான் சமையலைப் பார்த்துக் கொள்கிறேன்; ஒன்பது மணி பத்து மணிக்குச் சாப்பிடுகிற சமையலுக்கு இப்போது என்ன அவசரம்?'' என்று அவள் உட்கார்ந்திருந்த அறுகாமணையை விடாப் பிடியாக வாங்கி மற்றோர் புறம் வைத்து விட்டாள். வேறு வழியில்லாமல் காமாக்ஷியம்மாள் எழுந்து முன்போல் பாய்மேல் உட்கார்ந்து சுவரோடு சாய்ந்து கொண்டாள்.

காமாக்ஷியம்மாள் செல்வம் செழித்த பெரிய குடும்பத்தில் பிறந்தவள் என்றாலும் மற்ற பெரிய இடத்துப் பெண்களைப் போல் குடும்பத்தைத் திறம்பெற நிர்வகிக்கத் தெரியாதவளல்ல. குடும்ப நிர்வாகம் பற்றிய எல்லா விஷயங்களிலும் காமாக்ஷியம்மாளின் தாயார் அவளுக்கு நல்ல பயிற்சி அளித்திருந்தாள். சமையல் விஷயத்தில் தன் தாயாரையும் மிஞ்சும்படி நளபாகமாகச் சமைப்பாள் காமாக்ஷியம்மாள். அவள் தாசில்தாருக்கு வாழ்க்கைப் பட்ட புதிதில் சில காலம் தன் கைப்படத் தானே சமைத்து பிள்ளையவர்கள் சாப்பிடும் போது உடனிருந்து பேசிச் சிரித்து அவர் திருப்தியாகச் சாப்பிடும்படி பார்த்துக் கொள்வாள். சமையற்காரர்கள் சமையலைக் கவனித்துக் கொண்டாலும் உடனிருந்து பரிமாறுவதை மட்டும் அவள் வெகு நாள் வரை விடவில்லை.

காலம் மாறியது. பணம் தாராளமாக வந்தது. இரண்டு குழந்தை குட்டிகளும் ஆயிற்று. அவள் கவனமும், கருத்தும் முழுக்க முழுக்க குழந்தைகளின் மேல் சென்றது. சமையற்காரர்கள் பிள்ளையவர்களின் சாப்பாட்டைப் பற்றி அதிக சிரத்தை எடுத்துக்கொள்ளும் நிலைமை வந்தது.

சமய சந்தர்ப்பங்களும் தான் வீட்டின் எஜமானி என்ற நினைவும் காமாக்ஷியம்மாளை மேல்ப்பார்வை பார்க்கும் அளவுக்குக் கொண்டு வந்து விட்டன. 'சிரமப்பட வேண்டிய அவசியம் இல்லாத போது எதற்காக அனாவஸ்யமாக, அகாரணமாக சிரமப்பட வேண்டும்?' என்ற முடிவுக்கு காமாக்ஷியம்மாள் வெகு சீக்கிரம் வந்து விட்டாள். பங்களா வாசமும், கார் சவாரியும், வேலைக்காரர்களும் அவளது இந்த எண்ணங்களுக்கு முக்கிய காரணம். தனது தகுதிக்கும் கௌரவத்திற்கும் ஏற்ப தனது நடைமுறை வாழ்க்கையை மாற்றிக் கொண்டாள்.

இவ்வளவெல்லாம் இருந்தாலும் சமய சந்தர்ப்பங்களில் தனது கௌரவத்தைப் பெரிது என்று பார்க்காமல் மற்றவர்களுக்குத் தன்னால் ஏதாவது காரியம் ஆக வேண்டியிருந்தால் அதைக் கையோடு முடித்துக் கொடுக்கும் தாராள மனப்பான்மை அவளிடம் இயற்கையிலேயே அமைந்திருந்தது. சற்று நேரம் பேசிக் கொண்டிருப்பதிலேயே மனிதர்களின் தராதரம் தெரிந்து அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டிய எல்லா விஷயங்களையும் ஊகித்து அறிந்து கொள்ளக்கூடிய சாமர்த்தியம் அவளுக்கு உண்டு. புவனாவும் தன்னைப் போல் எல்லா வகையிலும் குடும்பத்தைத் திறம் பெற நிர்வகிக்க வேண்டும் என்று காமாக்ஷியம்மாள் விரும்பினாள்.

புவனா சமைக்கக் கற்றுக் கொண்டதே காமாக்ஷியம்மாளின் பலவந்தத்தினால் தான் என்றாலும் தகும். சில சமயங்களில் உக்கிராண அறையின் சாவியை அவளிடம் கொடுத்து சமையலுக்கு வேண்டிய சாமான்களை எடுத்துக் கொடுக்கச் சொல்வாள். புவனா வேண்டா வெறுப்பாய்ச் சென்று அதிகமாகவும் குறைவாகவும் கொடுப்பதை முறைப்படி திருத்தி, மேற்கொண்டு அந்த அளவு கொடுத்தால் போதும் என்று சொல்லிக் கொடுப்பாள். புவனா என்னதான் தாசில்தார் வீட்டுப் பெண்ணாயிருந்தாலும் அவள் புருஷன் வீட்டார் 'உன் தாயார் சொல்லிக் கொடுத்த லக்ஷணமா இது?' என்று எதற்கும் இடித்துக் காட்டக் கூடாது என்பது அவள் எண்ணம். தாசில்தார் வீட்டுப் பெண்ணாயிருந்தாலும் புவனா எல்லா வகையிலும் கெட்டிக்காரி என்ற நல்ல பெயர் எடுத்து, தன்க்கும் நல்ல பெயரை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்பது காமாக்ஷியம்மாளின் ஆசை.

ராஜம்மாள் முதன் முதலில் பெண் பார்க்க வந்த போதே காமாக்ஷியம்மாளுக்கு ராஜம்மாளை ரொம்பவும் பிடித்து விட்டது. புவனாவின் கலியாணத்தின் போதிருந்தே ராஜம்மாளின் மேலும், அவள் பேச்சு, செயல் இவற்றில் இழையோடிய அன்பு, உரிமை இவை பற்றியும் காமாக்ஷியம்மாளுக்குப் பெருமதிப்பும் அபிமானமும் இருந்தன. இத்தகைய ஒருவர் தனக்கு சம்பந்தியாகவும், தன் பெண்ணுக்கு மாமியாராகவும் வாய்த்தது பற்றி அவள் தனக்குள் பெருமைப் பட்டுக் கொள்வதுண்டு. அந்த அருமைச் சம்பந்தி தனியாக வேலை செய்வதைப் பார்த்து 'நாமும் கூடமாட ஏதாவது வேலை செய்யலாமே' என்று எண்ணி காமாக்ஷியம்மாள் இப்போது காய் நறுக்க வந்தாளே தவிர, உண்மையில் அவளுக்குக் களைப்பாய்த்தான் இருந்தது ரயில் பிரயாணத்தினால். தன் வீட்டில் என்றால் இதற்குள் களைப்புத்திர புரண்டு உருண்டு ஒரு தூக்கமும் தூங்கியிருப்பாள். ஆனால் வந்த இடத்தில் அந்த மாதிரி சௌகரியப்படுமா?

முதன்முதலில் புவனாவை அங்கு விட்டுச் சென்ற போது "புவனா, உனக்குத் தங்கம் போல் மாமியார் கிடைத்திருக்கிறாள். அவளை உன் தாயாக எண்ணி அவள் மனதும், உன் புருஷன் மனதும் கோணாமல் நடந்து கொள்" என்று புத்தி சொல்லிவிட்டுப் போனது அவளுக்கு நினைவு வந்தது. அது எவ்வளவு தூரம் அமுலில் இருக்கிறது என்பதை

அவள் இன்னும் பூரணமாகத் தெரிந்து கொள்ளவில்லை. ஆனலும் புவன வெகு நேரம் ஆற்றிக் கொண்டிருந்த காப்பியைக் குடிக்காமல் அப்படியே வைத்து விட்டுப் போனதும், மாமியாருக்கு ஒத்தாசையாக சமையலில் கூடமாட வந்து வேலை செய்யாததும் மனதின் ஒருபுறத்தில் உறுத்தத்தான் செய்தது. அவளிடம் அதைப்பற்றி மற்ருேர் முறை சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

புவனவையும் மாப்பிள்ளையையும் அழைத்துக் கொண்டு போவது பற்றி எப்பொழுது பிரஸ்தாபிக்கலாம் என்றும், ராஜம்மாளையும் வந்து அவர்களுடன் பத்து நாளைக்கு இருக்கச் சொல்ல வேண்டும் என்றும் யோசனை செய்து கொண்டிருந்தவளுக்கு திடீரென்று, தான் இங்கு வருவது பற்றிய பேச்சு எழுந்த போது தனக்கும், தன் கணவருக்கும் நடந்த விவாதங்கள் எல்லாம் மீண்டும் நினைவுக்கு வந்தன.

அந்த விவாதங்கள் எல்லாம் முடிந்து தன் மகளையும் மருமகனையும் வீட்டுக்கு அழைத்து வருவதில் எந்த விதமான கௌரவமும், அந்தஸ்தும், மதிப்பும் குறையாதென்ற முடிவுக்கு வந்து தன் கணவரிடம் கூடக் கேட்காமல் தானும் முத்துவுமாகப் புறப்பட்டு வந்து விட்டதை நினைத்து, தனக்குள் சிரித்துக் கொண்டாள். 'நம் மனச் சாட்சிக்குத் துரோகம் செய்யாமல் நாம் நடந்து கொள்கிருேம்' என்ற எண்ணம் அவளுக்கு இந்த விஷயத்தில் போதுமான அளவு தைரியத்தையும், துணிவையும் கொடுத்தது. தான் செய்வது தவறு அல்ல என்ற நினைவு அவள் உள்ளத்தில் உறுதியாகப் படிந்திருந்தது. இத்தகைய எண்ணங்களில் மூழ்கியிருந்த காமாக்ஷியம்மாளின் இமைகள் சோர்வுற்றுக் குவிந்தன.

சற்று நேரம்தான் ஆகியிருக்கும். "அத்தான்!" என்ற சப்தத்தைக் கேட்டு தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு எழுந்து நின்ருள் காமாக்ஷியம்மாள், கண்ணைக் கசக்கி விட்டுக்கொண்டு. தன்னை மறந்து சற்று நேரம் கண்ணை மூடியது அவளுக்கு அந்த சமயத்தில் உறுத்தியது என்ருலும் சமையலில் மூழ்கியிருந்த ராஜம்மாளோ அல்லது வெளியில் சுவாரஸ்யமாய்ப் பேசிக் கொண்டிருந்த புவனவோ, முத்துவோ இதைக் கவனிக்கவில்லை என்று அறிந்து கொண்டது அவளுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. தலையை நிமிர்த்தி யார் வந்திருக்கிறது என்று பார்த்தாள்.

"எப்ப வந்தீர்கள்? மாமா, மாமி வந்திருக்கிருர்களா?" எனக் கேட்டான் அப்போதுதான் ஆபீசிலிருந்து வந்த சேகரன். அவனது வலதுகையில் காய் கறிகளும், சில சாமான்களும் நிறைந்த ஒரு பை இருந்தது. இடது கையில் சில ஆபீஸ் காகிதங்கள் இருந்தன. பையை அங்கு நின்ற புவனவிடம் கொடுத்து விட்டுச் சமையலறைப் பக்கம் திரும்பினன். ஒருபுறம் ஒதுங்கி நின்ற காமாக்ஷியம்மாளைக் கண்டதும் "எப்போது வந்தீர்கள்?" என்று கேட்டான்.

"வந்து கொஞ்ச நேரம்தான் ஆச்சு. வரும்போது நாலு மணியிருக்கும்" என்ருள். மாமா வராதது பற்றியும், அவர்கள் காப்பி சாப்பிட்டு முடித்ததைப் பற்றியும் கேட்டு விசாரித்துக் கொண்டான். உடைகளை மாற்

றிக்கொண்டு கை கால் அலம்பி விட்டு வந்தான். ராஜம்மாள் பலகாரம் வைத்தாள். சாப்பிட்ட பின் பாயை எடுத்துக் கொண்டு, "வாருங்கள், வீதித் திண்ணைக்குப் போகலாம்" என்று முத்துவை அழைத்துக் கொண்டு சென்றான். பாயை விரித்து இருவரும் உட்கார்ந்தார்கள். புவனா வெற்றிலைத் தட்டத்தைக் கொண்டு வந்து வைத்துவிட்டுச் சென்றாள்.

முத்துசாமி என்னவோ யோசனை செய்து கொண்டே திடீரென்று "அத்தான், இன்று ஏதாவது கூட்டம் நடக்கிறதா இந்த வட்டாரத்தில்?" என்றான்.

முத்துசாமியின் இந்தக் கேள்வி சேகரனுக்கு ஒரு புதிராக இருந்தது. செல்வத்திலும் சுகத்திலும் சதா புரண்டு கொண்டிருக்கும் முத்துசாமி போன்றவர்களுக்கு பொதுக் கூட்டங்களின் மேல் எப்படிப் பற்று உண்டாயிற்று என்று அறிந்துகொள்ள அவன் மனம் விரும்பியது. விபரமாகக் கேட்டு அதை யெல்லாம் தெரிந்து கொண்டான். ஒரு செல்வந்தர் மகன்—ஒரு பிரபல தாசில்தாரின் மகன்—ஒரு நல்ல பிரசங்கியாக வருவதும், பொதுஜன சேவையில் ஈடுபட முயலுவதும் தேச முன்னேற்றத்திற்கான நல்ல அறிகுறிகள் என்று நினைத்தான் சேகரன். அதை முத்துவிடமும் சொல்லிப் பாராட்டினான். சேகரனுடைய பாராட்டுதலும், உற்சாக வார்த்தைகளும் முத்துவுக்கு ஒரு புதிய நம்பிக்கையை, புதிய பலத்தை, புதிய ஆவேசத்தை அளித்தன. கடைசியாக சேகரன், "உன்னைப் போன்ற வைர நெஞ்சுடையவர்களால்தான் நம் நாடு முன்னேறி, எல்லாவகையிலும் தலை நிமிர்ந்து நிற்கும் என்பது என் திட நம்பிக்கை" என்று கூறிய போது முத்துவின் உற்சாகம் புது வெள்ளம் போல் கரை புரண்டு ஓடியது. அந்த இன்ப வெள்ளத்தில் ஏதேதோ கனவுகள் கண்டபடி வெகு நேரம் நீந்திக் கொண்டிருந்தான் முத்துசாமி.

(தொடரும்)

★

"அறிவின் வழிச் செல்பவர்களுக்கு வாழ்க்கை ஒரு ஹாஸ்ய நாடகம்; உணர்ச்சியின் வழிச் செல்பவர்களுக்கு அது ஒரு சோக நாடகம்"

— வால்போல்.

"ஒருவனைப் பற்றிச் சந்தேகப் பட்டால் அவனை வேலைக்கு அமர்த்திக் கொள்ளாதே; வேலைக்கு அமர்த்திக் கொள்வதென்றால் அவனைப் பற்றிச் சந்தேகப் படாதே"

— கன்பியூசியஸ்.

பழமொழிகள்

அ. கிருஷ்ணமூர்த்தி

மனிதனுடைய நீண்ட அனுபவத்தின் சுருங்கிய வார்த்தைகள் பழமொழிகள். உலக வாழ்க்கையில் மனிதன் பலவிதத்திலும் கண்டறிந்த உண்மைகளே பழமொழிகள்.

அவை உண்மை மொழிகளாக இருப்பதால்தான் நீண்ட காலம் நிலைத்திருக்கின்றன. அப்படி நெடுங்காலம் நிலைத்து வந்தால்தான் அவை பழ மொழிகள் என்று அழைக்கப் படுகின்றன.

ஒருவன் தான் கண்ட உண்மைகளைப் புத்தகத்தில் எழுதுவது போல, ஒரு சமூகம் தனது உண்மைகளைப் பழமொழி வாயிலாக வெளியிடுகின்றது.

புத்தகம், படித்தவரிடம் மட்டும் பரவியிருக்கும்; பழமொழியோ படித்தவர் படிக்காதவர் என்ற வேறுபாடில்லாமல் சமூகம் முழுவதும் பரவியிருக்கும். எனவே, புத்தகத்தை விடப் பழமொழி சமூகத்தில் அதிகச் செல்வாக்குடன் நிலைத்திருக்கிறது.

ஒரு சமூகத்தின் அநுபவம், கலை, நாகரிகம், மனப்பான்மை, புத்தி கூர்மை இவற்றை யறிந்துகொள்வதற்குள்ள முக்கியமான சாதனங்களில், பழமொழியும் ஒன்று.

உலகத்தின் இயற்கை நிகழ்ச்சிகளைப் பொறுத்த வரையில் எங்கும் மனிதனுடைய அநுபவம் ஒரே மாதிரிதான். ஆனல் அந்த தேசத்துப் பழக்க வழக்கம், சரித்திரம், மொழி, கலை இவற்றைப் பொறுத்து மனிதனுடைய அநுபவம் இடத்துக்கு இடம் கொஞ்சம் வித்தியாசப் படுகிறது. மனிதனுடைய அநுபவம் ஒரேமாதியாயுள்ள விஷயங்களில் பல தேசத்துப் பழமொழிகளும் உணர்த்துகிற உண்மைகள் ஒரே மாதிரிதான். பழக்க வழக்கத்தைப் பொறுத்து அதுவும் வித்தியாசப்படும்போதுதான், பழமொழியும் தேசத்துக்குத் தேசம் வித்தியாசப் படுகிறது. இப்படி வித்தியாசப்படும் இடங்கள் மிகவும் குறைவு.

நாகரிக மடைந்த எல்லாச் சமூகத்திலும் பழமொழிகள் நெடுங்காலமாகத் தோன்றி வளர்ந்திருக்கின்றன. மனிதன் புத்தகம் எழுதக் கற்றுக் கொள்வதற்கு முன்பே பழமொழிகள் தோன்றி விட்டன.

மனிதனுடைய மனேசக்தி படிப்படியாக வளர்ந்து வந்திருக்கிறது. ஒன்றைக் கூர்ந்து கவனிப்பதும், அநுபவத்தை அறிவாக மாற்றுவதும், சிந்தனை சக்தியும், ஞாபக சக்தியும் அதிகப்பட்ட

காலத்தில்தான் சமூகத்தில் பழமொழிகள் உண்டாயின. சுருக்க மாகச்சொன்னால் சரித்திர காலத்துக்கு முன்பே பழமொழிகள் தோன்றிவிட்டன.

பழமொழியின் லட்சணங்கள் சில உண்டு. அது ஒரு அநுபவ உண் மையை உணர்த்த வேண்டும்; சொன்னால் சட்டென்று மனதில் பதி யக்கூடியதாய் இருக்கவேண்டும்; எல்லோருக்கும் எளிதாகவும் இருக்க வேண்டும். பழமொழிகள் எல்லாம் பெரும்பாலும் இப்படித்தான் இருக்கின்றன.

ஆங்கிலத்தில், ஆங்கில நாட்டுப் பழமொழிகள் எல்லா வற்றையும் சேர்த்துத் தொடுத்துப் புத்தகங்கள் வெளி வந்திருக்கின்றன. எல்லாப் பழமொழிகளையும் தொகுத்து, திருத்தி, வகைப்படுத்தி, விளங் காத பழமொழிக்கு விளக்கம் எழுதிச் சாதாரண மாகவும், அகராதி வரிசையிலும் பல புத்தகங்கள் வெளியாகி யிருக்கின்றன. ஆங்கிலப் பழமொழியோடு மட்டுமல்லாமல், பல தேசத்துப் பழமொழிகளையும் மொழி பெயர்த்தும் வெளியீடுகள் வந்திருக்கின்றன. ஒரு தேசத்துப் பழமொழியை இன்னொரு தேசத்துப் பழமொழியோடு ஒப்பிட்டுப் படிப்பதற்கு இது சிறந்த சாதனம்.

தமிழில் அப்படிப் பழமொழிகள் புத்தகமாக அச்சில் வெளி வந்த துண்டா இல்லையா என்றால் தமிழ்ப் படித்தவர்களுக்கே பலபேருக்கு இது தடுமாற்றமான கேள்வியாகிவிடும். தமிழ் பல துறையிலும் பிற் பட்டு நிற்பது போல இதிலும் பிற்பட்டுத்தான் நிற்கிறது. புத்தகங் கள் அதிகமாக வெளிவரும் இக்காலத்தில், இக்குறை விரைவில் நீங்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம். இருந்தாலும், இப்பொழுது பழ மொழிப் புத்தகங்கள் இரண்டொன்று இருக்கின்றன. காலஞ்சென்ற டி. அனவரத விநாயகம் பிள்ளையவர்கள் பல்லாயிரக்கணக்கான தமிழ்ப்பழமொழிகளை ஒன்றாகத்திரட்டி அகராதி வரிசையில் பல்லாண்டு களுக்கு முன்பு வெளியிட்டார். இப்பொழுது அப்புத்தகம் கிடைப் பது அருமை. இன்னும் சில்லரைப் புத்தகங்களாக இரண்டொன்று இப்பொழுது வெளியாகி யிருக்கின்றன.

அச்சியந்திரம் வந்த பிற்பாடு, இந்தப் புத்தகங்களைத் தவிர வேறு எதுவும் காணப் படவில்லை. ஆனால் அச்சியந்திரம் வருவதற்கு முன்பு எழுந்த தமிழ்ப் பழமொழி நூல்களைப் பற்றிக் கொஞ்சம் விரிவாக எழுதலாம்.

பழமொழி என்பதன் இலக்கணம் இன்னது என்று தொல்காப்பி யத்திலேயே சொல்லப் பட்டிருக்கிறது. நுட்பமும், சுருக்கமும், எளிமையுமுடையதாய் ஒரு சிறந்த உண்மையை விளக்கவருவது பழ மொழி என்று தொல்காப்பிய இலக்கணம் கூறுகின்றது. தமிழ்ப் பழமொழிகளின் பழமையை அறிவதற்குத் தொல்காப்பியத்தில் விரி வாகக் காணப்படும் நுட்பமான பழமொழி இலக்கணமே ஒரு பெரிய சான்று.

"பல்லோர் கூறிய பழமொழியெல்லாம் தோழி! இன்றைக்கு உண்மையாகி விட்டதே" என்று சில பழமொழிகளைக் காதலி ஒருத்தி தன் தோழிக்கு எடுத்துரைப்பதாக அகநானூற்றில் அழகாக ஒரு பாட்டு அமைந்திருக்கிறது. அந்தக் காலத்துக்கு முன்பு வழங்கிய முக்கியமான 400 பழமொழிகள் எடுத்து அவற்றின் நீதிகளையும், உண்மைகளையும் விளக்கி 400 செய்யுட்கள் எழுதினர் ஒரு கடைச் சங்கப் புலவர். அந்த நூலுக்குப் "பழமொழி நானூறு" என்பது பெயர். காலஞ்சென்ற திரு. செல்வ கேசவராய முதலியார் அதை அச்சிட்டிருக்கிறார்.

பிற்பாடு காவியங்களிலும், கவிதைகளிலும் பழமொழிகளை அங்கங்கு காணலாம். சென்ற 300 ஆண்டுகளுக்குள் உலக நீதிகளையும், தருமங்களையும், விளக்கிச் "சதகம்" என்ற பெயரால் பல சிறு நூல்களைப் புலவர்கள் எழுதினார்கள். அவைகளில் கோவிந்த சதகம், தண்டலையார் சதகம் என்பவை முக்கியமானவை. தண்டலையார் சதகத்திலிருந்து உதாரணமாக ஒரு அடியைப் படிப்போம்.

"அரைக்காசுக்குப் போனதொரு மானம் பின் ஆயிரம் பொன் கொடுத்திடினும் திரும்பிடாதே." இன்னொன்று; "பனையின்கீழ் ஆவின் பால் பருகிடினும் பள்ளென்பார் தள்ளென்பார் கள்ளென்பாரே" பனைமரத்தின் அடியிலிருந்து நீ குடிப்பது உண்மையில் பசும் பாலே யானாலும், கண்டதும் உடனே யாரும் கள்ளென்றுதான் சொல்வார்கள். இடத்தைப் பொறுத்து நல்லதும் கெட்டதாகவே நினைக்கப்படும். இது உலகத்தின் விபரீதம்! என்பது இதன் கருத்து.

ஆத்திச் சூடி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை முதலான சின்னஞ்சிறு நூல்களில் "அறஞ்செய விரும்பு," "இளமையிற் கல்," "ஊக்கமது கைவிடேல்," "ஊருடன் கூடிவாழ்" "பாலோடாயினும் கால மறிந்து உண்" "சூதும் வாதும் வேதனை செய்யும்" என்றெல்லாம் வரும் நீதிகள் பழமொழிகளைப் போலவே அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு வரியில் சிறந்த நீதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. நீதிக்கும் பழமொழிக்கும் வேறுபாடு உண்டு. சில இடங்களில் இரண்டும் ஒரே மாதிரியாக அமைந்திருப்பதுண்டு.

இனி, பழமொழியின் சில இயல்புகளைப் பார்ப்போம்.

"**நா**யைக் கண்டால் கல்லைக்காணோம், கல்லைக் கண்டால் நாயைக் காணோம்" என்று ஒரு பழமொழி சர்வ சாதாரணமாய் வழங்கி வருகிறது. இந்தப் பழமொழி இப்பொழுது உண்டானது போலவும் பேச்சு வழக்கில் இருப்பதாகவும் காணப்படுகிறது. ஆனால், உண்மையில் இது 1800, ஆண்டுகளுக்கு முன்பே வழக்கத்தில் இருந்திருக்கிறது என்றால் பலருக்கு வியப்பாக இருக்கும். "கற் கண்டால் நாய் காணுவாறு" என்று பழைய "பழமொழி நானூறு" என்ற அந்தக் காலத்து நூலில் எடுத்துக்காட்டப் பட்டிருகிக்றது. இம்மாதிரி பல பழமொழிகள் உள.

சில பழமொழிகள் அந்தக் காலத்து நாகரிகங்களை விளக்க உதவுகின்றன. "தனக்கில்லாத அழகு தண்ணீர்ப் பானையைப் பார்த்தால் தீருமா?" என்பது ஒரு பழமொழி. கண்ணாடி அதிகமாகப் பரவாத காலத்தில் பொது மக்கள் தண்ணீர் நிழலிலும் தமது உருவத்தைப் பார்ப்பதுண்டு. இந்த வழக்கம் இந்தப் பழமொழியில் வெளிப்படுகிறது.

கடன்காரனை வைத்த கழுவுண்டா? என்ற பழமொழி கடன் வாங்கி அதைக் கொடுக்கத் தவரியவனைக் கழுவிலேற்றும் பழைய வழக்கத்தைக் காட்டுகிறது.

சிம்ம சொப்பனங் கண்டதுபோல; ஓடினவளுக்கு ஒன்பதாமிடத்தில் குரு – என்ற பழமொழிகள் சகுனத்தையும், சோதிடத்தையும் அடிப்படையாகக் கொண்டு பிறந்தவை.

காக்கை உட்காரப் பனம் பழம் விழுந்தது போல, புகையிருந்தால் நெருப்பிருக்கும் – என்பவை சில தருக்க நியாயங்களை விளக்குவதற்காக வந்த பழமொழிகள்.

ஆதாயமில்லாத செட்டி ஆற்ருேடு போவானு? சோழியன் குடுமி சும்மா ஆடுமா? – என்ற பழமொழிகள் சில வகுப்பாருடைய மனோபாவத்தை அடிப் படையாகக் கொண்டு வந்தவை.

இரண்டொரு பழமொழிகள் வடமொழியிலிருந்து தமிழுக்கு வந்துள்ளன. "யதா ராஜா ததா பிரஜா" – "அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்" என்பது ஏற்ற உதாரணம். மௌனம் கலக நாசம்; லங்கணம் பரம ஔஷதம்; யதார்த்தவாதி வெகுஜன விரோதி என்பவையும் அப்படியே.

"மக்காவுக்குப் போய்க் கொக்குப் பிடிப்பது போல," "நவாப் பத்தனை ஏழை புலியத்தனை சாது" என்ற பழமொழிகள் மகம்மதியர் தமிழ் நாட்டில் பரவிய பிறகு ஏற்பட்டவை.

திரைகட லோடியும் திரவியம் தேடு; ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு; பல துளி பெருவெள்ளம்; சிறு துரும்பும் கலந் தேக்கும்; கப்பல் கவிழ்ந்தாலும் கன்னத்தில் கை வைக்காதே; பூவிற்ற காசு மணக்குமா, புலால் விற்றகாசு நாறுமா; காணியாசை கோணி கேடு – என்ற பழமொழி யெல்லாம், தமிழருடைய வியாபார குணத்தையும், சிக்கனத்தையும் காட்டுகின்றன.

இவ்வாறு வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தைப் பற்றியும் ஏராளமான பழமொழிகள் தமிழில் இருக்கின்றன. ஒவ்வொன்றைப் பற்றியும் விளக்கஞ்சொல்லத் தேவையில்லை. பொதுவாகச் சில பழமொழிகளை வரிசையாகத் தருகிறேன். அவை யெல்லாம் எவ்வளவு நுட்பமாகவும், பழக்கத்தோடும், அநுபவத்தோடும் ஒட்டினவையாகவும் இருக்கின்றன என்பதை நண்பர்கள் சிந்திக்க வேண்டும்.

"நுண்ணிய கருமம் எண்ணித் துணி"

"பனை ஏறி விழுந்தவனைக் கடா ஏறி மிதித்தது போல்"

"பாலுக்குங் காவல் பூனைக்குந் தோழன்"

"உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா"?

"கோழி மிதித்துக் குஞ்சு முடமாகுமா"

"சொல்லிக் கொடுத்த சொல்லும் கட்டிக் கொடுத்த சோறும் எவ்வளவிற்கு நிற்கும்?"

"மாடு மேய்க்காமல் கெட்டது, பயிர் பார்க்காமல் கெட்டது"

"மின்னுவதெல்லாம் பொன்னல்ல"

"மோகம் முப்பது நாள் ஆசை அறுபது நாள்"

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

"குறையச் சொல்லி நிறைய அள"

"காக்கையின் கண்ணுக்குப் பீர்க்கம்பூ பொன்னிறம்"

"குப்பை உயர்ந்தது கோபுரம் தாழ்ந்தது"

"கணக்கன் கணக்கறிவான் தன் கணக்கைத் தான் அறியான்"

"நூற்றைக் கெடுத்தது குறுணி"

"கப்பலோட்டி வாழ்வு காற்றடித்தால் போச்சு"

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ?"

"தான் ஆடாவிட்டாலும் தன் சதை யாடும்"

"நரிக்குக் கொண்டாட்டம் நண்டுக்குத் திண்டாட்டம்"

"அழுதழுது பிள்ளை அவள்தான் பெறவேண்டும்"

"இல்லாது பிறவாது அள்ளாது குறையாது"

"ஏறவிட்டு ஏணி வாங்குவதுபோல"

"குருவித்தலையில் பனங்காய் வைத்தது போல"

"விளையும் பயிர் முளையிலே தெரியும்"

"ஆயிரங் காக்கைக்கு ஒரேகல்"

"வருந்தாதார் வாழ்க்கை திருந்துவதில்லை"

"கற்றலில் கேட்டலே நன்று"

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"

"பாடம் ஏறினும் ஏடது கைவிடேல்"

இவ்வாறு தமிழில் ஏராளமான பழமொழிகள் இருக்கின்றன. இவையெல்லாம் நெடுங் காலமாக வழங்கி வரும் பழமொழிகள். சில பழமொழிகள் நாளடைவில் வழக்கத்திலிருந்து மறைந்து விட்டன. அவை மிக மிகச் சொற்பமானவைதான். ஆனால் புதிது புதிதாக உண்டான பழமொழிகள் ஏராளம். காலத்துக்குக் காலம், அவ்வக் காலத்துப் பழக்க வழக்கங்களை ஒட்டி புதுப் பழமொழிகள் மேலும்

மேலும் வளரக்கூடியவை. அவை இன்னும் நாளடைவில் பெருகிக் கொண்டே போகும்.

இன்னும் மற்ற மொழிகளிலுள்ள பழமொழிகளையும் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும். அவைகளைத் தமிழில் எளிதாக மொழி பெயர்க்கவும் முடியும். உதாரணமாக ஆங்கிலத்திலிருந்து ஒரு மூன்று பழமொழிகளை இங்கு மொழி பெயர்க்கலாம்.

1. April showers bring forth may Blossoms

"மேற்கே மழையானால் கிழக்கே வெள்ளமுண்டு."

2. A fair face may hide a foul heart

"முகம் சந்திர பிம்பம் அகம் பாம்பின் விஷம்"

3. Wine in the bottle doth not quench the thirst.

"கண்ணாடியிற் கண்ட பணம் கடன் தீர்க்க உதவுமா?"

தமிழின் நேரான பழமொழிகள் இல்லாத இடத்தில், மற்ற மொழிகளின் பழமொழிகளைத் தமிழுக்கு ஏற்றாற்போல், பழமொழி வடிவத்தில் ஆக்கிக் கொள்ளலாம். தமிழில் நேரான பழமொழிகள் இருக்கும்போது அப்படி மொழி பெயர்க்க வேண்டிய அவசியமில்லை. அந்த அர்த்தத்தைக் கொடுக்கக் கூடிய தமிழ்ப் பழமொழியைக் கண்டு அதை வழங்கிக் கொண்டால் போதும். அதுவே சிறந்தமுறை.

உதாரணமாக "Jack of all trades and master of none" என்பதைப் "பலமரம் கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டான்" என்று மொழி பெயர்க்கலாம். "Knowledge without practise makes but a half artist" என்பதைப் "பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாது" என்று மொழி பெயர்க்கலாம்.

பழமொழிகளைக் கிராமத்தார் பேச்சில்தான் அதிகமாகக் காணலாம். அதிலும் பெண்களிடத்தில், இன்னும் வயதானவரிடத்தில் அவை அதிகமாக வழங்குகின்றன. ஒரு பெரிய செய்தியை ஒருவருக்கொருவர் பழமொழி மூலமாகவே பேசித் தீர்த்துவிடுவார்கள். ஒருவருக்கொருவர் குத்தலாகப் பேசிச் சண்டைத் தகராறுகள் கூடப் பழமொழி மூலமாக நடந்துவிடுவதும் உண்டு. தமிழர்கள் பழமொழி உண்டாக்குவதிலும், வழங்குவதிலும் அதிக ஆர்வ முள்ளவர்கள். நீதி, நியாயம், சம்பிரதாயம் – சிலவற்றை அதிகம் பேசும் ஒருவனை "அவன் பழமொழி படித்தவன், அவன் அப்படித்தான் பேசுவான்" என்று சொல்வதைப் பலர் கேட்டிருக்கலாம். பழமொழிப் படிப்பு சிந்தனைக்கு விருந்து.

★

காதல் கடிதம்

கே. ஸ்ரீனிவாசன், எம். எஸ்ஸி.

அன்பே எனை நீர் அறியா விடினும்
எந்த ஊரவரோ, யாருடை மகளோ,
என்ன குலமோ, சாதி, மதமோ,
அழகோ, குணமோ, அறிவில் முடமோ,
என்ப தொன்றும் தெரியா விடினும்;
கன்னிப் பெண்கள் அன்னியரிடத்தில்
முறை யிட்டுரைத்தல் முறையன் றெனினும்;
பேதமை, நாணம், பெண்மைக் குணங்கள்
என்னிடம் இல்லையென் றெண்ணி விடினும்;
ஓலை கண்ட நீர் கோபம் கொண்டு
'வெறியவள் இவ' ளெனவெறுத்து விலக்கினும்;
'யாரோ, பாவம் பைத்தியம்' என்றும்
நண்பருக் கோலையைக் காட்டி நகைக்கினும்;
அல்லது ஒருக்கால் ஆவல் கொண்டென்
மனதினை, நெஞ்சினை மகிழ்வுறச் செய்யினும்;
அறியாவிடினும், தெரியாவிடினும்
வெறுக்கினும், விலக்கினும், பழி சுமத்திடினும்,
என் முறை கேளும்; என்குறை அறிந்திடும்
சிதைந்த இதயம், சிதையாத் துயரம்,
என் உயிர், உள்ளம், காதல் வெள்ளம்,
எல்லாம் உமதென் றறிந்திடுவீரே.
கனவும், நினைவும், மனச்சஞ்சலமும்,
நகை யிழந்ததுவும், உடல் மெலிந்ததுவும்
உம்மைப் பற்றியென் றுணர்ந்திடுவீரே!

ஆசை வார்த்தைகள் பேசி, மயக்கி,
வசியம் செய்ய வல்லமையில்லை,
தூதனுப்பத் தோழியர் இல்லை.
புரோகிதர் தரகர் உதவிகொண்டு
பேரம் பேசப் பெற்ருேர் இல்லை
கடிதம் எழுதவும் கற்றதில்லை.

ஆகவே வார்த்தைகள் அதிக மிருப்பின்
அறிவின்மை யென்று அறிந்திடுவீரே.

தெரிந்தோர் என் பெயர் சரளா என்பர்
படிப்பில் கொஞ்சம் பற்றுண் டென்பார்
வெட்கி வார்த்தை யாடா விட்டால்
அழகின் மமதை அதிகமென்பார்.
உள்ளக் கிளர்ச்சியைச் சொல்லா விடினும்
கபடு, வஞ்சனை கிடையா தென்பார்.
நீளச்சொல்லி ஒரு பலன் இல்லை,
நானும் மற்ற நாரியர் போலே
ஆடவர் அன்பை நாடுகின்றேன்.
உள்ளப் புயலின் வெள்ளப் பெருக்கை
எழுத்துகளாக்கி எழுதுகின்றேன்.
நாணம், மானம், அருமை, பெருமை,
யாவும் விட்டு அடுத்த வாக்கியம்,
என் கண்ணீரால் எழுதுகிறேன்.
ஊரும் பேரும் கீழே காண்க
மற்றவை யெல்லாம் நேரில் அறிக.

ஒரு நாள் உம்மை வழியில் பார்த்தேன்,
மறு நாள் ஓரிடம் பேசக் கேட்டேன்.
ஆசையின் சூழ்ச்சியால், நீர் அறியாமல்
பலநாள் பலவிடம் பார்த்து மகிழ்ந்தேன்
கண்டேன், கேட்டேன், காதல் கொண்டேன்.
இதயத்தை உமது இருப்பில் வைத்தேன்.
என் உயிர், என் பெயர், வெட்கம் மானம்,
வாழ்வின் இன்பம், வரளாத்துன்பம்,
அனைத்தையும் உம்மிடம் அடகு வைத்தேன்.
ஆயினும் உம்மிடம் அன்பின் யாசகம்
கேட்கவில்லை யென்றறிந்திடுவீரே.
ஆர்வம் வேண்டும் யாசகம் வேண்டாம்;
கனி மொழி வேண்டும்; கருணை வேண்டாம்;
இரக்கம் வேண்டாம், இழிவு வேண்டாம்
காமமென்னும் மாசுப் பண்டம்,
வாங்கும், விற்கும், வாணிகராயின்
விலை பொருள் வேண்டாம், வீண் பழி வேண்டாம்
காதலின்றேல் யாதும் வேண்டாம்.

★

நமஸ்காரம்!

தாஜ

புதிதாகப் போட்ட கான்கிரீட் ரஸ்தாவில் செல்லும் 'பியூக்' கார்போல் தமக்கே உரிய தனிப் பாதையில் ராஜ நடை நடந்து செல்பவர் இரண்டெழுத்து இலக்கியப் பிரமுகர்களில் ஒருவரான 'சுகி' என்னும் என். சுப்ரமண்யம். பிறரது முறையையோ, நடையையோ காப்பி யடிக்காமலும், தழுவாமலும் தமது சொந்தப் பாணியிலேயே வெகு காலமாகக் கட்டுரை, கதைகளை எழுதி வருபவர் இவர். விரல் விட்டு எண்ணக் கூடிய இன்றைய ஹாஸ்ய எழுத்தாளர்களில் 'சுகி'க்கு ஒரு நல்ல ஸ்தானம் உண்டு.

'சுகி'யின் ஹாஸ்யம் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தது என்பதை முன்பே அறிந்திராதவர்கள் அவரது 'யுத்தகால இலக்கியக்'கட்டுரைகள் 'வசந்த'த்தில் தொடர்ச்சியாக வெளிவந்தபோது நன்ருக அறிந்து கொண்டார்கள். யுத்த காலத்தில் ஏற்பட்ட எத்தனையோ மாறுதல்களை ஹாஸ்யக் கண் கொண்டு பார்த்து, அனுபவித்து, அதை மற்றவர்களும் கண் முன் நடப்பது போல் பார்த்து அனுபவிக்கும்படி எழுதிய முழுப் பெருமையும் 'சுகி'க்கே உரியது. அப்பெருமை அவருக்குத்தான் தகும்.

இப்பொழுது மட்டுமல்ல, ஏழெட்டு வருஷங்களுக்கு முன்பிருந்தே 'சுகி யின் ஹாஸ்யக் கட்டுரைகளும், சிறுகதைகளும் இலக்கியப் பிரசித்தி பெற்றிருந்தன என்பதை சமீபத்தில் 'நமஸ்காரம்' என்ற தலைப்புடன் வெளிவந்திருக்கும் அவரது கட்டுரை, கதைத் தொகுதிகளிலிருந்து அறியலாம். விஷயச்சிறப்பிலும், அழகிலும், எழுதும் பாணியிலும் அவை இப்போதைய விஷயங்களுக்கு எவ்வகையிலும் இளைத்ததல்ல என்று கனத்தகுரலில் ஒலிபரப்புகின்றன.

'நமஸ்கார'த்தின் முதற்கட்டுரையான நமஸ்காரமே நமது கவனத்தை வெகுவாகக் கவர்ந்து விடுகின்றது. அடுத்தபடியாக நம் கவனத்தைக் கவர்பவன் அணுகுண்டு பயில்வான். அவனது பழக்க வழக்கங்களும், அதிதீர வீர பராக்கிரமங்களும் படித்துப் படித்து ரசிக்க வேண்டியவை. கட்டுரையில்பரவி நிற்கும் உயர்ந்த ஹாஸ்யம் அணுக்குண்டு பயில்வானை ஒரு சிறந்த சிருஷ்டி யாக்குகின்றது.

'சுகி'யின் திறமைக்கும், சிறந்த கற்பனைக்கும் 'எமனுக்கும் எமன்' என்ற சற்றுநீண்ட ஹாஸ்யக்கதை சிறந்த உதாரணம். (இக்கதையை ஆசிரியரின் அனுமதியும் சம்மதமும் பெற்று ஒரு தனி ஹாஸ்யப் படமாக எடுத்தால் ரொம்ப ரொம்ப ஜோராயிருக்கும் என்று பட முதலாளிகளின் காதில் ரகஸ்யமாய்ச் சொல்லிவைக்கிறேன்!)

உள்ளத்தைத் தொடும் அருமையான சிறுகதை எழுதக்கூடியவர் 'சுகி' என்பதை இத்தொகுதியில் வெளியாகியிருக்கும் 'சிவகாமியின் விடுதலை' என்ற சிறுகதை உள்ளங்கை உருளைக்கிழங்கு போல் காட்டுகிறது. ஒரு மூட்டைக்கு ஒரு கைப்பிடி அரிசி தரம் பார்க்கப் போதுமல்லவா?

வாசகர்களுக்கு 'நமஸ்கார'த்தின் வாயிலாக 'சுகி' தமது இதயக்குரலை ஒலிபரப்பி, அஞ்சலும் செய்கிருர்.

நமஸ்காரம். ஆசிரியர்: 'சுகி', கார்த்திகேயினி பிரசுரம், இராமச்சந்திரபுரம். விலை ரூ. 2—8—0.

கவிதை நாடகம் :

தேன்கூடு

கே. சி. எஸ். அருணசலம்

மரங்களடர்ந்த ஒரு காடு. சூரியன் நடுவானத்திற்கு வரும் சமயம்.

கட்டான உடல் கொண்ட ஒரு குறவன் இடுப்பில் ஒரு வேட்டியும், தலையில் ஒரு அரைத்துண்டும் சுற்றியவனய் ஒவ்வொரு மரமாகப் பார்த்துக் கொண்டு வருகிருன். சிறு கத்தி, எண்ணெய்த் துணி, தீப்பெட்டி முதலியவற்றைக் கொண்ட ஒரு பாளைக் கூடை அவன் முதுகில் தொங்குகிறது. கையில் ஒரு நீண்ட கோல். இவ்வாறு வரும் அவனது கண்களில் ஒரு மரக் கொம்பில் தொங்கும் ஒரு பெரிய தேன்கூடு படுகிறது.

குறவன் :

கொத்தாகத் தொங்குதடா! கொடம்போல தேன்கூடு
இத்தானெ பொளுதாத்தான், சுத்தி எளைச்சேனே
எத்தானெ பெருசாக இருக்குதடா! என்னதிஷ்டம்!
குத்திக் கலெச்சிடலாங் கோல்பந்தங் காட்டிடலாம்.

காட்டுக்கு வாரப்பொ குள்ளநரி கண்டுட்டு
வேட்டைக்கு வந்ததுதா வீணகப் போயிடுமா?
கூட்டோ டெடுத்திந்தக் கொடத்திலே தேன்பிளிஞ்சு
ஊட்டுக்குப் போரப்போ ஒய்யார மாப்போவேன்.

கையிலுள்ள நீண்ட கோலில் எண்ணெய்த் துணி சுற்றித் தீ வைத்து தேன் கூட்டுக்குக் காட்டுகிருன். வெம்மை தாளாது கும்பலாகத் தேனீக்கள் வெருண்டு எழுந்து பறக்கின்றன. உடலும், சிறகும் கருகிச் சில தேனீக்கள் வீழ்கின்றன. புகை கூட்டை மூடிச் சூழ்கிறது.

சில தேனீக்கள் :

வேகு தேநம் வீடெலாம் — அவ்
வீணன் வீசும் தீயினல்
போக மார்க்கம் இல்லையே — நம்
புலன்கள் யாவும் சோருதே.

குஞ்செ லாமிங் கலறி — ஆவி
குலைந்து சாக நேர்ந்ததே

பஞ்சில் போல விரைவுடன் — தீ
பற்று மேநம் விட்டிலே.

மற்றும் சில :

கருகு தேநம் சிறகெலாம் — தீ
கண்ணை மூடிச் சூழுதே
ஒருவர் மேலே ஒருவராய் — நாம்
உணர்வி ழந்து சாகுறோம்

சருகு போலத் தீய்ந்து — நாம்
சாகும் காலம் வந்ததே
வருந்தித் தேடும் தேனை — அந்த
வம்பன் கொள்ள வாய்த்ததே.

இவ்வாறெல்லாம் புலம்பித் தேனீக்கள் கலங்கிச் சிதற அப்போது ஒரு தேனீ மட்டும், அந்த மனிதன் செய்த கொடுமையைத் தம் இனத்தவர் எதிர்க்காமல் உயிருக்கு அஞ்சி ஓடும் பேதைமையைக் கண்டு பெருஞ் சினத்தோடு ஒரு கிளையிலுட்கார்ந்து மற்ற தேனீக்களைக் கூவி அழைக்கிறது.

தேனீ :

தீமை வந்த போதிலே
திகைத்து நெஞ்சம் வாடுதல்
காமு கர்வாய் வீரர்கள்
கயவர் செய்கை அல்லவோ?
நாமிங் கென்ன கோடிநாள்
நலிவு றமல் வாழ்வமோ?
பூமி எங்கும் சுடலையாய்ப்
போகு மோநம் சாவினல்?

மலர்கள் எங்கும் தாவியே
மனம்ச லிக்க நாமெலாம்
பலதி னங்கள் தேடியே
பாது காத்த தேனிது
கலகம் செய்து பெற்றமோ?
களவு செய்து வந்ததோ?
விலகி நின்றம் மனிதன் தீ
விச அஞ்சி ஓடுவீர்!

அச்சம் மீறி ஓடிடும்
ஆண்மை யற்ற பேடிகாள்!

துச்சம் ஆகும் இவ்வுயிர்
துணிவு கொண்டு தாக்குவோம்!
பச்சை ரத்தம் பொங்கியப்
பாவி தேகம் சோர்ந்திடப்
பிச்செ றிந்து போரிலே
பெருமை யோடு மாளுவோம்!

இவ் வீரமொழி கேட்ட மற்ற தேனீக்களும் அதனுடன் சேர்ந்திட அந்த வீரத் தேனீ குறவனது உடல் மேலே தாவிக் கடிக்கிறது. மற்ற ஈக்களும் அதனைத் தொடர்ந்து அவனைச் சூழ்ந்து கடிக்கின்றன. ஆனாலும் என்ன? தீயாலும் அவன் கையாலும் அழிவதல்லாமல் வேறு என்ன முடிவு? ஒரு வாறு கக் குறவன் தேன் கூட்டை எடுத்துத் தன் வசமிருந்த குடத் திலே தேனைப் பிழிந்துகொண்டு, களிப்புடன் தன் புறங் கையை நக்கிக் கொள்ளுகிறான். பின் தேன் சக்கையைத் தன் பாளைக் கூடையில் போட்டு, அதனை முதுகிலே மாட்டிக் கொண்டு மகிழ்ச்சியோடு புறப்படுகிறான். அவன் மனத்திலே எத்தனையோ இன்ப எண்ணங்கள் எழுகின்றன.

குறவன் :

ராட்டுக்கே நாலுபணம் நல்லாக் குடுப்பாங்க
கூட்டோடெ ஈவந்து கொத்திக் கடிச்சாலும்
வூட்டுக்குப் போயெண்ணெய் ஒருகையி தேச்சுக்கலா
மூட்டை சொமந்தோமா? முள்ளுமரஞ் சாச்சோமா?
வித்தாலும் பத்துப்பணம் விளையாட்டாத் தருவாங்க
முத்தாயி மனசார முளுசாக மூணுபணப்
பித்தாளெக் காப்புரெண்டு பேசாமெ வாங்கிடுவேன்
சித்தபொளு தாச்சுமவ சிரிப்பாகப் பேசிடுவா.

(போகிறான்.)

அருகுள்ள இன்னொரு மரக் கிளையில் தன் காதற் கிளி யுடன் ஒரு கிளி இன்பமாகப் பேசி மகிழ்கிறது.

கண்ணின் மணியே! களைத்து அயர்ந்தாயோ?
எண்ணிட இனிக்கும் என்னுயிர் மருந்தே!
கானகம் எல்லாம் கனிகளைத் தேடி,
தேனினும் இனிக்கும் தீஞ்சொல் பேசி
என்னுடன் அலைந்த இளைப்போ? சொல்லாய்
இன்பமே வடிவாய் என்மனம் நிறைந்தாய்

இரும்பையும் குழைக்குநின் இன்மொழி யன்றிநான்
விரும்பிடும் பொருள்தான் வேறொன் றுள்ளதோ?
சிவந்தநின் அலகிலித் தீங்கனி அருந்தி
உவந்திடு என்றன் உயிரின் அமுதே!

இந்த மகிழ்ச்சியான நேரத்திலே குறவனால் அழிக்கப்பட்ட தேன் கூட்டிலிருந்து பெருந் துன்பப்பட்டு, உயிர் தப்பிய தேனீ ஒன்று இந்தக் கிளிக்கருகே வந்து உட்கார்ந்து, தன் இனத்தாருக்கும் தனக்கும் அந்த மனிதனால் நேர்ந்த தீமைகளை எல்லாம் சொல்லிப் புலம்ப, அந்தக் கிளி அதற்குத் தேறுதல் கூறுவதாய், மனித குலத்தில் உள்ள இழிவுகளையும், மனிதர்கள் தங்களைத் தாங்களே கொன்று குவித்து மடியும் பேதைத் தன்மையையும் கூறி, தம் இனத்தவராய மனிதரிடத்திலேயே ஒரு சிறிதும் பற்றில்லாமல், உலகைப் பிணக்காடாக்கி வருகின்ற கொடிய மனித இனம் நம்மை வருத்தியதற்காக இனி வருந்துதல் வீண்என்று தேற்றுகிறது. இந்தத் தேனீயின் புலம்பலையும் கிளி கூறுவதையும் நிழலுக்காக வந்த ஒரு அடிமை நாட்டுக் கவிஞன் கேட்டுக் கொண்டிருக்கிறான்.

கிளி :

கொடியதாய் நஞ்சைக் கொண்ட
நாகமும் கூடி வாழும்
இடியென உறுமிப் பாயும்
புலிகளும் இனத்தைக் கொல்லா
அடிமைகள் ஆண்டை என்ற
பேதங்கள் ஆக்கிக் கொண்டு
முடிவிலாப் பகைமைப் போரில்
மூழ்கிடும் மனிதக் கூட்டம்.

சாதிகள் கோடி பேசும்
சண்டையால் ஓய்ந்து போவார்
வீதியில் சந்தில் எல்லாம்
பசியினால் வீழ்ந்து சாவார்
நீதியைத், தூய தாக
நிலவிடும் காதல் தன்னை
ஓதுவார் கவிதை செய்வார்
வாழ்க்கையில் ஒன்றும் காணார்.

பஞ்சமும் பிணியும் தீர்ந்து
பண்புடன் வாழும் மார்க்கம்
கொஞ்சமும் எண்ணார் வாழ்வில்
கொடுமையே குறியாக் கொண்டார்

நஞ்சிலும் கொடிய நெஞ்சார்
நாணிலார் செய்கைக் காக
நெஞ்சது புலம்பி வீணே
நின்னுடல் சோர்ந்து போனாய்!

இவ்வாறு கிளி கூறக் கேட்ட தேனீ சற்று கழித்து மெது வாகப் பறந்து செல்கிறது. கிளி சொன்ன வார்த்தைகள் எல் லாம் அந்தக் கவிஞனின் நெஞ்சிலே சுடு சரங்களாய்ப் பாய் கின்றன. என்னென்னவோ எண்ணங்கள் அவன் உள்ளத் தில் மோதுகின்றன. கேவலம் விலங்கிலும், பறவைகளிலும் மனிதன் தாழ்ந்தவனா? வாழ்க்கையிலே அவைகளுக்கில்லாத பஞ்சமும், பிணியும், பேதா பேதங்களும் ஆறறிவு படைத்த மனிதனுக்கு ஏன் வந்தன? பட்டினியால் விலங்கும், பறவை யும் சாவது இல்லையாக, இந்தப் பரந்த உலகெங்கும் வாழ் கின்ற மனிதன் – எத்தனை எத்தனையோ புதுமைகளைச் செய் கின்ற மனிதன் – மட்டும் கிளி சொன்னது போல "வீதியில், சந்தில் எல்லாம் பசியினால் வீழ்ந்து" சாகிறானே என்று உள்ளம் குமுற எழுகிறான். அவன் கண்களிலே நீர் தேங்கு கிறது. சொல்ல முடியாத ஏதோ உணர்ச்சியுடன் பின் வரு மாறு பேசிக் கொண்டே செல்லுகிறான்.

தொல்லைகள் தீர வேண்டின்
சுதந்தரம் வேண்டும்; மக்கள்
எல்லோரும் ஒன்றே என்னும்
எண்ணமிங் கோங்க வேண்டும்
பல்லரும் தொழில்கள் செய்தும்
பசியினால் வாடும் மக்கள்
அல்லாது தெய்வம் இல்லை
என்பதை அறிய வேண்டும்

கல்வியில் பெருக்கம் வேண்டும்
கலைகளில் புதுமை வேண்டும்
சொல்லிலே உண்மை வேண்டும்
சோர்விலா உள்ளம் வேண்டும்
கல்லினுள் தேரை போல
உலகினை எட்டிக் காணாப்
புல்லிய நிலையை ஞானத்
தீயினாற் புகைத்தல் வேண்டும்.

(போகிறான்)

★

மாணிக்கம்

டி.சி. ராமசாமி

ஒரு நாள் ஸ்படிக மலைச் சாரலில் மாணிக்கத்தை நாடி வந்த சிலர் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தனர். ஒரு இளம் தம்பதிகளைத் தவிர மற்றவர்கள் ஒரு நண்பர் கூட்டமாகவோ, கூட்டாளிகளாகவோ அங்கு வந்து சேரவில்லை. ஒவ்வொருவரும் அம்மாணிக்கத்தைத் தானே அடைய வேண்டும் என்ற ஆசையினால் உந்தப்பட்டுத் தனித்தனியே வந்து சேர்ந்தனர். அழூகநதிக்கருகில் அன்றிரவு அவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு குடிசையை நிர்மாணித்து, நெருப்பு மூட்டிக் குளிர் காய்ந்து கொண்டிருந்தனர். அந்நதியோ இவர்களைப் பற்றிச் சிந்தையின்றி வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. அந்நதியின் சப்தத்தை ஒருவன் தனிமையில் கேட்பானுகில் அது அவன் காதுகளைச் செவிடாக்கி விடும்; பயங்கர நினைவுகளைக் கிளப்பி பைத்தியம் கூடப் பிடிக்கச் செய்து விடும். அந்நதி ஓடி வரும் மலையிலும், அதன் இரு கரைகளிலும் உள்ள மரங்கள் தங்கள் நிழலைப் பிரமாண்டமாக வீசிக் கொண்டிருந்தன. சில சமயங்களில் அவைகள் மேகங்களால் சூழப்பட்டும் சில சமயங்களில் வானத்தை எட்டிப் பிடிக்க முயற்சி செய்வது போலும் காட்சியளித்துக் கொண்டிருந்தன.

ஒவ்வொருவரும் தாங்கள் இன்னாரென்று மற்றவர்களுக்கு அறிமுகம் செய்து கொண்டனர். அவரவர் கொண்டு வந்திருந்த உணவை ஒரு பாறையின் மீது வைத்து, எல்லோரும் பொதுவாகச் சாப்பிட்டனர். சாப்பிடும் பொழுது நாளைய தினம் மாணிக்கத்தைத் தேடும் பொழுது ஒவ்வொருவரும் தனித்தனியே பிரிய நேரிடுவதையோ, அன்னியர்களாகவோ, விரோதிகளாகவோ மாறக் கூடும் என்பதைப் பற்றியோ சிந்திக்கவே யில்லை. அவர்கள் மொத்த எண்ணிக்கை எட்டு. ஏழு ஆண்களும் ஒரு பெண்ணும். விட்டு விட்டு வீசும் நெருப்பொளியில் ஒவ்வொருவர் தோற்றமும் ஒவ்வொரு விதமாகக் காணப்பட்டது. இதற்கு முன்பு இந்த மாதிரி ஒரு கூட்டம் நகரத்திலோ, மலையிலோ, பரந்த வெளியிலோ சந்தித்திருக்க முடியாதென்று தோன்றியது.

அக்கூட்டத்திலிருந்த முதியோன் உயரமாகவும், ஒல்லியாகவும், வெளுத்த முகத்துடனும் காணப்பட்டான். அவனுக்கு வயது அறுபதிருக்கும். ஒரு விலங்கின் ஆடையை அணிந்திருந்தான். அவன் ஆடை அணிந்திருக்கும் தோற்றத்திலிருந்து மான், கரடி, ஓநாய் முதலிய மிருகங்களுடன் நெடுங்காலம் வசித்தவனுகக் காணப்பட்டான். பாவம், அவன் ஒரு துரதிர்ஷ்டம் பிடித்த பேர்வழி! சிறு வயதிலேயே மாணிக்கத்தின் பெருமையைக் கேள்விப்பட்டு அன்று முதல் அதே நினைவாகத் திரிகிறுன்!

மாணிக்கத்தைத் தேட வந்தவர்களில் பலர் அவனை இம்மலைச்சாரலில் பார்த்ததாகச் சொல்கிறார்கள். அவர்கள் அவனைப் பித்தனென்று அழைப்பதுண்டு. அவனுக்கு வேறு பெயரிருப்பதாகவும் தெரியாது! எப்பொழுது இம்மணியைத் தேட ஆரம்பித்தானோ? அதுவும் ஒருவருக்கும் தெரியாது. "இம்மணி யாசை மட்டும் அவனுக்கு இல்லாதிருந்தால் சூரியோதயத்திலிருந்து உற்சாகமாய்த் தேடி சூரியாஸ்தமனத்தில் மனத் தளர்ச்சி அடையும் நிலையை அடைந்திருக்க மாட்டான்" என்று சாகோ பிராந்தியத்திலுள்ளவர்கள் பேசிக் கொள்கிறார்கள்.

இப்பித்தனுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த கொஞ்சம் வயதான ஆசாமி பெரிய தொப்பி அணிந்திருந்தான். அவன் பெயர் டாக்டர் கேகோபோடல். ரசாயன சாஸ்திரத்திலும் பௌதிக சாஸ்திரத்திலும் ஆராய்ச்சிகள் செய்யும் பொழுது கிளம்பும் புகையில் தோய்ந்து, தோய்ந்து மிகவும் இளைத்துப் போய் விட்டான். அவன் படிக்கும் பொழுது ஒரு நூதன ஆராய்ச்சியில் ஈடுபட்டு தேகத்திலுள்ள பெருவாரியான ரத்தத்தை செலவழித்ததிலிருந்து நல்ல நிலைமையில் இல்லையென்று சொல்கிறார்கள்.

மூன்றாமவன் பெயர் மாஸ்டர் இகாபாட் பிக்னட். போஸ்டன் நகரைச் சேர்ந்தவன். பிரபல வியாபாரி. பிரசித்தி பெற்ற நார்ட்டன் கோவில் 'எல்டரும்' கூட (elder) "காலையிலும் மாலையிலும் தியானத்திற்குப் பிறகு ஒரு மணி நேரம் நாணயங்களை விழுங்குவதில் பயிற்சி செய்வதுண்டு என்றும், அந்நாணயங்கள் மெஸாசூசெட் மாகாணத்தின் புராதன நாணயங்கள் என்றும் அவனுடைய எதிரிகள் அவனைப் பற்றிப் பரிகாசமான கதைகள் சொல்வதுண்டு.

நான்காமவனுக்குப் பெயரே கிடையாது. அகோர எப்பமிடுவதிலிருந்தும், பெரிய மூக்குக் கண்ணாடிகள் அணிந்திருப்பதிலிருந்தும் யாரும் அவனை எளிதில் அடையாளங் கண்டு கொள்ளலாம். அப்பெரிய மூக்குக் கண்ணாடி அவனுடைய முகத்தை விகாரமாகவும் விதவிதமான சாயலுடையதாகவும் எடுத்துக் காட்டிற்று.

ஐந்தாமவன் ஒரு கவியாயிருந்தும் பெயரில்லாதிருப்பது வருந்தத்தக்கது. ஒளி மிகுந்த கண்களுடையவன். ஆனால், மிகவும் மெலிந்தவன். பனி, மேகம், சந்திரன், காற்று இவற்றையே உணவாகக் கொண்டதினால் இளைத்ததில் ஆச்சரியமில்லை என்று ஜனங்கள் பேசிக் கொண்டனர். அவைகளின் குணாதிசயங்கள் அவனுடைய கவிதைகளிலும் புலப்படுவதாகச் சொல்கின்றனர்.

ஆறாமவன் ஒரு வாலிபன். படாடோபம் நிறைந்தவன். அவன்தான் வெர்டுப் பிரபு. இவர்களை விட்டுச் சற்று தள்ளி அமர்ந்திருந்தான். நெருப்பின் ஜுவாலையில் அவனுடயை ஆடைகளும், ஆபரணங்களும், வாட்களும் தக தகத்தன. இறந்து போன மூதாதையர்களின் பரம்பரைப் பெருமையை மிகைப் படுத்தக் கூடிய பொருள் ஒன்றை அவர்களுடைய புராதன வீட்டில் வைக்க வேண்டும் என்று அளவிலாத ஆசை கொண்டான்.

கடைசியாக ஒரு அழகிய யுவன். சாதாரண உடை அணிந்திருந்

தான். அவனுக்குப் பக்கத்தில் ஒரு மங்கை உட்கார்ந்திருந்தாள். அவள் பெயர் ஹேமலா; அவன் பெயர் ஜார்ஜ். இவ்வளவு ஒற்றுமை வாய்ந்த தம்பதிகள் எப்படி இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள் என்பது விளங்கவில்லை!

ஒரே குடிசையில் நெருப்பைச் சுற்றி ஒரே கூட்டமாக இருந்த போதிலும் ஒவ்வொருவரும் அம் மணியைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தனர். மாணிக்கத்தைப் பற்றிப் பேச்சு வரும் பொழுதெல்லாம் அவர்கள் முகத்தில் விசேஷ ஒளி படர்வதுண்டு. ஒவ்வொருவரும் மாணிக்கத்தைத் தேடத் தூண்டிய சம்பவங்களைப் பற்றிப் பின் வருமாறு பேசலானார்கள் :-

வழிப் போக்கன் ஒருவன் இதைப் பற்றிப் பிரமாதமாகப் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டு எப்படியும் இதை அடைய வேண்டும் என்ற ஆசையினால் இங்கு வர நேரிட்டதென்று ஒருவன் தெரிவித்தான்.

கேப்டன் ஸ்மித் இம்மலைச் சாரலுக்குப் பக்கத்திலுள்ள கடற்கரையோரம் வந்த பொழுது இதன் மகத்தான ஒளி கடலிலும் வீசக் கண்டதாகச் சொன்னதைக் கேட்டு இங்கு வர நேரிட்டது என்று மற்றொருவன் தெரிவித்தான்.

இம்மலைச் சாரலுக்குச் சற்று தூரத்திலுள்ள காட்டில் வேட்டையாட வந்த பொழுது, நடு நிசியில் எழுந்த பொழுது, மாணிக்கத்தின் ஒளி எரி நட்சத்திரம் போலிருந்ததையும், மரங்களின் நிழல்கள் பின்னோக்கிச் செல்வதையும் பார்த்ததால் இங்கு வர நேரிட்டது என்று இன்னொருவன் தெரிவித்தான்.

இப்படிப் பலவிதமாகப் பலரும் பேசிக் கொண்டதுடன் சூரிய ஒளிக்குச் சமமாகவும் சந்திர ஒளியைத் தோற்கடிக்கக் கூடியதாகவும் அதன் பிரகாசம் இருக்கிறதென்றும், அப்பேரொளியை நோக்கிச் சென்றாலே எளிதில் மாணிக்கத்தைப் பெறலாம் என்றும் பேசிக் கொண்டார்கள். இது மட்டுமல்ல. ஒவ்வொருவரும் மற்றவர்கள் முயற்சியைக் கெடுக்க அப்பொழுது உலவிய கட்டுக் கதைகளைச் சொல்லலாயினர்.

மாணிக்கத்தை ஒரு பூதம் காத்து வருகிறதாம். அது அம் மணியைச் சிகரத்திற்குச் சிகரம் மாற்றி வைத்தும், அருகிலுள்ள மந்திரக் குளத்திலிருந்து பனிப் படலங்களை வரவழைத்து கண்ணுக்குப் புலப்படாமல் செய்தும் யாத்ரிகர்களை திக்கு முக்காடச் செய்கிறதாம். இதைக் கேட்டவர்கள் இது நம்பத்தக்கதல்ல என்றும், விடாமுயற்சி இல்லாததாலோ, தந்திரம் அறியாததாலோ, மலைப் பிராந்தியத்தில் வழி தவறியதாலோ இன்னும் பல இத்யாதி காரணங்களாலோ இதற்கு முன்பு அம் மணியைத் தேடச் சென்றவர்கள் தோல்வி அடைந்திருக்க வேண்டும் என்று கருதினார்கள்.

சின்னேரம் கழித்து மூக்குக் கண்ணாடிக்காரன் எழுந்து நின்றான். கூட்டத்திலுள்ளவர்களை ஏற இறங்கப் பார்த்து விட்டு, "சகோதரர்களே! ஏழு ஆண்களும் ஒரு பெண்ணும் சேர்ந்த நாம் ஒரு கூட்டம். இக்கூட்டத்திலுள்ளவர்கள் யாவரும் புத்திசாலிகள் என்பதில் சந்தேகமில்லை. ஒப்

பற்ற மணியைக் குறித்தே இங்கு வந்திருக்கிறோம். உங்களுள் எவருக்காவது அம் மணி கிடைத்தால் என்ன செய்வதாக உத்தேசம்? நம் பித்தரின் நோக்கம் என்னவோ? பாவம், வெகு காலம் இதற்காக அலைந்து கொண்டிருக்கிருர்! அவருக்கு மட்டும் அது கிடைத்து விட்டால் எவ்வளவு சந்தோஷப்படுவார்!" என்று பிரசங்கம் செய்தான் கண்ணுடிக்காரன்.

"சந்தோஷமா? அதைக் கொண்டு எந்தவிதமான சந்தோஷமும் அடையப் போவதில்லை! அந்த எண்ணம் வெகு காலத்திற்கு முன்பே மறைந்து விட்டது!! சிறு வயதில் ஏற்பட்ட இந்தப் பித்து தள்ளாத வயதிலும் என்னை ஆட்டி வைக்கிறதே! இது என் தலைவிதி! இந்தப் பித்துத்தான் என் வலிமை; என்னுள்ளத்தின் துடிப்பு; என் வாழ்க்கையின் ஜீவ நாடி. என்னுடைய முயற்சி மட்டும் பலிக்கா விட்டால் நிச்சயம் இம்மலையினின்றும் வீழ்வேன்; என்னுடைய முயற்சி பலித்து விட்டால் ஒரு குகைக்கு எடுத்துச் சென்று ஆசை தீரும் மட்டும் ஆரத் தழுவி நிச்சிந்தையாக நிரந்தரத் தூக்கத்தில் ஆழ்ந்து விடுவேன்" என்று விரக்தியுடன் பேசினுன் பித்தன்.

"சே. இவ்வளவுதானு? இதனுல் விஞ்ஞானத்திற்கு எவ்வளவு கீர்த்தி ஏற்படப் போகிறது தெரியுமா? இயற்கையின் சோதனைலயத்தில் (Laboratory) கடைந்தெடுக்கப்பட்ட பேரெழிற் சோதி அது. அதனைத் தூரத்திலிருந்து பார்க்கக் கூட சக்தியற்றவன் நீ. ஒரு நல்ல அறிவாளி என்ன விரும்புவானே அதையே நானும் விரும்புகிறேன். மாணிக்கம் கிடைத்ததும் ஐரோப்பாவிற்குச் செல்வேன். அங்கு என் ஆயுள் முழுவதும் அதனை அணுக்களாகப் பிரிப்பதில் கழிப்பேன். அதில் ஒரு பகுதியைப் பொடியாக்குவேன். இன்னெரு பகுதியை எந்த அமிலத்தில் (acid) கரைக்க முடியுமென்று ஆராய்ச்சி செய்வேன். மீதியைப் பலவித சோதனைகளுக்கு உட்படுத்துவேன். இப்படிச் செய்த ஆராய்ச்சிகளின் முடிவுகளை உலகிற்குப் பெரிய புத்தக ரூபமாக வெளியிடுவேன்........." என்று டாக்டர் கேகபோடல் தயங்கினுர்.

"சபாஷ்! தயக்கம் ஏன்? தங்கள் புத்தகம் இன்றைய விஞ்ஞானிகளுக்கும் இனிவரும் விஞ்ஞானிகளுக்கும் பெரிதும் பயன்படும். இரசாயன முறைப்படி அம் மணியைப் போல் உற்பத்தி செய்ய வழிகாட்டலாம்" என்று கண்ணுடிக்காரன் உற்சாக மூட்டினுன்.

"அது சரி. பல கள்ள மணிகளை உற்பத்தி செய்வதால் நல்ல மாணிக்கத்தின் மதிப்புக் குறைந்து விடாதா? அதன் மதிப்புக் குறையாமலிருக்க வேண்டுமென்று விருப்பம். வியாபாரத்தை என் குமாஸ்தாக்களிடம் ஒப்படைத்து விட்டு, என் கௌரவத்தையும் எனக்கு நேரிடக் கூடிய கஷ்டங்களையும் பொருட் படுத்தாமல் இம் மணிகாக என் வந்திருக்கிறேன் தெரியுமா? இதனுல் பெரும் லாபம் அடையலாம் என்பது மட்டுமல்ல, அதன் மதிப்பையும் உயர்த்தலாம் என்ற நோக்கத்துடன்தான் வந்தேன்..." என்று மாஸ்டர் இகாபேட் பிக்னுட் பேசிக் கொண்டிருக்கும் பொழுது,

"உங்களுடைய விருப்பத்திற்கு நான் இணங்கப் போவதில்லை.

லாபத்திற்காக ஒப்பற்ற மணியைக் கவருவதா?'' என்று குறுக்குக் கேள்வி கேட்டான் கண்ணாடிக்காரன்.

"இதுவரை இம்மாணிக்கத்தை நான் பார்த்ததே கிடையாது. ஜனங்கள் பேசிக் கொள்ளும் பிரகாசத்தில் நூறில் ஒரு பங்கு வீசினாலும் கூட மொகலாய சக்கரவர்த்தியின் வைரத்திற்கு மட்டமாகவா போய்விடும்? அது மட்டும் கிடைத்தால் இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பெயின் முதலிய தூர தேசங்களுக்கு எடுத்துச் சென்று, யார் அதிக விலை கொடுக்கிறார்களோ அவர்களுக்கு விற்று விடுவேன். இதை விட மேலான யோசனை யாராவது கூற முடியுமானால் தெரிவியுங்கள்..." என்று பிக்னட் முடித்தார்.

"அப்படியா செய்வாய்? பணத்தைத் தவிர வேறு ஆசையே உனக்கில்லையா? இந்த அற்புத மணியை அற்பப் பணமாக்க விருப்பமா? என்னைப் பொருத்த வரை அம்மணியை என் கோட்டுப் பைக்குள் (pocket) வைத்துக் கொள்வேன். இரவும் பகலும் அதன் ஒளியில் மூழ்கிக் கொண்டேயிருப்பேன். அதன் தேஜோமயமான சோதி என் சிந்தையிலும் புகுந்து நான் இயற்றும் கவிதைகளிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கும்! நான் இறந்து விட்டாலும் அதன் பெருமை இலக்கியத்தில் என்றும் வாடாமலிருக்கும்'' என்று கவி தன் பிரசங்கத்தை முடித்தார்.

"கவிஞரே, கோட்டிற்குள் ஒளித்து வைத்தாலும் அதன் ஒளி வெளியே வீசிக் கொண்டிருக்கும் என்று தெரியாதா? அப்பொழுது ஒரு தீவட்டிக்காரனைப் போல் காட்சியளிப்பீர் என்றும் தெரியாதா?'' என்று குறுக்குக் கேள்வி போட்டார் கண்ணாடிக்காரர்.

"கோட்டிற்குள் ஒளித்து வைத்துக் கொண்டு இருட்டறையில் வசிப்பதை நினைத்தாலே சிரிப்பாயிருக்கிறது! எனது மூதாதையர் கட்டி வைத்திருக்கும் புராதன வீட்டை அலங்கரிக்கவும், அதன் பெருமையை நிலை நாட்டவும் இதை விட வேறென்ன இருக்கிறது? அங்கு யுகக் கணக்கில் நள்ளிரவும் பட்டப் பகலாகத் தோன்றும்! அங்குள்ள ஆபரணங்களும், வாட்களும் வீரர்களின் படங்களும் தகதகத்துக் கொண்டிருக்கும்! முன்னோர்களின் பெருமையை நிலை நாட்ட விரும்பும் என்னுடைய யோசனை உங்களுடைய யோசனைகளைக் காட்டிலும் பெரிது. நம்மவர்களின் பெருமைக்கு வழிதேடாத முயற்சிகள் வீணல்லவா? வெள்ளி மலையில் கவனிப்பாரின்றி அம் மணி தூங்கிக் கொண்டிருப்பதை விட என் வீட்டிலிருந்தால் எவ்வளவு பெருமை!'' என்று பேசினார் வெர்டு பிரபு.

"அது நல்ல யோசனைதான். வீட்டில் வைப்பதை விட சிலுவையில் வைத்து விட்டால் இன்னும் எவ்வளவு புகழ் கிடைக்கும்!'' என்று கிண்டல் செய்தான் பித்தன்.

"நானும் அவளும் வெர்டு பிரபுவைப் போல் ஒரு ஆசையுடன் இங்கு வந்திருக்கிறோம்'' என்று ஜார்ஜ் இடையில் பேசினான்.

"எந்தப் புராதன வீட்டில் அல்லது கோட்டையில் மாணிக்கத்தை வைக்கப் போகிறீர், ஜார்ஜ்'' என்று கேட்டான் பித்தன்.

"அது புராதன வீடுமல்ல; கோட்டையும் அல்ல. ஸ்படிக மலைச் சாரலுக்குப் பக்கத்தி லுள்ள குடிசையைப் போலிருக்கும். சென்ற வாரம்தான் நானும் அவளும் விவாகம் செய்து கொண்டோம். குளிர் காலத்தில் மாலைப் பொழுதில் எங்களுக்கு வெளிச்சம் வேண்டியிருப்பதால் இம்மணியை நாடி வந்தோம். அதிதிகளிடம் இந்த அற்புத மணியைக் காண்பித்தால் எவ்வளவு ஆச்சரியமும் ஆனந்தமும் பெறுவார்கள்! அறை முழுவதும் வீசும் வெளிச்சத்தில் ஒரு குண்டூசியையும் எடுத்து விடலாம்! இரவில் அகஸ்மாத்தாக நாங்கள் எழுந்தால் இம்மணியின் ஒளியில் ஒருவர் முகத்தை மற்றவர் எவ்வளவு நன்ருகப் பார்த்துக் கொள்ளலாம்!" என்று ஜார்ஜ் பதிலளித்தான்.

"பெரிய அரசனும் தன் மகுடத்தில் வைத்துக் கொள்ள ஆசைப்படும் மணியை இத்தம்பதிகள் அற்ப ஆசைக்காக நாடி வந்திருக்கிருர்களே!" என வனேயோர் ஏளனப் புன்னகை புரிந்தனர். கண்ணுடிக்காரன் கோர ஏப்பமிட்டதைக் கண்டு, "நீ என்ன செய்வதாக உத்தேசம்? இப்படி ஏளனம் செய்கிருய்?" என்று ஜார்ஜ் கேட்டான்.

"மாணிக்கம்! அம்மாதிரி ஒன்றுண்டா? ஐயோ! உங்கள் அறிவுத் திறமையை என்னென்று சொல்வோன்? மூவாயிரம் மைல்கள் கடந்து இங்கு எதற்காக வந்திருக்கிறேன். தெரியுமா? இங்குள்ள ஒவ்வொரு குகையையும் மலையையும் சிகரத்தையும் எதற்காக தேடிக் கொண்டிருக்கிறேன் தெரியுமா? மாணிக்கம் இருப்பதாகச் சொல்வதெல்லாம் பொய் யென்று நிரூபிக்கத்தான்" என்று பித்தன் பேசினன்.

ஸ்படிக மலைக்கு வந்தவர்களின் நோக்கம் எப்படி யிருந்தாலும் கண்ணுடிக்காரனின் நோக்கத்தைப் போல் மோசமானதை வேறு எவரிடமும் எதிர் பார்க்க முடியாது. மனித வர்க்கத்திலேயே மிகக் கீழ்தரமான நோக்கமுடையவன் அவன். உலகம் இருட் கடலில் தத்தளிப்பதில் இன்பம் காண்பவன். அவன் பேசிக் கொண்டிருக்கும் பொழுது சிவப் பொளி படர்ந்தது.

அவ்வொளியில் மலையின் தோற்றம் முன்னை விடப் பெரிதாகத் தோன்றிற்று. ஆமுனக் நதி ரத்த வெள்ளம் போலிருந்தது. மலையிலுள்ள பாறைகளும் மரங்களும் செந்நிறத்துடன் விளங்கின. இடியின் முழக்கம் கேட்டது. யாவரும் பெரும் புயல் தங்களை நெருங்கி வருவதாக உணர்ந்தனர். ஆனல், புயல் வரவில்லை; சந்தோஷம் அடைந்தனர். வானத்து மீன்கள் அம்மணியின் பேரொளியை மட்டும் காணக் கண் திறக்க வேண்டு மென்றும் மற்ற சமயங்களில் கண் திறக்கக் கூடாதென்றும் அவர்களை வற்புறுத்துவது போலிருந்தன.

குடிசைக்குச் சற்று தூரத்திலிருந்த அடர்ந்த மரக் கிளைகளை ஹேமலா நன்ருக அலங்காரம் செய்தாள். அன்றிரவு அம் மரக் கிளைகளுக்கு அடியில் இருவரும் படுத்துக் கொண்டனர். ஒரே சமயத்தில் இருவரும் சொல்ல முடியாத சோதிக் கனவொன்று கண்டனர். ஒரே சமயத்தில் இருவரும் எழுந்தனர். எழுந்ததும் ஒருவர் மற்றவர் கண்களில் தேங்கிக் கிடக்கக் கண்டனர். பிறகு, சுற்றுப் புறங்களைப் பார்த்த பொழுது குடிசையில் ஒருவருமில்லை.

" அவர்கள் எல்லோரும் போய் விட்டார்கள். உடனே புறப்படுங்கள். இல்லையேல் மாணிக்கத்தை இழக்க நேரிடும்" என்று ஹேமலா தன் கணவனைத் துரிதப் படுத்தினாள்.

அன்றிரவு இவ்விருவர் மட்டும் நன்றாகத் தூங்கினர். மற்றவர்கள் சரியாகத் தூங்கவில்லை. மாணிக்கத்தைப் பற்றியே கனவுகள் கண்டு கொண்டிருந்தனர். எப்பொழுது விடியுமென்று துடித்துக் கொண்டிருந்தனர். தம்பதிகளோ இளம் மான்களைப்

போலிருந்தனர். நதியில் சுத்தம் செய்து கொண்டு பிரார்த்தனையை முடித்துக் கொண்டு சிற்றுண்டி அருந்தி விட்டு மலைக்குப் புறப்பட்டார்கள்.

அன்பின் பரவசத்தில் மலையை ஏறும் பொழுது கஷ்டம் இன்னதென்றே உணரவில்லை. ஓரிடத்தில் செருப்பு நழுவி விட்டது; ஆடையும் கிழிந்து விட்டது. மற்றோர் இடத்தில் ஹேமலாவின் கூந்தல் மரக் கிளையில் அகப்பட்டுக் கொண்டது. இப்படிப் பல கஷ்டங்களையும் நஷ்டங்களையும் பொறுத்துக் கொண்டு ஓர் உயர்ந்த இடத்தை இடைந்தனர். மரங்களின் அடர்ந்த நிழலிலும் பிரம்மாண்டமான காட்சிகளிலும் மனதைப் பறிகொடுத்துச் சென்று கொண்டிருந்தனர். மேகமும் பாறையுமே தென்பட்டன. காற்றின் வேகங் கூடக் குறைந்து விட்டது, இந்தத் தனிமையில் சஞ்சரிப்பதை விட கீழே யிருப்பதே மேலென்று அவர்களுக்குத் தோன்றியது.

" இன்னும் போகலாமா?" என்று கேட்ட வண்ணம் அவள் கீழே விழாதிருக்கும் படியாகவும் மகிழ்ச்சி அடையும் முறையில் அவள் இடையைத் தழுவிக் கொண்டான் ஜார்ஜ்.

மேலே செல்வதில் ஆபத்துக்களும் கஷ்டங்களும் இருக்கிறதெனத் தெரிந்தும் ஹேமலாவுக்கு மாணிக்கத்தின் மீதுள்ள ஆசையை மறக்க முடியவில்லை. மற்ற பெண்களைப் போல் நகைப் பித்து அவளையும் ஆட்கொண்டது!

வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டே, " இன்னும் மேலே போகலாம்" என்று பயமும் ஆசையும் கலந்த கம்மிய குரலில் பேசினாள் ஹேமலா.

பயத்துடன் காணப்பட்டவளை, " சரி போகலாம்" என்று மேலே

கூட்டிச் சென்று கொண்டிருந்தான் ஜார்ஜ்.

பைன் மரங்கள் செறிந்த உயர்ந்த பாறைகளின் மீது சென்று கொண்டிருந்தனர். தொன்று தொட்டு அம்மரங்கள் மலையிலிருந்த போதிலும் மூன்றடி உயரம் தானிருந்தன. அவைகளைக் கடந்ததும் பாறைகளே எங்கும் வியாபித்திருக்கக் கண்டனர். ஒவ்வொரு பாறையும் ஒரு பூதம் போல் காட்சியளித்தது. அந்த மொட்டைப் பாறைகளில் வேறு எந்த விதமான வாழ்க்கையின் சலனமும் தென்படவில்லை.

கண்ணுக்குப் புலப்படாத காற்றும் இவ்விருவரையும் தவிர வேறொன்றும் காணவில்லை. மிக உயரத்தில் சென்று விட்டதால் இயற்கை கூட அவர்களைப் பிரிந்து விட்டதாகத் தென்பட்டது. இயற்கை அன்னைகூட இந்த இடத்தில் தான் தன் மக்களுக்கு ஆசி கூறி அனுப்புவதாகப் புலப்பட்டது. கீழேயிருக்கும் மரங்களைக் கூடப் பார்ப்பதற்கு இல்லாமல் திடீரென்று பனிப் படலங்கள் சூழ்ந்து கொண்டன. சிகரங்களும் கண்ணுக்குப் புலப்படா வண்ணம் பனிப் படலங்கள் அடர்ந்து பரந்து சூழ்ந்து கிடப்பதைக் கண்டதும் தம்பதிகளுக்கு மீண்டும் பூமியைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் மிகுந்தது! கீழே மேகக் கூட்டங்கள் சஞ்சரித்துக் கொண்டிருந்ததால் பூமியையும் பார்க்க முடியவில்லை. இது மட்டுமல்ல. பெரும் பனிப் படலங்கள் தங்களை நோக்கி வருவதைக் கண்டதும் பயத்தினால் ஒருவரை ஒருவர் இறுகத் தழுவிக் கொண்டனர்.

மேலும் மேலே போகப் பாதை சரியாயிருந்தும் ஹேமலாவின் மூச்சு திணற ஆரம்பித்தது. கணவன் தன்னைத் தாங்கிக் கொண்டு போகும்படியான தொந்தரவைக் கொடுக்க அவள் மனம் இடந்தரவில்லை. அடிக்கடி அவன் மீது உராய்ந்து கொண்டு போனவள் ஓரிடத்தில் சறுக்கி விழுந்து விட்டாள்.

"நாம் ஒழிந்து போவோம். மீண்டும் பூமியை அடைவோம் என்ற நம்பிக்கையில்லை. நம்முடைய குடிசையிலேயே இருந்திருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!" என்று விசும்பினாள் ஹேமலா.

"அன்பே! அதோ பார். அங்கே சந்தோஷமாக வாழலாம். சூரிய ஒளி மூடுபனியைப் பிளந்து செல்கிறது. அங்கே செல்வோம். காதலிப்போம். மாணிக்கத்தின் நினைவின்றி வாழ்வோம்" என்றான் ஜார்ஜ்.

"சூரியன் அங்கே இருக்க முடியாது. இப்பொழுது பகலாகத் தானிருக்க வேண்டும். அப்படிச் சூரிய ஒளி இருக்குமானால் தலைக்கு மேலிருந்துதான் வரவேண்டும்" என்றாள் ஹேமலா.

"அதோ பார். வினாடிக்கு வினாடி பிரகாசமடைகிறது. சூரிய ஒளியில்லாமல் பின் என்ன?" என்று கேட்டான் ஜார்ஜ்,

மூடுபனியை ஊடுருவிச் சென்று கொண்டிருந்த மங்கிய சிவப்பு வர்ணம் கொஞ்சம் கொஞ்சமாக பிரகாசமடைந்தது. மலையைச் சுற்றியிருந்த மேகங்களும் விலகிக் கொண்டிருந்தன. சற்று முன்பு தெளிவற்ற உருவத்துடன் விளங்கிய பொருள்களும் காட்சிகளும் தெளிவும் புதுமையும் அடைந்து கொண்டிருந்தன. இப்படித் தெளிவாகிக் கொண்டி

ருக்கும் பொழுது தங்கள் கால்களுக்குப் பக்கத்தில் அலைகளின் ஆரவாரத்தைக் கேட்டனர். திரும்பிப் பார்த்தனர். ஒரு ஏரிக்குப் பக்கத்திலிருப்பதை உணர்ந்தனர். அந்த ஏரி ஆழமானது; பரிசுத்தமானது; பிரகாசமானது; அழகு நிறைந்தது. கரைக்குக் கரை நீர் பொங்கித் ததும்பிக் கொண்டிருந்தது. நீர் மட்டத்தில் தேஜோமயமான ஒளி பரவிக் கிடந்தது. அந்த ஒளி எங்கிருந்து வருகிற தென்று தெரியவில்லை. கணப்பொழுது அதன் எழிலைக் கண்டு இன்ப மிகுந்த ஆச்சரியத்தினல் கண்களை மூடிக் கொண்டனர். மறுகணம் கண்களைத் திறந்ததும் மாணிக்கத்தின் இருப்பிடம் அதுவே என்று அறிந்தனர்.

உவகைப் பெருக்கில் ஒருவர் தோள்மீது மற்றவர் கை போட்டுக் கொண்டனர். எதிர் பாராத வெற்றியினல் நடுங்கினர். அம்மணியைப் பற்றிய கதைகள் அவர்கள் நினைவுக்கு வரவே மிகவும் வேதனை அடைந்தனர். அது ஒரு நட்சத்திரம் போல் பிரகாசித்துக் கொண்டிருந்ததை சிறு வயதிலிருந்து பார்த்திருக்கின்றனர். இன்று அது தன்னுடைய பூரண ஒளியைத் தங்கள் இதயத்தில் வீசுவதை உணர்ந்தனர். அவர்கள் தோற்றம் மாறியிருப்பதையும் உணர்ந்தனர். அவர்கள் கன்னங்களில் சந்தோஷத்தினல் பரவியிருக்கும் சிவப்பு நிறம் அவர்களைச் சுற்றிலுமுள்ள ஏரி, பாறை, மூடுபனி, வானம் எல்லாம் பரவிற்று. மறுகணம் இன்னெரு காட்சி அம்மணியின் மீதிருந்தகவனத்தை மாற்றி விட்டது. மாணிக்கத்திற்கு நேர் அடிவாரத்தில் ஒரு மனித உருவம் தென்பட்டது. அவ்வுருவம் இந்த ஒளியைப் பார்த்துக் கொண்டே ஏறும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் பாவனையிலிருந்தது. ஆனல், அது அசையவில்லை; கல்லாய்ச் சமைந்து விட்டது போலிருந்தது.

"அவன்தான் பித்தன். இறந்து விட்டான் போலும்!" என்று கணவனின் கரங்களை இறுகப் பற்றிக் கொண்டாள் ஹேமலா.

"மணியைப் பார்த்து விட்ட சந்தோஷத்தினல் இறந்திருக்க வேண்டும்! இல்லையேல் மணியின் கதிர்கள் மரணம் விளைவிக்கும் சக்தியுடையதாக இருக்கலாம்" என்று அவள் காதோடு காதாய்ச் சொன்னன் ஜார்ஜ்.

"மாணிக்கம்! எங்கே யிருக்கிறது? காட்டுங்கள் பார்க்கலாம். அது சுத்தப் பொய்!" என்று தீனக் குரலில் அவர்களுக்குப் பின்புறமிருந்து வார்த்தைகள் வந்தன. திரும்பிப் பார்த்தனர். கண்ணுடிக்காரன் மூக்குக் கண்ணுடியை சரிப்படுத்திக் கொண்டு ஒரு சமயம் ஏரியைப் பார்ப்பதும், மறு சமயம் பாறைகளைப் பார்ப்பதும், இன்னெரு சமயம் பனித்திவலைகளைப் பார்ப்பதும், இறுதியில் மாணிக்கத்தையே உற்றுப் பார்த்தும் அதன் ஒளியைக் காண முடியாமல் தத்தளித்தான்! அவன் முதுகு மாணிக்கத்தை பார்த்துக் கொண்டிருந்த பொழுது கால்களுக்கு முன்பு அவனுடைய நிழல் விழுந்திருக்கக் கண்டும், மாணிக்கம் இருப்பதாக நம்பிக்கை ஏற்படவில்லை.

"எங்கே உன் புரட்டு? காண்பி பார்க்கலாம்" என்று அறை கூவினன் கண்ணுடிக்காரன்.

"மூக்குக் கண்ணுடியை எடுத்து விட்டுப் பார். அதோ! நன்ருகத் தெரியும்" என்று மாணிக்கம்

இருக்கும் திக்கில் கண்ணுடிக் காரனை நிறுத்தினன் ஜார்ஜ்.

கரி பூசிய கண்ணுடி மூலம் சூரிய, சந்திர கிரணங்களை எப்படிச் சனங்கள் பார்க்கிருர்களோ, அப்படி மூக்குக் கண்ணுடி மூலம் தான் கண்ணுடிக்காரன் உலகைப் பார்க்க முடிகிறது! கண்ணுடியை எடுத்து விட்டு மாணிக்கத்தையே வெறித்துப் பார்த்தான். கணப் பொழுதில் பெரு மூச்சுடனும் ஆரவாரத்துடனும் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு கண்களைப் பிசைந்தான்.

அதிலிருந்து மாணிக்கத்தின் ஒளியோ, பூமிமீதுள்ள ஒளிகளோ, வானத்தின் ஒளிகளோ அவன் கண்ணுக்குப் புலப் படவில்லை! இதுவரை மங்கிய கண்ணுடி மூலம் உலகத்தைப் பார்த்தவன், திடீரென்று மாணிக்கத்தின் பிரகாசத்தைப் பார்த்ததும் குருடனுகி விட்டான்!

"மேலும் போகலாம், வாருங்கள்" என்று ஜார்ஜை அழைத்தாள் ஹேமலா. களைப்பினல் மயக்கமாகக் காணப்பட்டவளைக் கீழே விழாமல் தாங்கிக் கொண்டான் ஜார்ஜ். ஏரியின் குளிர்ந்த ஜலத்தை அவள் முகத்திலும் மார்பிலும் தெளித்தான். அவள் களைப்பு நீங்கிய போதிலும் உள்ளத் தளர்ச்சி நீங்கவில்லை.

நடுங்கிக் கொண்டிருந்தவளை இறுகத் தழுவிய வண்ணம், "நாம் போகலாம். இந்தச் சூரிய, சந்திர கிரணங்கள் நம் வீட்டுச் சன்னல்களில் நுழைந்தே தீர வேண்டும். மாலை வேளையில் நெருப்பு மூட்டிக் குதூகலமாகக் குளிர் காய்வோம். எல்லோரையும் போல் நாமும் இருப்போம். வேறென்றும் வேண்டாம்" என்று ஜார்ஜ் ஹேமலாவிடம் கூறினன்.

"இந்த மகத்தான ஒளியில் காலையில் எப்படி வேலை செய்ய முடியும்? இரவில் எப்படித் தூங்க முடியும்?" என்று ஹேமலா கணவனின் அபிப்பிராயத்தை ஆமோதித்தாள்.

இதுவரை வேறு எவர் காலும் தீண்டாத ஏரியின் ஜலத்தை இருவரும் அள்ளி அள்ளிப் பருகினர். பிறகு கபோதியான கண்ணுடிக் காரனையும் அழைத்துக் கொண்டு ஏரியை விட்டுப் பிரியத் தொடங்கினர். அவ்வாறு பிரிவதற்கு முன்பு அந்த ஏரியையும், ஏரிக்கருகிலிருக்கும் மாணிக்கத்தையும் கடைசி முறையாகப் பார்த்தனர். அப்பொழுது சூழும் பனிப் படலங்களினல் மாணிக்கம் மங்கலாக ஒளி வீசிக் கொண்டிருப்பதைக் கண்டனர்.

மற்றவர்களைப் பற்றிச் சில வார்த்தைகள். மாஸ்டர் இகாபேட்டின் முயற்சி வீணுகவே, போஸ்டன் நகரிலுள்ள தன் தொழிற்சாலைக்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்தான். நாச் மலை வழியாகப் போகும் போது சில இந்தியர்கள் அவனைப் பிடித்து மாண்டீரிலுக்கு கொண்டு போய் விட்டனர். பெரும் தொகை கொடுத்த பின் விடுவித்தனர். நீண்ட காலமாக தொழிற்சாலையைக் கவனிக்காததால் நிர்வாகத்தில் ஊழல் ஏற்பட்டு அரைக்காசு கூடக் கிடைக்க வழியில்லாமல் போய் விட்டது.

கிரானைட்டின் (Granite) ஒரு பாகத்தை சோதனையத்தில் (Laboratory) பொடியாக்கி, அமிலங்களில் (acids) கரைத்தும் காய்ச்சியும் பலவிதமான சோதனைகய

செய்து அதன் முடிவைப் பெரிய புத்தகமாக வெளியிட்டார் டாக்டர் கேகோபேடல். மாணிக்கம் கிடைத்திருந்தால் இவ்வளவு வெற்றிகரமாக அவருடைய ஆராய்ச்சிகள் நடந்திருக்குமா என்பது சந்தேகம்தான்!

சூரிய வெளிச்சமே இல்லாத குகை யொன்றில் கண்ட பனிக் கட்டியை மாணிக்க மென்று கவி நம்பினார். "அவருடைய கவிதைகளில் மாணிக்கத்தின் பிரகாசம் இல்லா விட்டாலும், பனிக் கட்டியின் குளிர்ச்சி யுண்டு" என்று விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

வெர்டு பிரபு தன் புராதன வீட்டிற்குச் சென்று மெழுகு வர்த்தியைக் கொளுத்தி வைத்து திருப்தி அடைந்தார். சில நாட்கள் சென்றதும் தன் மூதாதையர்களின் கல்லறையில் தானும் ஒருவனைப் படுத்துக் கொண்டார்! சாவுச் சடங்கின் போது ஏற்றி வைக்கப்பட்ட விளக்குகளின் பிரகாசம் தந்த பெருமையை விடவா இந்த மாணிக்கம் தரப் போகிறது!

கண்ணிருந்த போது கண் மூடித்தனமாக நடந்து கொண்ட கண்ணாடிக்காரன் கபோதியானதும் உலகத்தின் வெளிச்சத்திற்காகச் சுற்றிச் சுற்றி அலைந்து வேதனைப் பட்டுக் கொண்டிருந்தான். இருள் மண்டிக் கிடக்கும் கண்கள் மூலம் சந்திரனையும் நட்சத்திரங்களையும் பார்க்க முயல்வான். கிழக்கு முகமாயிருந்து கொண்டு அருணோதயத்தைப் பார்க்க முயல்வான். ரோமிலுள்ள பிரம்மாண்டமான பீடர் (St., Peter) கோவிலுக்குக் கூட ஒரு தரம் யாத்திரை சென்றான். கடைசியில் லண்டனில் ஏற்பட்ட பெரும் தீ விபத்தில் பூமிக்கும் வானத்திற்கும் பரந்து கிடந்த சோதியில் சிறிதளவாவது தனக்குக் கிடைக்காதா! என்று அதற்குள் குதித்து மடிந்தான்.

அதற்குப் பிறகு ஜார்ஜ் தம்பதிகள் பல வருஷங்களை இன்பமாகக் கழித்தனர். மாணிக்கத்தைப் பற்றிக் கதைகள் சொல்வதென்றால் அவர்களுக்கு அலாதிப் பிரியம். அவர்கள் சாகும் பொழுது முன்பிருந்த பெருமை கூட அதற்கில்லை. ஒப்பற்ற அம்மணியை ஜார்ஜ் தம்பதிகள் திரஸ்கரித்து வந்ததிலிருந்து அதன் ஒளி குன்றி வருவதாகச் சொல்லப் படுகிறது. ஒரு கல்லும் அதன் மீது மைக்காப் பொடிகள் 'பள பள'த்துக் கொண்டிருப்பதையே பின் சென்றவர்கள் பார்த்ததாகச் சொல்கின்றனர். இத்தம்பதிகள் திரும்பி வந்த பிறகு சிகரத்தின் உச்சியிலிருந்த மாணிக்கம் ஏரியில் விழுந்து விட்டதாகவும் பட்டப் பகலில் பித்தனின் தோற்றம் அங்கு தெரிவதாகவும் சொல்லப் படுகிறது. முன்போலவே அதன் ஒளி மங்காதிருப்பதாகவும், சாகோப் பிராந்தியத்திலுள்ளவர்களுக்கு அது தென்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

எப்படியோ இருக்கட்டும். ஸ்படிக மலைக்கு வெகு தூரத்திலுள்ள நான் இந்த அற்புத ஒளியில் மனதைப் பறி கொடுத்து என்னத்தையோ உளறும் கடைசி யாத்திரீகனாக இருக்கட்டும்!

[அமெரிக்கக் கதையின் தழுவல்]

197249

கலையும் ரசிகரும்

(ரா. சு. மணி)

"கலை அழகை, அதன் பொருளை, பாமரர்கள் புரிந்து கொள்ள முடியுமா? முடியா விட்டால் அது கலையா?" என்பதற்குப் பதில் அளிக்க முடியுமா? முயன்றுதான் பார்ப்போமே.

பழங்குடி ஒன்றின் நாகரீகத்தை நிர்ணயிக்க முயலும் ஆராய்ச்சியாளர்கள் அம்மக்களின் கலைகளையும் கலைப்பொருள்களையுமே சிறந்த சான்றுகளாகக் கொள்கிறார்கள். அப்பொருள்களை நிர்மாணித்தவர்கள் அச்சமுதாயத்தின் ஒரு சில கலைஞர்களே ஆயினும் பொதுவாக அச்சமூகத்தையே பண்பில் சிறந்ததாகக் கொள்கிறார்கள். அக்கலைகளையும் கலைஞர்களையும் அச்சமுதாயத்தின் சாதாரண மக்களும் ஓரளவிற்காவது புரிந்து கொண்டிருக்க வேண்டும் என்றே துணிகிறார்கள்.

மனிதனுக்குப் பகுத்தறிவு ஏற்பட்ட அன்றே கலையும் பிறந்தது எனலாம். சூழ்நிலையின் மாறி மாறி வரும் தன்மை, மனத்துள் பொங்கியெழும் உணர்வுப் புயல்கள் ஆகிய குழப்பங்களை நிதானிக்க அவற்றினின்றும் விடுபட்டு சலனமற்ற நிரந்தர நிலையை அடைய, சாந்தி பெற, அவன் ஆத்மா துடித்தது. அத்துடிப்பே அழகுணர்ச்சி. அவ்வுணர்ச்சியின் எதிரொலியே கலை.

அழகுக்கு அர்த்தம் கூறுவதே இன்றும் கலையின் நோக்கம். அவ்வழகு வெளியுலகில் காணும் அழகாகவோ, மனத்துள் எழும் உன்னத உணர்ச்சியின் வேகமாகவோ இருக்கலாம். காட்சியும் உணர்வும் வாழ்க்கையின் மூலாதாரம். பண்பட்ட உள்ளத்தில் இவ்விரண்டும் தனித்தனியே சிறந்ததாகி மீண்டும் ஒன்று சேரும்போது நிர்மலமான சிந்தனைசக்தியாகப் பரிமளிக்கிறது. அப்பொழுது தீர்க்க தரிசனமும் சாத்தியமாகிறது. அதுவே கலையுள்ளம். உன்னதமான கலைப்பொருள் அவ்வுள்ளத்தைப் புலப்படுத்துவதுடன் மேற்கொண்டு அது காண்பவர் மனத்துள்ளும் அத்தகைய சிந்தனையைப் பிறப்பிக்கும். இத்தன்மையில்லாத மனித உள்ளத்தின் மற்ற சிருஷ்டிகள் எவ்வளவு உபயோகமுள்ளவையானாலும், மதிப்புக்குரியவை என்றாலும் கலைப்பொருள்களாகா.

கலையுணர்ச்சியை, உள்ளும் புறமும் காணும் குழப்பத்தை வெற்றி காண முயலும் ஆத்மத்துடிப்பை வாழ்க்கைச் சக்கரத்தின் அச்சாணி எனலாம். இத்துடிப்பு இன்றேல் உலகம் இயங்காது. சரித்திரம், விஞ்ஞானம் முதலிய முயற்சிகளெல்லாம் இவ்வார்வத்தினின்றும் பிறந்தவை. இத்துடிப்பு ஒவ்வொரு உள்ளத்திலும் உண்டு. இத்தாகத்தைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்ட கலையைப் புரிந்து கொள்ள எல்லே[illegible]லும் முடியும்.

அழகுக்கு அழகு செய்[illegible]ம் முயற்சியே இன்று அதிகமாகக் காணப்படுகிறது. இது வெறும் மனோபாவத்தின் விளைவு. மனோபாவம் காலத்தோடு வருவதுடன்

மனிதனுக்கு மனிதன் வேறுபட்டும் நிற்பதால், ஒரு மனோபாவத்தின் சிருஷ்டியை ஒத்த மனப்பாங்குடையவர்களே இனங்காண முடியும். மற்றவர்கள் அதை ரஸிக்க முடியாமை பற்றி வருந்த வேண்டியதில்லை. ஏனெனில் வெறும் மனோபாவம் கலையுணர்ச்சியாகாதது மட்டுமல்ல, கலைவளர்ச்சிக்குப் பெரும் தடையும் கூட. மனோபாவத்தின் வயப்பட்ட கலைஞன் உண்மையினின்றும் பிறழ்ந்து உண்மத்தனாகக் கூடும். அவன் சிருஷ்டிகள் ஒருதலைப்பட்ட உணர்வுகளையே ஊக்கும்; அவற்றில் நிரந்தரமான, அமைதியான அழகைக் காண முடியாது.

கலைக்கும் பாமரருக்கும் இன்று ஏற்பட்டிருக்கும் பிளவுக்கு மற்றொரு காரணம் கலைஞர்கள் கையாளும் சாதனங்கள். மனிதனுக்கு அரணையின் புத்தி என்பார்கள். குறிப்பிட்ட ஒரு பயனை எய்துவதற்கான சாதனத்தைக் கண்டு பிடிப்பதற்குள்ளாகவே மனிதன் தன் இலக்ஷியத்தை மறந்து விடுகிறான். அச்சாதனத்தையே பெரும் பேருகக் கொண்டாடி அவற்றிற்கடிமையாகி மடிகின்றான். அணுகுண்டு யுகத்தில் இதை நாம் கண் கூடாகக் காண்கிறோம். கலை முயற்சியிலும் மனிதன் நிலை இது தான். இப்பொழுது இந்நிலை சிறிது மாறி வருகிறதெனலாம். வார்த்தைகளை அம்மானையாடுபவனை, கடுஞ் சொற்களால் பயமுறுத்துபவனை பண்டிதன் என்று நாம் இன்று ஒப்புக்கொள்வதில்லை. உள்ளத்தில் கருத்துச் செறிவு இருக்குமானல் அவற்றை இனிய எளிய சொற்களால் புலப்படுத்த முடியுமென்பது நமது இன்றைய இலக்கிய அனுபவம். ஓவியம், சிற்பம், இசை ஆகிய கலைகளும் இவ்வுண்மைக்குக் கட்டுப் பட்டவையே.

'ஆத்மார்த்திகத் துறையில் யாத்திரை செய்பவர்களை வழி காட்டி அழைத்துச் செல்லும் கலைஞன்' அப்பாதையை முன்பே நன்கறிந்திருக்க வேண்டும். அத் தெளிவு வாழ்க்கையனுபவத்தால் ஏற்படுவது. திடீரென்று சொப்பனத்தில் தோன்றுவதல்ல. மேலும் வழிகாட்டி யாத்திரிகர்களுக்குப் புரியாத பாஷையில் பேசினல் அவனை நம்பினவர்கள் கதி அதோ கதிதான். உண்மையான கலைஞன் தன் மற்றைய சகோதரர்களோடு ஒட்டி வாழ்ந்து அவர்கள் இன்ப துன்பங்களில் பங்கெடுத்துக் கொண்டு அவர்களுக்கு வழி காட்டுபவன். தான் கண்டறிந்த உண்மையை மற்றவர்களும் உணர்ந்து உய்ய வேண்டும் என்ற ஆர்வம் இருக்கும்போது அதற்கான சாதனங்களைத் தேர்ந்தெடுப்பது அவனுக்கு ஒரு பொருட்டல்ல. தன் குழந்தையிடம் எப்படிப் பேச வேண்டுமென்று ஒவ்வொரு அறிவுள்ள தாய்க்கும் தெரியும்.

நாடோடிப் பாடல்களும், சிற்பங்களும் கோயில் குளங்களும், நடனங்களும் நிறைந்த நமது நாட்டில், பாமரர் கலையைப் புரிந்து கொள்ள முடியுமா என்ற கேள்விக்கு இடமேயில்லை. வாழ்க்கையே ஒரு கலை என்று நாம் நம்புபவர்கள். வாழ்க்கையை வாழ்வதற்குத் தகுதியுடையதாகச் செய்வதே கலையின் நோக்கம். அதற்குப் பயன் படாத கலை வழக்கொழிந்த மொழிகளைப் போல் தானே மறைந்து போம்—அல்லது காக்ஷிசாலைப் பொருள்களாகி விடும். ஆகவே அவற்றைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

தூய்மைச் சித்திரம்

பி. கணபதி சுப்பிரமணியம்

பாடலிபுரத்தில் ஓவியர் அஸ்வ பூதியின் சித்திரக்கூடம். சுவர்கள் படங்கள் மயமாக விளங்கின. சட்டங்களில் பொறுத்தப்பட்ட திரைச்சீலைகளும், வர்ணங்களும் சிதறிக்கிடந்தன. படங்கள் யாவும் பௌத்தமத சம்பந்தமானவை. ஒரு மூலையில் யுத்த களத்தில் அசோகன் கண்ணீர் விடும் காட்சி தென்பட்டது. புத்தபிரான் யாகசாலையினின்றும் ஆட்டுக்குட்டியை மீட்கும் காட்சியே அப்படங்கள் யாவற்றிலும் சிகரமாக விளங்கியது. சித்திரக் கூடத்தையே தன் இருப்பிடமாகக் கருதிய கலைஞன் அஸ்வபூதி மனச்சாந்தியற்ற நிலையில் அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தான்.

அவனுக்கு வயது முப்பது இருக்கலாம். அழகன் என்று கூற முடியாவிட்டாலும் முகத்தில் அறிவுக் களை தாண்டவமாடியது.

கதவை யாரோ தட்டும் சப்தம் அவனுடைய ஆழ்ந்த சிந்தனையைக் கலைத்தது. கதவைத் திறந்து சுகிபவனை வரவேற்றான். சுகிபவன் ஒரு கவி. இருவரும் நெருங்கிய நண்பர்களாயினும் கருத்தில் மாறுபட்டவர்கள்.

"என்ன? எல்லாம் பழைய கந்தாயங்கள்தானே? அசோகனையும் புத்தனையும் இன்னும் எத்தனை விதங்களில்தான் சித்திரிப்பது? இன்னும் ஏதாவது பாக்கியிருக்கிறதா?" என்று நண்பனின் வாயைக் கிளறினான் சுகிபவன்.

"என் கொள்கைகள் உனக்குத் தெரியும். புத்ததேவனின் புனிதமான கோட்பாடுகளை மக்களின் மனதில்பதியச் செய்வதற்காகவே நான் என் கலைத் திறனைப் பயன்படுத்துவேன். வேறு வழிகளில் என் கற்பனை செல்லாது" எனப் பதிலளித்தான் அஸ்வபூதி.

"உனது திறமையை நீ எவ்விதத்திலும் பயன்படுத்திக் கொள்ளலாம். அது உன்னுடைய உரிமை. ஆனால் கலையின் லட்சியம் பிரசாரமல்ல. கலை, உணர்ச்சிகளைத் தூண்ட வேண்டும். கலையை, நான் ஒருவித மதுவெனக் கருதுகிறேன்; பிரமிப்பையும், போதையையும் விளைவிக்க வேண்டும். அவ்விதம் அமையாத நூல் அல்லது சித்திரம் கலைப்பொருளாகாது."

"உணர்ச்சிகளைத் தூண்டி மனிதனை மிருகமாக்கும் கலை எனக்கு வேண்டியதில்லை. மதத்திற்கு—சமூகத் தூய்மைக்கு—பக்க பலமாக விளங்கும் கலையையே நான் பெரிதும் விரும்புகிறேன்"

"அப்பொழுது உன்னுடைய திறமை கலப்பற்ற கலையாக பரிணமிக்காது. ஒருவேளை அது ஒரு வேதாந்தமாக விளங்கலாம். கலை உபகரணமல்ல. அது தனித்து நிற்கும் ஜோதி"

"சரி, நமது விவாதத்திற்கு முடிவு கிடையாது. நீ இளமையையும், சௌந்தர்யத்தையும், மனவெழுச்சிகளையும் வருணித்துக்

கவிகள் எழுதித் தள்ளு. நான் என்னுடைய வரட்டு வேதாந்தப் பாதையில் செல்லுகிறேன்"

"உன்னை வாதத்திற்கிழுப்பதில் ரஸமில்லை. கருத்து வேற்றுமையை ஒத்துக் கொள்ளாதிருந்தால்தான் வாதத்தில் ருசியுண்டு. நீ அதனை ஒத்துக்கொண்டு பேச்சிற்கு முடிவுகட்டுகிருய். சரி, இப்பொழுது என்ன படம் வரைவதாக உத்தேசம்? உன் வேதாந்தம் எனக்குப் பிடிக்காவிட்டாலும் உன்சித்திரங்களைப்பார்க்காமலிருக்க முடியவில்லை."

"ஒருகற்பனை மனதில் தோன்றியுள்ளது. ஆனல் அதை எவ்விதம் உருவகஞ் செய்வதென்று புலப்படவில்லை. தூய்மையைச் சித்திரமாக எழுத விரும்புகிறேன். ஒரு பெண்ணின் முகத்தில் தூய்மையைப் பிரதி பலிக்கச் செய்யலாமென்று திட்டம் போட்டிருக்கிறேன்."

"சந்நியாசி பூனைக்குட்டி வளர்த்த கதையாகி விட்டது. பெண்ணின் படம் வரையத் துணிந்து விட்டாயா?"

"நான் பெண்மையைத் தாயாகக் கற்பனை செய்கிறேன். பெண்மையின் பிறவி லட்சியமும் அதுதான்"

"ஒரு பெண் தாய்மைப் பதவியையடைய என்னுடைய காதல், கல்யாணம், உணர்ச்சிகள் யாவும் அவசிய மென்பதை ஒப்புக் கொள்ளுகிருயல்லவா?"

"இல்லை. சிருஷ்டியமைப்பில் பெண்ணின் முக்ய அலுவல் தாய்மை யென்பது என் கருத்து. சந்ததிகளைப் பெற்ற தாய்மார்களைத்தவிர மற்றவர்கள் இந்தப் புனித கைங்கர்யத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாதென்று சொல்வது தவறு. மடங்களிலுள்ள பிக்ஷுணிகள் யாவரும் பெற்றெடுக்காமல் தாய்மையின் கடமைகளை ஆற்றுகிருர்கள். தாய்மையின் மற்ருெரு முக்கிய அம்சம் தியாகம். தாயை விடச் சிறந்த தியாகி உலகில் கிடையாது. அவளுடைய அன்பு களங்கமற்றது. இந்த எண்ணங்கள் எழும்போது என் மனக்கண்முன் அசோகனின் குமாரி சங்கமித்திராதேவி காட்சி யளிக்கின்ருர். அவரைப் போன்று ஒரு உருவம் வரைவேனயின் அதுவே தூய்மைச் சித்திரமாக விளங்கும்."

"இவ்வளவு தூரம் மனதில் கற்பனை செய்துள்ள படத்தை ஏன் ஆரம்பிக்கவில்லை? சோம்பலா?"

"இல்லை. நமது கண்முன் எத்தனையோ தாய்மார்களைப் பார்க்கிருேம். இவர்களில் தூய்மைக்குச் சான்ருக விளங்கக் கூடியவர்கள் எத்தனையோ! அவர்களில் என் கற்பனைக்கேற்ற ஒரு பெண்மணியை அழைத்துவந்து, அவரை மாதிரியாகக் கொண்டு படத்தை வரைவதாக உத்தேசம். இந்த லட்சியப் பெண்மணியைத்தான் இந்நகரத்தில் தேடியலைகிறேன்."

"இந்தப் பெண் வேட்டை அபாயகரமானது. நான் எச்சரிக்கை செய்ய வில்லை யென்று குறை கூருதே. அடுத்த பௌர்ணமி யன்று சந்திப்போம். அதற்குள் உன் 'தூய்மை' முடிந்து விடாதா?"

"கட்டாயம் வா. கவி மதுவில் மயங்கிவிடாமல் வந்துசேர்." சுகி வெளியே சென்ருன். அஸ்வபூதி சித்திரகூடத்தின் கதவைப் பூட்டிவிட்டு வீதிவழியே நடக்கலானன்.

அடுத்தபௌர்ணமியன்று சித்திர கூடத்தில் நண்பர்களிருவரும் கூடினர். வழக்கம்போல சுகி பேச்சை ஆரம்பித்தான். "என்ன உன்னுடைய லட்சியப் பெண் அகப்பட்டாளா? தூய்மையைச் சித்திரமென்னும் சிமிழிலடைத்து விட்டாயா?

"உன்னுடைய வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு தானிருந்தேன். படம் முடிந்து ஒருவாரமாகிறது. இதோ பார்!"

உரை நீக்கிய சுகி திகைப்படைந்தான். வைத்தகண் எடுக்க முடியவில்லை. படத்தில் முப்பது வயதுப் பெண்ணின் முகம் காணப்பட்டது. கருணைவழியும் முகம். சோகத்தின் வெண்மையும் பொலிவும் அதில் ஒருங்கே தென்பட்டது. பெற்ற குழந்தையை வாரியணைக்கும் தாயின் அன்பு முகத்தினின்றும் வீசியது. சுகி சந்தோஷம் தாங்காமல் ஆர்ப்பரித்துக் கூத்தாடத் தலைப்பட்டான்.

"என்ன, சுகி உனக்குக்கூடத் தூய்மை வெறி பிடித்து விட்டதா? கொஞ்சம் சாந்தமாயிரு. உன் ஆர்பாட்டத்தைக்காண கூட்டம் கூடிவிடும்."

"கூடட்டுமே அஸ்வா, அஸ்வா, இன்றுதான் நீ உன் திறமையின் பலனைக் கண்டாய். உன் சிருஷ்டி உலகம் போற்றும் சிருஷ்டி. ஆனல் நீ வெற்றியை அனுபவிக்கத் தெரியாத் சாது. இவ்வித வெற்றியை நான் என் கலையிலடைந்தால் ஊரைக் கொளுத்திவிடுவேன். பள்ளி யறையில் ரிஸ்ய சிருங்கன் முழித்ததைப்போல் முண்டமாக நிற்கிருய்."

"தூய்மைப் படத்தை விமர்சனஞ் செய்யும்போது பள்ளியறை உபமானங்கள் அநுசிதம். இந்தப் படத்தை நமது மடத்திற்குப் பரிசளிக்கத் தீர்மானித்திருக்கிறேன். குருதேவர் மகாநந்தி அடுத்தவாரம் வருவதாகக் கூறியுள்ளார். மடத்திற்குத் தகுதியானதென அவர் கருதினல் அவருடன் படத்தை யனுப்பி விடுவேன்."

"சன்னியாசிகளின் மடத்திற்கா படம் எழுதினய்? இந்தச் சித்திரத்திற்கு ஓர் அரண்மனை போதாதே? நான் சொன்னல் கேட்கமாட்டாய். மடத்திற்கே அழு. சரி, நீ எந்தப்பெண்ணை மாதிரியாகக் கொண்டாய்? இத்தகைய உருவம் உனக்கு எங்கே கிடைத்தது?"

"எல்லாம் நமது ஊர்ப் பெண் மணிதான். பௌத்த விஹாரத்தில் அஸ்வகோஷரின் சிலை முன்னல் சந்தித்தேன். மடத்தில் பணியாற்றுபவள் என்று அறிந்தேன். நூறு வராகன் கூலியளிப்பதாக வாக்களித்து அழைத்து வந்து படத்தை வரைந்தேன். அந்தப் பெண்மணியின் சாந்த வதனத்திற்கு நூறு வராகனல்ல, உலகத்தையே அளிக்கலாம்."

"வாஸ்தவம். கண்களில் வீசும் தண்மையே போதும். அவள் நெற்றிக் கோடுகள் தாயின் தியாகத்தையும் கவலையையும் காட்டுகின்றன. இரத்தமற்ற வெண்மையான கன்னங்கள், தாயின் குழந்தைக்காக அநுஷ்டிக்கும் பத்திய வாழ்க்கையை யல்லவா ஞாபகப் படுத்துகின்றன."

"எது, நீ கூட என் வேதாந்தப் பாதைக்குப் போட்டியாக வந்து விட்டாய் போலிருக்கிறதே?"

"நான் போக வேண்டும். அடுத்தவாரம் வருகிறேன். அந்தப்

பெண்மணியை நேரில் பார்க்க விரும்புகிறேன். வடக்கு வீதியிலுள்ள புத்த விஹாரத்தில்தானே அவளைச் சந்தித்தாய்?"

"ஆம்" எனத் தலையசைத்தான் அஸ்வபூதி. நண்பனை யனுப்பி வதற்கு எங்கு கற்றுக்கொண்டாய்?" என்று வினவினன்.

"அந்த முகத்தில் மனதைப் பறிகொடுத்து விட்ட உனக்கு, மற்றவர்கள் வருவதும் போவதும் தெரியவா போகிறது? நீ உட்கார்,

விட்டுக் கதவைத் தாளிட்டுக் கொண்டான்.

★

ஒரு வாரத்திற்குப் பிறகு சித்திர கூடத்திற்குள் நுழைந்தான் சுகி. படத்தைத் தூரவைத்து விட்டு பல நிலையில் நின்று காட்சியை அனுபவித்தான் அஸ்வபூதி. நண்பன் வந்திருப்பதைக் கண்டு ஆச்சரியத்துடன் "வா, எப்பொழுது வந்தாய் பூனைபோல நுழை

நான் உன் படத்தை அனுபவிக்கட்டும்."

நண்பனின் தோளைப் பிடித்து ஆசனத்தில் அவனை அமர்த்திவிட்டு படத்தினருகே சென்று பல வினடிகள் அதனையே உற்று நோக்கினன் சுகி. பிறகு அடக்க முடியாமல் சிரிக்கத் தொடங்கினன். மேல் வஸ்திரத்தைக் கொண்டு வாயைப் பொத்திக் கொண்ட போதிலும் அவனல் சிரிப்பை அடக்க முடியவில்லை.

அஸ்வபூதி நண்பனை அணுகி "உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா? வெயிலின் கோளாறு? ஏன் இப்படிச் சிரிக்கிறாய்? அப்படிச் சிரிப்பதற்கு அச்சித்திரத்தில் என்னத்தைக் கண்டுவிட்டாய்?" என்று சற்று கோபமாகவே கேட்டான். ஒருவாறு தன்னைச் சாந்தப்படுத்திக் கொண்டு சுகி பதிலளிக்க ஆரம்பித்தான்.

"உன்னைச் சாதுவென்று நினைத்த நான் பைத்தியம் தான். உன்னுடைய துணிச்சல் என்னைப் பிரமிக்கச் செய்கிறது. ஊரறிந்த ஒரு விபசாரியின் படத்தை வரைந்து விட்டு அதைத் தூய்மைச் சித்திரமென அழைப்பதற்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் வேண்டும்? நீ ஓவியனல்ல; ஓர் இலக்கிய கர்த்தா. இச்சித்திரத்தின் மூலம் நீ ஹாஸ்ய ரஸத்தில் தலை சிறந்தவனென்பதை நிரூபித்துவிட்டாய். லோபியைக் கர்ணனென்றழைப்பது விகட கவிகளின் வழக்கம். ஆனால் இந்த முரண்பாட்டு நையாண்டியின் சிகரத்தை யல்லவா நீ எட்டிப் பிடித்துவிட்டாய்."

"என்னப்பா பிதற்றுகிறாய். கலை மதுவிற்குப் பதிலாக அசல் சரக்கையே உள்ளே தள்ளிவிட்டாயா? யார் விபசாரி? துணிச்சலும் நெஞ்சழுத்தமும் எங்கு வந்தன? கொஞ்சம் நிதானமாகப் பதில்சொல்?"

"உன்னுடைய லட்சியத் தூய்மைப் பெண்மணியின் வரலாற்றைத் தெரிவிக்கிறேன் கேள். அவள் பெயர் விலாசவதி. தெற்கு ராஜவீதியில் வசித்துவந்த பிரசித்தி பெற்ற தாசியாம். பிரபுக்களும் சேனுதிபதிகளும் அவளுடைய தரிசனத்திற்காகக் காத்திருப்பார்களாம். பாரபட்சமில்லாமல் தொழில் புரிந்துவந்ததில் தன் ஆரோக்கியத்தையும், இளமையையும் இழந்தாளாம். பிறகு வழக்கம் போல வறுமையும் அணுகிற்றாம். உடலை விரும்புவாரில்லாததால் உழைப்பை விற்கத் தலைப்பட்டாளாம்.

"என்ன மதிமோசம். நீ சொல்வது உண்மைதானா? வேடிக்கை வேண்டாம். குடும்ப விளக்கையேற்றிவைக்கும் குலதெய்வமென்றல்லவா நினைத்தேன்."

"ஆம், ஆதியில் குடும்பப் பெண்தான். பரம்பரைத் தாசியல்ல. நலந்தாவில் வசித்துவந்த ஒரு பிரபுவின் மகளாம். யௌவனத்தில் ஒரு வாலிபனால் வஞ்சிக்கப்பட்டாளாம். பெற்றோர் வீட்டை விட்டுத் துரத்தியதால் இந்தத் தொழிலில் இறங்கினாளாம். பரம்பரைத் தாசியாயிருந்தால் காசையாவது காப்பாற்றத் தெரியுமே? எந்தத் தொழிலிலும் புதிதாய்ப் பிரவேசிப்பவர்களுக்குச் சிறிது சிரமம்தான் ஏற்படும். அது உலக வழக்கு."

"போதுமே உன் சமயமறியாத வேதாந்தமும், உலக வழக்கும். என் கற்பனை மணல்மேடு போல சிதைந்து விட்டதே? என்ன ஏமாறம்?"

"ஆமாம். அவளுடைய நெற்றிக்கோடுகள் கருணையின் அறிகுறிகளென நினைத்தாய். அவள் சருமத்தின் வெண்மை தூய விரத வாழ்க்கையின் சான்றெனத் தீர்மானித்தாய். ஆனால் அவை கொடிய மேக நோயின் சின்னங்களாகும். அவள் பூர்வீகத்தை விசாரிக்காமலா நீ படம் வரைய ஆரம்பித்தாய்?"

"ஏதோ விருத்தாந்தத்தைக் கேட்டுப்பார்த்தேன். சொல்வதற்கு லஜ்ஜைப் பட்டதால் வற்

புறுத்தவில்லை. விபரம் தெரிந்திருந்தால் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கமாட்டேன்.''

''அவளைப்பற்றிக் கவலைப்படுவானேன்? விஷயம் எனக்கு ஒருவனுக்குத்தான் தெரியும். சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி மௌன விரதம் அனுஷ்டிப்பதில் எனக்கு ஆட்சேபணை கிடையாது. படம் நன்ருக அமைந்து விட்டது. மடத்திற்கு அனுப்பிவிட்டு வேறு விஷயங்களில் உன் கவனத்தைச் செலுத்து.''

''இனி இந்தப் படத்தைப் பார்க்கவும் சகியேன். நீயே அதைக் கிழித்து எறிந்துவிடு. தருமம், பரிசுத்தம் முதலியன மனித வர்க்கத்தின் போர்வைகள்தானு? காமமும், களவும்தான் நமது இயற்கை குணங்களா? இந்தச் சம்பவம் என் இலட்சியங்களையே சிதைத்து விட்டது.''

''நான் சொன்ஞல் நீ கேலி செய்வது வழக்கம். கற்பு, தூய்மையென்ற சொப்பன உலகில் உன் கலையைப் பாழ் படுத்தாதே. வசந்த காலத்தையும், சௌந்தர்யத்தையும், உணர்ச்சிகளின் அட்டகாசங்களையும் விளக்கி ஓவியம் வரை யென்று சொன்னேன். நீ கேட்கவில்லை. இப்பொழுதாவது கேள். வேதாந்திகள் வெறுத்துத் தள்ளும் இந்த ஆபாசங்கள் தான் கலை விளக்கிற்கு எண்ணெய். கலைகளை இவைகளினின்றும் பிரிக்க முயல்வது தவறு. உன்திறமையை உலக வழக்கிற்கேற்றதாகச் செய். உன்னை விடச்சிறந்த கலைஞன் கிடையாது,''

''சரி, இப்பொழுது என் மனம் தனிமையை விரும்புகிறது. உன் கொள்கைகளைப் பிறகு விவாதிப்போம். போய் வா.''

அஸ்வபூதி நிலையற்ற மனத்தினனாய் சித்திர கூடத்தின் பின் வாசலைத் திறந்து தோட்டத்திற்குள் போகலானுன். படத்தைச் சட்டத்தினின்றும் நீக்கி, சுருட்டி ஒரு மூலையிலெறிந்துவிட்டு அவ்விடத்தைவிட்டு அகன்ருன் சுகிபவன்.

★

மூன்று மாதங்களில் அநேக படங்களை வரைய முயற்சித்தான் அஸ்வபூதி: ஆனுல் அவைகளைப் பூர்த்திசெய்ய முடியவில்லை. தன் கற்பனையில் நம்பிக்கையை இழந்து விட்டான். வேலையில் ஒருமுகமாக ஈடுபடுவதற்கு ஓடவில்லை. அரைகுறையாக வரையப்பட்ட மூன்று படங்களை தூரத்தில் பொறுத்தி விட்டு, எதைப் பூர்த்தி செய்யலாம். எவ்விதம் பூர்த்தி செய்யலாமென்று சிந்தித்துக் கொண்டிருந்தான். யாரோ நடந்துவரும் காலடி சப்தத்தைக் கேட்டுத் திரும்பினுன். பௌத்த மடத்தலைவர் மகாநந்தியடிகள் வருவதைக் கண்ணுற்று மரியாதையுடன் வரவேற்ருன்.

அடிகள் ஆசனத்தில் அமர்ந்ததும் சம்பாஷணையைத் துவக்கினுர்.

''அஸ்வா, என் மடத்திற்கு வருவதில்லை? படங்கள் கொண்டு வருவாயென்று நினைத்தேன். மூன்று மாதங்களாய்க் காணுததால் நேரிலேயே வந்துவிட்டேன்.''

''மனதிற்குச் சாந்தியில்லை. கலையிலும் கருத்துச் செல்வதில்லை. அதனுல்தான் படங்கள் வரையவில்லை.''

''கலைஞனுக்கு அவன் கலை சாந்தியளிக்குமே. சரி, படங்களைப் பார்க்கலாமல்லவா?''

"அடிகளே, படங்கள் பூர்த்தியாகவில்லை. பூர்த்தி செய்வதற்குக் கற்பனை ஓடவில்லை. தாங்கள் யோசனை கூறினல் அதன்படி நடக்கிறேன்."

"மற்றவர்கள் கருத்தைக்கடன் வாங்குவது கலைஞனுக்குக் களங்கம் விளைவிக்கும். உனக்குத் தெரியாதா?" என்று கூறிக்கொண்டே சித்திரகூடத்தைச் சுற்றிப் பார்க்கலானர் அடிகள். அஸ்வபூதியின் அரைகுறைப் படங்கள் அவருக்குத் திருப்தியளிக்கவில்லை. காலடியிற் கிடந்த ஒரு படச் சுருளை எடுத்து விரித்துப் பார்த்தார். அஸ்வன் அப்படத்தை அவருடைய கரங்களினின்றும் பிடுங்க எண்ணினன். ஆனல் அவ்விதம் அபசாரம் செய்ய கை முன்வரவில்லை.

"அந்தப்படத்தைப் பார்க்க வேண்டாம், அடிகளே. அதுதான் என் மனக்குழப்பத்திற்குக் காரணம். அந்த துஷ்டையின் படத்தைத் தூர எறியுங்கள். உங்கள் புனித ஸ்பரிசத்திற்கு அது ஏற்றதல்ல."

"கலையின் சிகரமாக விளங்கும் இந்தச் சித்திரத்தை ஏன் பார்க்கக் கூடாது? இம் முகத்தில் தூய்மையின் கனல் வீசுகின்றதே. ஏன் உனக்கு இந்தப்பெண்மேல் இவ்வளவு துவேஷம். ஆத்திரப்படாமல் விஷயத்தைச்சொல்."

அஸ்வபூதி கிலேசத்துடன் ஒருவாறு தன் கதையைச் சொல்லி முடித்தான். சாந்தமாகக் கேட்டுக் கொண்டிருந்த அடிகளின் முகத்தில் பரபரப்பு தென்பட்டது. அவர் தமது அணிகலமான பொறுமையையிழந்து, "அவளுடைய முழு வரலாற்றையும் தெரிந்து கொள்ளாமல் நீ அந்தப் பெண் மணியைத் தூஷிப்பது மடமை" எனக்கூறினர்.

"முழு வரலாறு? இந்தப் பாதி வரலாறு போதாதா, சுவாமி?"

"அவசரப்படாதே, அவளுடைய வாழ்க்கையின் பிற்பகுதியை நானே கூறுகிறேன். பிறகு உன் அபிப்பிராயத்தை வெளியிடு" எனக் கூறி ஆசனத்தில் அமர்ந்து கதையைச் சொல்ல ஆரம்பித்தார். "அவள் சமீப காலத்தில் எத்தகைய வாழ்க்கை நடத்தினளென்பது உனக்குத் தெரியாது. தனது பாப வாழ்க்கைக்குப் பிராயச்சித்தமாக நமது மடத்தில் பணிப்பெண்ணகத் தொண்டாற்றி வந்தாள். அவள் நடத்தை மாசுமறுவற்று விளங்கியது. ஒரு வருஷத்திற்குமுன் அவள் வழியில் ஒரு திக்கற்ற கபோதியைச் சந்தித்தாள்; அவன் தன் தந்தையென்பதையுமறிந்தாள். தான் யாரென்பதைத் தெரிவிக்காமல் அக்கிழவனைத் தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்று பராமரித்து வந்தாள். அவன் தன் மகளை உயிரோடு பறி கொடுத்ததாகவும், பிறகு மனைவியையும் செல்வத்தையும் இழந்து இங்கிலைக்கு வந்ததாகவும் கூறினனும். அன்று முதல் கிழவன் சுகமாகக் காலங் கழித்து வந்தான். பெண்ணின் மனம் வாதனைப் பட்டது. தான் யாரென்று தெரிவித்தால் தன் சம்ரட்சணையைத் தகப்பன் நிராகரிக்கக்கூடுமெனப் பயந்தாள். அவளுக்கு அதிக நாட்கள் வாழ்வோம் என்பதில் நம்பிக்கை கிடையாது. தன் வியாதியின் வன்மையை உணர்ந்தவள். தந்தையின் பாதுகாப்பிற்காகப் பணத்தைச் சேமித்து நமது மடத்துக் காரியாலயத்தில் கொடுத்துவந்தாள். அவள் ஒரு வாரத்திற்கு முன்பு

இறந்தாள். அவள் இறக்குந் தறுவாயில் கிழவன் பார்வையை ஒரு தடவையாவது அளிக்கும்படி கடவுளைப் பிரார்த்தித்தான். ஆனால் அவள் "என்னுடலை எரித்த பிறகு அவருக்குப் பார்வையளிப்பாயகா" என வேண்டிக் கொண்டாள். தன் பாப உடலைத் தந்தை பார்த்துவிடலாகாது எனக் கருதினாள் போலும்."

"கடைசிக்காலத்தில் மனமாறி விட்டதே! அதுவே போதும். இருந்தாலும் அவளுடைய படத்தைத் தூய்மைச் சித்திரமாகக் கருத என் மனம் சம்மதிக்காது" என்றான் அஸ்வன்.

"வாஸ்தவம். அவளுடைய மனத் தூய்மையை சமூகம் நம்பாது. ஆசாபாசங்களுக்கு இலக்காகாத குழந்தையின் தூய்மையைப் போற்றுவோம். ஆனால் தவறியவர்கள் மீண்டும் தரும வழியில் நடந்தால் அதனை எளிதில் ஒப்புக்கொள்ள மாட்டோம். அவர்களுக்கு நன்னெறியில் நடப்பதற்கு மனத்திண்மை வேண்டும். அவர்களுடைய தூய்மை அவர்களுடைய உணர்ச்சிகளைச் சுட்டெரிக்க வேண்டும். இத்தகைய கனல் போன்ற தூய்மையை நான் அவளிடம் கண்டேன்."

அஸ்வபூதி பய பக்தியுடன் படத்தைக் குருதேவரிடமிருந்து பெற்றுக் கொண்டு அவருடன் மடத்தை நோக்கி நடக்கலுற்றான்.

காதற் கதை

ஆர். ஆறுமுகம்

கையிலிருந்த பத்திரிகையை மேஜை மீது விசிறி எறிந்தான் விநாயகம். அதில் அவனுடைய வெறுப்பு வெளிப்பட்டது. அந்தச் சமயத்தில்தான் சுந்தரமும் அங்கே வந்தான்.

"என்ன விநாயகம், யார்மேல் கோபம்? ஏன் ஒரு மாதிரியாக இருக்கிருய்? சாப்பாடு ஆகி விட்டதா?" என்று கேட்டுக் கொண்டே மேஜைக்கருகிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்தான் சுந்தரம்.

"சாப்பாட்டுக் கெல்லாம் என்ன குறைவு? இன்றைக்கு வீட்டில் சாப்பாடு தடபுடல் தான்! அந்தச் சந்தோஷத்தில் வந்து அதோ கிடக்கிறதே மேஜை மேல், அந்த சஞ்சிகையை எடுத்துப் புரட்டினேன். அதிலிருந்த ஒரு கதைதான் என் கோபத்தைக் கிளப்பி விட்டது."

"ஏன், கதை உன் மனத்திற்குப் பிடித்ததாக இல்லையோ?"

"கதைகள் எல்லாமே நம் மனத்திற்குப் பிடித்ததாக இருக்க முடியுமா? எழுதுகிறவர்கள் மனதைப் பொருத்து அது அமையும். ஆனல் பாதிக்கு மேற்பட்ட கதைகள் தரித்திரத்தையும், ஏழ்மையையும் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. மீதிக் கதைகள் காதல் கதைகளாகவே வருகின்றன. இவைகளைத் தவிர பத்திரிகையில் வேறு எதையும் எழுத முடியாதா?" என்று விநாயகம் எரிச்சலாகக் கேட்டான்.

"நானும் இதைப்பற்றி உன்னைப்போல பல தடவைகளில் யோசித்ததுண்டு. நானும் நீயும் அதைப்பற்றிப் பேசிப் பலன்? எழுதுகிறவர்களுக்கல்லவா அந்த யோசனை வேண்டும்?" என்றுன் சுந்தரம்.

"நான் யோசனை செய்வதோடு நின்றுவிடவில்லை. ஒரு கதையே எழுதி வைத்திருக்கிறேன்!"

"விநாயகம், உண்மையாகவே தான் சொல்லுகிருயா? எங்கே அதை எடு பார்க்கலாம்"

"அந்த மேஜையின் அறையைத் திறந்து பார். அதற்குள்ளே தானிருக்கிறது"

சுந்தரம் சிரித்துக் கொண்டே மேஜையைத் திறந்து அதை எடுத்துப் படிக்க ஆரம்பித்தான்.

"சுந்தரம் நீ படிப்பதற்கு முன்னல் ஒன்று சொல்லி விடுகிறேன். இதுதான் என் முதல் முயற்சி. ஆகையால் அதில் ஏதும் குறைகளிருந்தால் என்னைக் கேலி செய்யாதே. எப்படித் திருத்தியமைக்க வேண்டுமென்று சொல்.

அதன்படி செய்யத்தயார்'' என்று பீடிகை போட்டான் விநாயகம்.

"சரி, முதலில் படித்துப் பார்த்து விட்டு பின்பு சொல்லுகிறேன் என் அபிப்பிராயத்தை'' என்று மெதுவாகத் தனக்குள்ளேயே படிக்க ஆரம்பித்தான்:—

வாசு, நல்ல கௌரவமான குடும்பத்தில் பிறந்தவன். அவன் தந்தைக்கு ஏராளமான ஆஸ்தி இருந்தது. ஒரே பையனுதலால் அவன் பி. ஏ. வரை படித்த பிறகு, மேல் படிப்பிற்காக லண்டனுக்கும் அனுப்பினர். அங்கே அவன் படித்துக்கொண்டிருக்கும் போதே தந்தை இறந்து விட்டதாக ஒரு நாள் தந்தி வந்தது. அதற்காக படிப்பைக் கெடுத்துக்கொண்டு வரவேண்டாமென்று அவன் தாய் அவனுக்கு யோசனை கூறியிருந்தாள். ஆனல் அதற்கடுத்த மாதம் அதே கவலையில் அவன் தாயும் இறந்து விட்டதாக மற்ருெரு தந்தி வந்தது. வாசு தன் படிப்பை லக்ஷியம் செய்யாமல் உடனே கப்பலேறி விட்டான். தன் பெற்ருேர்களுக்கு ஒரே குமாரனுயிருந்தும் அவர்களுடைய அந்திய காலத்தில் அவர்கள் பக்கத்திலிருந்து வேண்டிய உதவியைச் செய்ய முடியாது போனது பற்றியே நினைத்து அவன் கவலைப்பட்டான். கப்பலில் அவன் இரண்டாம் வகுப்பில் தான் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். கப்பலும் பிரம்மாண்டமானது. பிரயாணிகளுக்கு மனச் சஞ்சலம் ஏற்பட்டாலோ அல்லது பிரயாணத்தில் அலுப்புத் தட்டினலோ அதை மாற்றிக் கொள்ள அவர்களுக்காக ஒரு சினிமாத்தியேட்டர்கூட கப்பலில் இருந்தது. அங்கேயாவது தன் மனதிற்கு நிம்மதி கிட்டுமா வென்று நினைத்து ஒரு டிக்கட் வாங்கிக்கொண்டு உள்ளே போய் உட்கார்ந்தான். படம் நல்லது தான். ஆனல் அவனுடைய மனம் அதில் செல்லவில்லை. பாதியிலேயே எழுந்து வெளியே வந்து கப்பலின் மேல் தளத்திற்குச் சென்ருன். நடு நிசி. குளிர் காற்று சிலு சிலு வென்றடித்துக் கொண்டிருந்தபடியால் யாருமே அங்கே காணப்படவில்லை. அவன் அதையும் கவனிக்காமல் பரந்த கடலை நாலா பக்கத்திலும் ஒரு பார்வை பார்த்து விட்டு கையைப் பின்புறமாகக் கட்டிக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான். 'ஊருக்குப் போய் என்ன செய்வது? தன் தந்தையின் ஆஸ்தியை வைத்துக் கொண்டு சோம்பேறித் தனமாகக் காலம் கழிப்பதைத் தவிர வேறு வழியில்லையா......' இவ்விதமான எண்ணங்கள்தான் மேலும் மேலும் அவன் மனதில் குவிந்து கொண்டிருந்தன. அங்கே போடப்பட்டிருந்த நாற்காலி ஒன்றில் சோர்ந்து போய் உட்கார்ந்தான். கப்பல் போகும் திசைக்கு எதிர் புறமாகப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்த அவனுக்கு தூரத்தில் மினுக்கு மினுக்கென்று பிரகாசித்துக் கொண்டிருந்த கலங்கரை விளக்குத் தென்பட்டது. அதையே கூர்மையாகக் கவனித்துக்கொண்டிருந்த அவனுக்கு மேல் தளத்தின் கோடியில் அவன் பார்த்துக் கொண்டிருந்த அதே திசையில் ஒரு உருவம் இலேசாக அசைவது தெரிந்தது. ஆணு, பெண்ணு என்று நிச்சயிக்க முடியவில்லை.

தன்னைப் போலவே அந்த உருவமும் மன அமைதியை நாடி மேலே வந்திருக்கக் கூடுமோ என்று அவன் யோசித்துக் கொண்டி

ருக்கையில் அது மறுபடியும் ஒரு அடி நகர்ந்தது. வாசுவிற்குச் சந்தேகம் தட்டியது. ஒரு வேளை கடலில் குதிக்க முயற்சியோ என்ற எண்ணம் எழுந்ததும் உடனே அந்த இடத்தை நோக்கி விரைந்தான். கோட்டுப் பையிலிருந்த ‘டார்ச்’சை எடுத்து ‘பொத்தானை’ அமுக்கினான். அந்த உருவமும் சட்டென முகத்தை மறு பக்கம் திருப்பிக்கொண்டது. அதன் உடையிலிருந்து அது பெண் என்று கண்டு விட்டான். ‘பெண்! இந்நள்ளிரவில் இங்கே தனித்து நிற்கக் காரணம்?......கேட்டுப் பார்க்கலாமே! என்று தீர்மானித்து, “மன்னிக்க வேண்டும். நீங்கள்......” என்று ஆங்கிலத்தில் ஆரம்பித்தான்.

அவன் கேள்வி முடிவதற்குள்ளேயே அவள் சட்டெனத் திரும்பி “தயவு செய்து என்னைத் தொந்திரவு செய்யாதீர்கள். உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போங்கள்” என்று அவனைத் தடுத்தாள்.



“நான் உங்களைத் தொந்திரவு செய்வதாக நினைக்கக் கூடாது. எனக்கு உங்கள் பேரில் சந்தேகம் ஏற்பட்டது........” என்று மறுபடியும் ஆரம்பித்தான் வாசு.

“என் பேரில் சந்தேகமா? என்ன சந்தேகம்?” என்று கோபமாய்க் கேட்டாள் அந்தப் பெண்.

“வேறொன்றுமில்லை. ஏதோ வாழ்க்கையில் ஏற்பட்ட மனக் கசப்பினால் உயிரை......”

“ஆம் உயிரை மாய்த்துக் கொள்ளத்தான் மார்க்கம் தேடிக் கொண்டிருக்கிறேன். அதில் உங்களுக்கென்ன சிரத்தை?”

“என் கண்ணுக்கு எதிரில் இப்படி ஒரு காரியம் நடக்க நான் பார்த்துக் கொண்டிருப்பது சரியல்ல. மனித தர்மத்துக்கே அடுக்காது”

“அந்த உபன்யாசமெல்லாம் நான் உங்களிடம் கேட்கத் தயாராயில்லை. ஒரு பெண் தற்கொலை செய்து கொள்ளத் துணிந்து விட்டாளென்றால், அவள் எவ்வளவு கஷ்டங்களுக்கு ஆளாகியிருப்பாள் என்று க்ஷணம் யோசித்தால் நீங்கள் இப்படிப் பேச மாட்டீர்கள்”

“அது தெரியும். ஆனால்......” என்று இழுத்தான் வாசு.

“உங்களோடு வாதாடிக் கொண்டிருக்க எனக்கு இஷ்டமில்லை. திடீரென்று தண்ணீரில் குதித்து விட்டால் நீங்கள் என்ன செய்ய முடியும்?”

“இதோ இங்கேயிருக்கிற பொத்தானை அழுத்தினால் மாலுமியின் அறையில் மணி அலறும். உடனே இதற்கென்று தயாராயிருக்கும் சிப்பந்திகள் கடலில் குதித்து உங்களைக் காப்பாற்றி விடுவார்கள்!”

“பின்பு, தற்கொலை செய்து கொள்ள முயற்சித்த குற்றத்திற்காக நான் சிறை வாசத் தண்டனை பெற்று சித்திரவதையடைய வேண்டும். அதுதானே உங்கள் விருப்பம்” என்று முன்னிலும் கோபமாகக் கேட்டாள்.

அதே சமயத்தில் படியேறி மேல் தளத்திற்கு இன்னும் யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டது. அவர்கள் மேலே வந்ததும் வாசு ‘டார்ச்சை’ ஏற்றிப் பார்த்தான். ஆணும் பெண்ணும்; காதலர்கள். தனித்திருக்க ஏகாந்

தமான இடத்தை நாடி வந்தவர்கள்.

"சரி, இனி என் காரியம் பலிக்காது. நான் கீழே போகிறேன்" என்று சொல்லி விட்டு அவள் மடமடவென்று படிகளிலிறங்கினாள்.

வாசுவும் அவள் பின்னாலேயே இறங்கினான். "நீங்கள் என்னிடம் உண்மையைச் சொல்லா விட்டால் இப்போதே மாலுமியிடம் போய்த் தெரிவித்து உங்களைக் கண்காணிப்பில் வைக்கும்படி செய்வேன்" என்று பயமுறுத்தினான்.

அவள் சட்டென படியில் நின்று "இதுதான் செய்ய முடியுமா? இதற்கு மேலும் ஏதாவது செய்ய முடியுமா?" என்று அதட்டிக் கேட்டாள்.

"கோபித்துக் கொள்ளாதீர்கள். தயவு செய்து என் அறைக்கு வந்து உங்கள் கஷ்டங்களைச் சொல்லுங்கள். உங்களுடைய துன்பங்கள் தவிர்க்க முடியாததாயிருந்தால் நானே உங்களைக் கடலில் தள்ளி விடுகிறேன்!" என்று அவளுக்கு அனுசரணையாகப் பேசினான். அவள் சற்று யோசித்து விட்டு மறுபடியும் படிகளில் இறங்கிக் கீழ்த்தளத்திற்கு வந்தாள்.

வாசு அவளுக்கு முன் நடந்து கொண்டே, "வாருங்கள், இரண்டாம் வகுப்பில்தான் நானிருக்கிறேன். சௌகரியமான இடம் யாரும் வரமாட்டார்கள்" என்று சொல்லித் தன் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றான்.

அறையைத் திறந்து அவளை உட்காரச் சொல்லிவிட்டு, எலக்ட்ரிக் மணியை அடித்து ஒரு பட்லரை வரச்செய்து இரண்டு கப் சூடான காப்பி கொண்டு வரச் சொன்னான். காப்பியை இருவரும் குடித்தார்கள். இவ்வளவு நேரமும் குளிர் காற்றில் மேல் தளத்தில் நின்று கொண்டிருந்த படியால் உள்ளும் புறமும் குளிர்ந்து போயிருந்த அவர்கள் உடலுக்குள் காப்பி சென்றதும் ஒரு உற்சாகம் பிறந்தது.

"என் துயரங்களைத் துடைக்கவோ அல்லது எனக்கு உதவி செய்ய உங்களால் முடியுமென்று நம்பியோ நான் உங்கள் விருப்பத்திற்கு இணங்கி இங்கே வரவில்லையென்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சமயமும், சந்தர்ப்பமும் என்னை இங்கே பலவந்தமாகத் தள்ளிக் கொண்டு வந்து விட்டது. ஆகையால் என் கதையைச் சுருக்கமாகவே சொல்லி விடுகிறேன்" என்று அப்பெண் ஆரம்பித்தாள். வாசு அதை ஆவலோடு கேட்டான்.

"என் தகப்பனார் இந்தியாவில் சர்க்கார் காரியாலயத்தில் நல்ல அந்தஸ்துள்ள உத்தியோகத்திலிருந்தார். மாதம் ஒன்றுக்கு சம்பளம் வரும்படி யெல்லாம் சேர்த்து மூவாயிர ரூபாய் கிடைத்து வந்தது. அதனால், நான் அவருக்கு ஒரே பெண்ணானபடியால் என்னை நன்றாய்ப் படிக்க வைத்தார். என் படிப்பு முடிந்த சமயம் என் தாயார் இறந்து விட்டாள். என் தகப்பனருக்குச் சொல்லொணாத் துக்கம். எனக்கோ கேட்க வேண்டியதில்லை. எங்கள் இருவர் மனதும் நிம்மதியடைய அயல்நாடுகளைச் சுற்றிப் பார்த்து விட்டு வரலாம் என்றார். அவருக்கு ஒரு பெரிய வீடும் பாங்கியில் ரொக்கமாக ஒரு லக்ஷ ரூபாயும் இருந்தது. வேலையிலிருந்து

ஒரு வருஷம் முன்பாகவே பென்ஷன் வாங்கிக் கொண்டு என்னேடு புறப்பட்டு விட்டார். ஐரோப்பாவையெல்லாம் சுற்றிப் பார்த்து விட்டு லண்டனுக்கு வந்தோம். அங்கே ஒரு மாதம் தங்குவதாக திட்டம் போட்டிருந்தபடியால் ஒரு பெரிய வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டிருந்தோம். அடிக்கடி என் தாயாரைப் பற்றி பேசிக்கொண்டிருந்த என் தகப்பனர் லண்டனுக்கு வந்த பின்பு சிறிது சிறிதாக மறந்து விட்டார். நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு ஒரு ஆங்கிலேய மாது அடிக்கடி வந்து என் தகப்பனரிடம் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் போவாள். அவள் யாரென்று கேட்டபோது, இந்தியாவிலிருக்கும்போது அவளும் தன்னேடு ஆபீஸில் வேலை பார்த்ததாகச் சொன்னர் என் தந்தை. அவள் நடந்து கொண்ட முறையிலிருந்து எனக்குச் சந்தேகம் வலுத்தது. ஒரு நாளிரவு என் சந்தேகத்தையும் தீர்த்துக் கொண்டேன். அன்று முதல் அவரோடு நான் சரியாகப் பேசுவதில்லை. ஊருக்குத் திரும்பிப் போகலாமென்று நான் கேட்டதற்கு அவருக்குத் தற்சமயம் வர இஷ்டமில்லையென்றும், எனக்கு இஷ்டமானல் போய் விடும்படியாகவும் சொல்லி விட்டார். நானும் புறப்பட்டு விட்டேன். எனக்கு இன்னும் கலியாணமாகவில்லை. ஊரில் வீடு இருக்கிறது. வேலைக்காரர்கள் இருக்கிருர்கள். அங்கே போய் என்ன செய்யப் போகிறேன். அதனல்தான் இங்கேயே என் வாழ்க்கையை முடித்துக் கொள்ளத் தீர்மானித்தேன்" என்று முடித்தாள்.

இதுவரை பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த வாசு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். அவள் தன் கண்களில் பெருகிய நீரைத் துடைத்துக் கொண்டாள்.

"உங்கள் தந்தையால் ஏற்பட்ட உங்களுடைய மனத்துயருக்கு நீங்கள் இந்த முடிவிற்கு வந்தது எனக்கு என்னமோ சரியாகத் தோன்றவில்லை. அவர் கையில் பணம் இருக்கிறவரைதானே அந்த ஆங்கிலமாது அவரிடம் இருப்பாள். அதை உறிஞ்சிவிட்ட பிறகு அவள் சொல்லிக் கொள்ளாமல் போய் விடுவாள். அவரும் திரும்பி வந்து விடுவார். அதுவரை நீங்கள் வீட்டில் போய் தங்கியிருந்தால் என்ன?" என்று கேட்டான்.

"அதையெல்லாம் நான் யோசித்து விட்டேன். நான் தனியாக வீட்டில் இருந்தால் ஊரில் பலரும் பலவிதமாகச் சொல்லுவார்கள்"

"சரி, அப்படியானல் நான் சொல்லுகிறபடி செய்யுங்கள். எனக்கும் தாய் தந்தையில்லை. சொத்து ஏராளமாயிருக்கிறது. என்னேடு வந்து விடுங்கள். உங்களை என் சகோதரி போலப் பாவித்து நடத்தி, நல்ல இடத்தில் கல்யாணமும் செய்து வைக்கிறேன்" என்ருன் வாசு.

"அது எப்படி முடியும்? உங்கள் ஊரில் உங்களைப் பற்றி என்ன சொல்லுவார்கள்? சீமைக்குப் போய் யாரோ ஒரு பெண்ணைக் கூட்டிக் கொண்டு வந்து வைத்திருக்கிறதாகத்தானே சொல்லுவார்கள். உங்களுக்கு அந்த அபக்யாதியைக் கொடுக்க எனக்கு இஷ்டமில்லை" என்ருள் அவள்.

"யார் என்ன சொன்னலும் சொல்லட்டுமே. அதனல் நமக்கென்ன? கடவுளுக்குப் பயந்து மனச் சாக்ஷிக்கு விரோதமில்லா

மல் நடந்து கொண்டால், கடைசியில் ஒரு நாளைக்கு ஊராருக்கும் உண்மை தெரியாமலா போய் விடும்?''

"இப்போது நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் நாளடைவில் நம் மனம் எப்படியெல்லாம் மாறுமோ யார் கண்டது?''

"அந்தப் பயமே வேண்டாம் உங்களுக்கு. நான் வாக்குத் தவறவே மாட்டேன். சத்தியம் வேண்டுமானாலும் செய்து தருகிறேன்'' என்று அழுத்தமாகக் கூறினான் வாசு.

வெகுநேர விவாதத்திற்குப் பின் அவளும் அவன் யோசனையை ஏற்றுக் கொண்டாள். பம்பாயில் கப்பலை விட்டிறங்கி இருவரும் தங்கள் ஊருக்கு வந்து சேர்ந்தார்கள். சூர்யா — அந்தப் பெண் — வாசு வீட்டிலேயே தங்கினாள். அவளுடைய தகப்பனாரிடமிருந்து மாதாமாதம் அவளுக்குப் பணமும் கடிதமும் வந்து கொண்டிருந்தன. வாசுவும் அவளுக்கு வாக்களித்தபடியே தன் சொந்தத் தங்கை போலவே நடத்தி வந்தான். தனக்குத் தெரிந்த பல பெரிய இடங்களிலும் சொல்லி வைத்து அவளுக்கு ஒரு நல்ல மாப்பிள்ளையையும் நிச்சயம் செய்தான். இதைக் கேட்ட சூர்யா, அவனிடம் ஒரு நாள் சொன்னாள்: "நீங்கள் எனக்காக எவ்வளவு சிரமப்படுகிறீர்கள் என்பதை நான் சொல்லக் கூடாது. ஆனால் சொல்லாமலும் இருக்க முடியவில்லை. நீங்கள் கப்பலில் எனக்கு வாக்குறுதி கொடுத்ததை இது வரை கடைப் பிடித்து வந்தது போதும். நீங்கள் தீர்மானம் செய்திருக்கிற மாப்பிள்ளை எனக்குப் பிடிக்கவில்லை. என்னிஷ்டப்படி இந்த விஷயத்தில் நடந்து கொள்ள எனக்கு சுதந்திரம் கொடுங்கள்''

"இதை ஏன் நீ முன்னாலேயே சொல்லவில்லை. சரி, இப்போதும் ஒன்றும் தாமதமாகிவிடவில்லை. உனக்கு யார் மேல் பிரியம் என்று சொல்லு. அதையே முடிக்கிறேன்'' என்றான் வாசு.

"நான் எப்படிச் சொல்லுகிறது உங்கள் முன்னிலையில். இதோ இந்தக் கடிதத்தில் எழுதித் தருகிறேன்'' என்று சொல்லிவிட்டு இரண்டு வரி எழுதிக் காண்பித்தாள்.

அதைப் பார்த்த வாசு திடுக்கிட்டு விட்டான்.

"சூர்யா, இது என்ன பைத்தியக்காரத் தனம்? என் மேலா உனக்குப் பிரியம்? வேண்டாம். உலகத்தார் எதிர்பார்த்தபடி நாம் நடந்து கொள்ள வேண்டாம். சகஜமாக ஆணும் பெண்ணும் சிநேகிதமானால் அது காதலில் தான் முடியும் என்று எல்லோரும் எண்ணுவதை நான் பொய்ப்பிக்க வேண்டுமென்றே இவ்வளவு பாடு படுகிறேன். நான் உனக்குச் சகோதரன்தான். என் உறுதியை மாற்ற முடியாது'' என்று கடுமையாகச் சொன்னான்.

"அப்படியானால் நான் இப்போதே இந்த வீட்டை விட்டுப் போய் விடுகிறேன். என் தகப்பனார் விட்டு வைத்திருக்கும் வீட்டிற்கே போய் விடுகிறேன்'' என்றாள்.

"தாராளமாய்ச் செய். நான் அடிக்கடி வந்து உன்னைப் பார்த்துக் கொள்ளுகிறேன்......''

"வேண்டாம். நீங்கள் அங்கே வரவே வேண்டாம்''

"இப்படியெல்லாம் கோபித்துக் கொண்டால் உன் எண்ணத்

திற்கு இணங்கி விடுவேன் என்று பார்க்கிருய், இந்த வாசு அதற்கெல்லாம் மசிய மாட்டான்'' என்ருன்.

அவள் அடுத்த நாளே அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டுப் போய் விட்டாள். அவன் அவளைத் தடுக்கவில்லை. தான் கொடுத்த வாக்கை நிறை வேற்றியதில் அவனுக்கு ஒரு திருப்தி ஏற்பட்டது......''

விநாயகம் எழுதி வைத்திருந்த கதை அதோடு அறை குறையாக நின்று விட்டது. ''என்ன விநாயகம் கதை இன்னும் முடியவில்லை போலிருக்கிறதே'' என்ருன் சுந்தரம்.

''அதை எப்படி முடிக்கிறது என்று தெரியாமல்தான் அதோடு நிறுத்தியிருக்கிறேன். காதல் கதையாக இருக்கக் கூடாது என்பது என் எண்ணம். ஆனல் அது அப்படித்தான் வந்து முடிகிறேன் என்கிறது. அதை மாற்ற என்ன செய்கிறதென்று தெரியவில்லையே?'' என்று விநாயகம் கேட்டான்.

''பார்த்தாயா, கதை எழுதுகிறவர்களைப்பற்றி குறைவாகப் பேசினயே, இப்போது நீயே எழுத ஆரம்பித்ததும் கஷ்டம் தெரிகிறதல்லவா? நீ இதற்கு என்ன முடிவு வைத்து எழுதலாம் என்பதை இவ்வளவு கஷ்டப் பட்டுப் பார்க்கிருய். உண்மைக் கதாசிரியனயிருந்தால் தன் பேனவின் சக்தியால், ஒரே வரியில் தன் இஷ்டப்படி கதையை முடித்து விடுவான். காதலில்தான் முடிய வேண்டுமென்பது அவன் நோக்கமாயிருந்தால் அதையும் நாஸூக்காகச் செய்து விடுவான். வேறு விதமான முடிவாக இருக்க வேண்டுமானல் அதையும் அப்படியே செய்து விடுவான். இது அவனுக்கு அவ்வளவு கஷ்டமல்ல'' என்ருன் சுந்தரம்.

''ஆனல் எனக்கு வரவில்லையே?'' என்று வருத்தமாய்க் கேட்டான் விநாயகம்.

''அதுதான் கதை எழுதுகிறவனுக்கும் புதிதாக ஆரம்பிக்கிறவனுக்குமுள்ள வித்தியாசம்'' என்ருன் சுந்தரம்.

''சரி, அதை அப்படியே வை. என் மூளையில் என்றைக்கு நான் நினைத்தபடி வருகிறதோ அன்று முடித்து விடலாம்'' என்ருன் சுந்தரம்.

நாகா நந்தினி

[சி. கண்ணன்]

நண்பன் ஆனந்தனை ரயிலேற்றி விட்டுவீட்டிற்கு வந்து சோபாவில் அமர்ந்தேன். சூடான காபியுடன் சில சிற்றுண்டி வகைகளையும் என் முன்னே வைத்து விட்டுச் சென்றுள் என் மனைவி சுகுணா. சூடான அந்தக் காபியிலிருந்து ஆவி கிளம்பிச் சென்று கொண்டிருந்தது. அந்த ஆவியின் நெளிவிலே என் மனம் இணைந்து வேதனைப் பட ஆரம்பித்தது.

சென்ற இரண்டு நாட்களில் நடந்த சம்பவங்களை, வரிசைக்கிரமமாக என் நினைவில் கொண்டு வந்தேன். அப்போது ஏனோ என் மனம் அப்படிச் செய்ய வேண்டும் என்று விரும்பியது.

★

ஆனந்தனை வரவேற்க ரயிலடிக்குச் சென்றிருந்தேன். அவன் என்னைப் பார்த்ததும், "ரமணா!" என்று சந்தோஷத்தால் கூவிக் கொண்டு, என்னை இறுகக் கட்டிக் கொண்டான்.

"சௌக்கியம் தானே ஆனந்த்? உன் வயலின் பெட்டி எங்கே?" என்று கேட்டேன் நான்.

"அடடா, நந்தினியை மறந்தே போய் விட்டேனே; நந்தினி!" என்று அவன் அழைத்துக் கொண்டு திரும்புவதற்கும், அழகிய பத்து வயதுச் சிறுமி யொருவள் வயலின் பெட்டியைத் தூக்கிக் கொண்டு நாங்களிருந்த இடத்திற்கு வந்து சேரவும் சரியாக இருந்தது.

"இவள் தான் என்னுடைய பெண் நந்தினி" என்றான் ஆனந்த். அழகாகவும் துடிதுடிப்பாகவும் காணப்பட்டாள் நந்தினி.

அடுத்த நாள் எங்கள் ஊர் சங்கீத சபாவில் பாடவிருந்த பிரபல சங்கீத வித்வான் ஒருவருக்கு வயலின் வாசிக்கத்தான் ஆனந்த் வந்திருந்தான்.

★

மறு நாள் சாயங்காலம், சரியாக ஐந்தேகால் மணிக்குக் கச்சேரி ஆரம்பமாயிற்று. முதற் பாட்டிலேயே கச்சேரி களைகட்டி விட்டது. பாடகரின் அற்புதமான குரலும், ஆனந்தனின் இனிமையான வயலின் நாதமும் சேர்ந்து தேவகானமாக ஒலித்தது. பாடகர் ஆனந்தனின் வயலின் நாதத்தில் மிகுந்த பிரியம் கொண்டவராகக் காணப்பட்டார். அவர் பாடும் ஒவ்வொரு ராகத்தையும் ஆனந்தன் தனியாக வயலினில் வாசிக்க நிறைய சந்தர்ப்பமளித்து சபையோருடன் அவரும் நாத வெள்ளத்திலே லயித்துக் கொண்டிருந்தார்.

பழக்கமான சில ராகப் பாடல்களை முதலில் பாடி விட்டு, பாடகர் ஒரு புதிய ராகத்தை ஆலாபனம் செய்ய ஆரம்பித்தார். தற்போது சங்கீத உலகில் வழக்கத்தில் இல்லாத ராகம் அது. இந் நூதன ராகம் ஆனந்தனுக்குத் தெரிந்திருக்குமா என்ற தோரணையில் நான் அவனைப் பார்த்தேன்.

புன்னகை அரும்பிக் கொண்டிருந்த அவன் முகம் ஏன் இப்படித் திடீரென மாறி விட்டது? அப்போது தான் மலர்ந்த ரோஜாவைப் போன்றிருந்த அவன் முகம் ஏன் திடீரென்று வெப்பத்தால் உலர்ந்து, காய்ந்து போன சருகு போலாகி விட்டது? அவன் மனத்தைத் தாங்க முடியாத துக்கத்திலாழ்த்தும் இந்த ராகத்தின் பெயர் தான் என்ன? எனக்கும் சுகுணுவுக்கும் இடையில் உட்கார்ந்திருந்த நந்தினியைக் கேட்கலாமா என்று நினைத்தேன். தன் அப்பாவைப் போல அவளும் துக்கப்பட ஆரம்பித்து விட்டால்? இந்தச் சந்தேகம் என் ஆவலைத் தடுத்தது. மெதுவாக நந்தினியின் பக்கம் திரும்பினேன். அவள் என்னைப் பார்த்துச் சிரித்தாள்.

"இந்த ராகத்தின் பெயர் உனக்குத் தெரியுமா அம்மா?" என்று தட்டுத் தடுமாறிக் கேட்டு விட்டேன்.

"நாகாநந்தினி ராகம் அண்ணு இது. தினமும் நான் படுத்துக் கொண்ட பின் அப்பா இந்த ராகத்தை வாசித்துக் கொண்டே இருப்பார். இந்த ராகம் தான் அப்பாவுக்கு ரொம்பவும் பிடிக்கும்." என்று நந்தினி சொல்லி முடிக்கு முன் "பின் ஏன் உன் அப்பாவின் முகம் திடீரென துக்கரமாக மாறி விட்டது?" என்ற கேள்வியை என்னுல் கேட்காமலிருக்க முடியவில்லை.

"இந்த ராகத்தை அப்பா இன்று தான் மேடையிலே வாசிக்கிருர்." என்று சொல்லிக் கொண்டே ஆனந்தனைப் பார்த்தாள் நந்தினி.

இந்த சமயத்தில் பாடகர் தன் ஆலாபனத்தை முடித்துக் கொண்டு வயலின் வாசிக்கச் சந்தர்ப்பம் அளித்தார்.

வயலின் சுருதியைச் சரி பார்த்துக் கொண்டு ஆனந்த், ராகத்தை வாசிக்க ஆரம்பித்தான். என்ன காரணமோ தெரியவில்லை, அவன் முக பாவத்திற்கு ஒத்தாற் போல் அந்த ராகமும் கேட்போர் மனதில் துக்கத்தை ஏற்படுத்துவது போலவே அமைந்திருந்தது.

துக்கம் நிறைந்த நெஞ்சுடன் தன்னை மறந்து நாகாநந்தினி ராகத்தை வாசித்துக் கொண்டிருந்தான் ஆனந்த். பாடகர் அந்த ராகத்தைப் பாடிய காலத்திற்கு அதிகமாக ஆகியும், ஆனந்த் வாசித்துக் கொண்டேயிருந்தான். அவனது கண்கள் கலங்கின. அவற்றில் நீர் நிறைந்து விட்டது.

"பழங்காலத்தில் ஏதோ ஒரு ராகத்தால் கொடிய காட்டு மிருகங்களை மெய் மறக்கச் செய்து பிடித்தார்களென்றும், வேறு இரண்டு ராகங்களால் நெருப்பையும் மழையையும் வரவழைத்தார்களென்றும் சரித்திரம் கூறுகின்றதே, அது போல மனித உள்ளத்தைக் கசக்கிப் பிழியவென்றே தோற்றுவிக்கப் பட்டதா இந்த நாகாநந்தினி ராகம்?' என்று எண்ணியது என் மனம்.

உணர்ச்சி வேகத்தில் உந்தப் பட்டவை போல படிப்படியாக ஆனந்தனின் இடது கை விரல்கள் தாரஸ்தாயியில் சஞ்சரித்துக் கொண்டிருந்தன. நெஞ்சை அமுக்குவது போன்ற குழைவுடன் அவனது நடுவிரல் தாரஸ்தாயி பஞ்சமத்தை அடைந்து அசைவு கொடுத்த பொழுது தந்தி 'படக்'கென்று அறுந்து விட்டது. சஞ்சலத்துடன் ஆனந்தனின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தேன்.

அவன் கண்களிலிருந்து இரண்டு கண்ணீர்த் துளிகள் கசிந்து வயலின் மேல் விழுந்தன. அந்த சமயத்தில் சபையில் ஏற்பட்டிருந்த நிசப்தமும், ஆனந்தனின் பெருமூச்சும் பயங்கரமாகத் தோன்றின எனக்கு.

அசைவு கொண்ட சித்திரம் போல, அறுந்த தந்தியை அப்புறப் படுத்தி விட்டு வேறு தந்தியைப் பொருத்தி சுருதி சேர்த்துக் கொண்டான் ஆனந்த். அவனது உள்ளத்து வேதனையைப் பாடகர் உணர்ந்து அந்த ராகப் பாடலை அதி சீக்கிரத்தில் முடித்து விட்டார்.

ஒரு விதமாகக் கச்சேரியும் முடிவடைந்தது. வீடு வந்து சேரும் வரை வழியில் ஆனந்த் ஒரு வார்த்தை கூட என்னுடனே நந்தியுடனே பேசவேயில்லை.

"உங்கள் அப்பாவின் உடம்புக்கு என்ன நந்தினி?" என்று என் மனைவி சுகுணா ஆனந்தனுக்குக் கேட்கும்படி நந்தினியை விசாரித்தும் ஆனந்த் ஒன்றும் பதிலே சொல்லவில்லை.

நானும் சுகுணாவும் எவ்வளவு வற்புறுத்தியும் ஆனந்த் அன்றிரவு சாப்பிட மறுத்து விட்டான். அவன் சாப்பிடா விட்டால் நானும் சாப்பிட மாட்டேன் என்று சொல்லி விட்டேன். "அப்பா சாப்பிட்டால் தான் நானும் சாப்பிடுவேன்" என்று நந்தினி பிடிவாதம் செய்தாள். நாங்கள் சாப்பிடாமல் சுகுணா மட்டும் சாப்பிடுவாளா? அன்றிரவு நாங்கள் நால்வரும் பட்டினி தான்.

"ஆனந்த்" என்று வெகு நேரத்திற்குப் பின் நான் நிசப்தத்தைக் கலைத்தேன். பிரமை பிடித்தவன் போல உட்கார்ந்திருந்த அவன், ஏன் என்று கேட்பது போல என் முகத்தை நோக்கினான்.

"அந்த ராகம் வாசித்ததிலிருந்து நீ ஏன் இப்படி இருக்கிறாய்? உன் மனத்திற்குக் கஷ்டமில்லையானால் அதைப் பற்றி எனக்குச் சொல்லுகிறாயா?" என்று கேட்டேன் நான்.

"ரமணா, அதை உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லுவேன் நான்!" என்று ஆரம்பித்தான் ஆனந்த்.

"அது எங்கள் வாழ்க்கைச் சித்திரத்தில் அழியாத இடம் பெற்ற ராகம். அதே நாகாநந்தினி ராகம் தான் முன்பு எங்கள் வாழ்க்கையில் சலியாத இன்பத்தை ஊட்டி வந்தது!

நீ என்னைப் பிரிந்து கல்லூரிப் படிப்புக்காக இங்கே வந்த இரண்டு வருடங்களுக்குப் பின் என் தகப்பனார் ராதாவை எனக்கு விவாகம் செய்து வைத்து விட்டு மறுவருடமே கண்ணை மூடி விட்டார். அவர் வைத்து விட்டுப் போன கொஞ்சம் நிலத்தைக் கவனித்துக் கொண்டு எங்கள் வாழ்வு நிம்மதியாக நடந்து வந்தது.

ஓய்வு நேரங்களில் ஏதாவது ஒரு கலையைப் பயில வேண்டுமென்று எனக்கு வெகு நாட்களாக ஒரு அவா இருந்தது. என் ஆவலைப் பூர்த்தி செய்வதே போல எங்கள் ஊருக்கு ஒரு இளம் வயலின் வித்வான் வந்து சேர்ந்தார். விரைவில் நாங்கள் நண்பர்களானோம். அவரைக் குரு பீடத்தில் வைத்து நான் அவரிடம் வயலின் பயிற்சி பெற்று வந்தேன்.

மூன்று வருடங்கள் கழிந்தன. ஒரு நாள் தியாகு — அது தான் வயலின் உபாத்தியாயரின் பெயர் — இனி நான்தான் உன்னிடம் சிக்ஷை சொல்லிக் கொள்ள வேண்டும் ஆனந்த்; எதிர் காலத்தில் பெரும் புகழுடன் வாழ்வாய் என்று ஆசீர்வதித்துச் சென்று விட்டார்.

அனுதினமும் மாலையில் நான் வயலின் வாசிப்பேன். என் வாசிப்பைக் கேட்பதில் தனக்கு அளவிலா ஆனந்தமிருக்கிறதென்று ராதா அடிக்கடி என்னிடம் சொல்லுவாள். மகுடியில் மயங்கி நிற்கும் சர்ப்பம் போல நான் வாசித்துக் கொண்டிருக்கும் போது என் எதிரே உட்கார்ந்து உவகை துள்ளும் கண்களுடன் என்னைப் பார்த்துக் கொண்டேயிருப்பாள் ராதா.

அவ்வப்போது அவளது அழகிய அதரங்களிலே மின்னல் போல நெளிந்து மறையும் புன்னகையிலும், அரைக் கண்களை மூடி மௌனி போல இருப்பதிலும் ஆச்சரியத்தால் அவளது புருவங்கள் நாணேற்றிய வில் போல மேல் நோக்கி வளைவதிலுமே என் இசை பரிமளித்தது என்றால் மிகையாகாது ரமண!

ஒரு நாள் அதிகாலை. நான் அப்போது அரைத் தூக்கத்திலிருந்தேன். வழக்கத்திற்கு மாறாக, "இதோ பாருங்கள்" என்று சொல்லிக் கொண்டே என் கன்னத்தில் கையை வைத்தாள் ராதா.

"இன்னமும் தூக்கமா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"தூக்கம் இல்லை; ஆச்சரியம்!" என்றேன் நான் அவள் கையை விடாமலேயே. அவள் மௌனமாக நின்றிருந்தாள்.,

நான் எழுந்து உட்கார்ந்து கொண்டு "எதையோ பார்க்கச் சொன்னாயே, எங்கே பார்க்கலாம்!" என்று கண்ணைப் பிசைந்து கொண்டேன்.

"உங்களுக்கென்னமோ விளையாட்டாக இருக்கிறது. நான் கண்ட கனவைச் சொல்ல வந்தால்......" என்று நிறுத்தினாள் ராதா.

"கேட்கத்தானே உட்கார்ந்திருக்கிறேன். இல்லை, எழுந்து நிற்கட்டுமா?" என்றேன்.

"போதும் வேடிக்கை நான் சொல்லுவதைக் கேளுங்கள். நான் ஒரு பூங்காவனத்தில் உட்கார்ந்திருந்தேன். அப்பொழுது தேவ கன்னிகை போன்ற பெண்ணொருவள் தோழிகள் சூழ, ஏதோ ஒரு அருமையான ராகத்தில் ஒரு பாட்டைப் பாடிக் கொண்டு வந்தாள். அந்த ராகம் எவ்வளவு இனிமையாக இருந்தது தெரியுமா? இன்னொரு முறை பாடும்படி அவளைக் கேட்டுக் கொண்டேன். அவளும் பாடினாள். கேட்கக் கேட்கத் திகட்டவில்லை அந்த ராகம். நீங்கள் எவ்வளவோ ராகங்கள் வாசிக்கிறீர்களே — அவைகளில் ஒன்றுடனும் அந்த ராகத் தொடர்பு உடையதாக எனக்குத் தெரியவில்லை. அது என்ன ராகம் என்று அவளையே கேட்டேன். அவள் என்ன பதில் சொன்னாள் தெரியுமா? 'என் இசைக்கு ராகம், தாளம், ஆரோகணம், அவரோகணம், அது இது என்று கட்டுப் பாடுகளை ஏற்படுத்திக் கொள்ள நான் விரும்பவில்லை' என்று கடுமையாகச் சொல்லி விட்டு, மீண்டும் அந்த

ராகப் பாடலைப் பாடிக் கொண்டே வந்த திக்கை நோக்கிச் செல்ல ஆரம்பித்து விட்டாள்! நான் எவ்வளவு உரத்துக் கூப்பிட்டும் அவள் கேட்காதது போலவே சென்று விட்டாள். விழித்துக் கொண்டதும் தான் அது கனவென்று உணர்ந்தேன்; ஆமாம், நான் அவளைக் கூப்பிட்டது உங்களுக்குக் கேட்டதா? '' என்று குறும்புப் பார்வையுடன் என்னைக் கேட்டாள் ராதா.

'' இரவு தூக்கத்தில் நீ ஏதோ முணுமுணுத்ததை நானும் கவனித்தேன். உந்தியிலிருக்கும் அரை வருடச் சிசுவுடன் கொஞ்சுகிறாயாக்கும் என்று நினைத்துக் கொண்டேன் '' என்றேன் நான்.

'' போங்கள். உங்களுக்கு எப்போதும் கேலி தான் '' என்று என் கன்னத்தை மெதுவாகத் தட்டிவிட்டுப் பின் கட்டிற்கு ஓடி விட்டாள் ராதா.

ரமணு, அந்த சம்பவம் இன்னமும் என் மனதை விட்டு அகலவில்லை.

அன்று மாலையில் நான் வயலினை எடுத்த போது, '' இதோ பாருங்கள், கனவில் நான் கேட்ட ராகத்தை நீங்கள் கண்டு பிடித்து வயலினில் வாசித்தால் தான் உங்களை ஒரு 'வித்வான்' என்று நான் ஒப்புக் கொள்வேன் '' என்று ஒரு ஆக்ஞை பிறப்பித்து விட்டாள் ராதா.

எனக்கும் அந்த ராகத்தைக் கண்டு பிடித்து வாசித்து அவளைச் சந்தோஷப் படுத்த வேண்டுமென்ற உற்சாகம் ஏற்பட்டது.

'' சரி, இப்படி வந்து உட்கார்; முதலில் மேளகர்த்தா ராகங்களை வரிசையாகக் கொஞ்சம் கொஞ்சமாக வாசித்துக் கொண்டே வருகிறேன். கனவில் கேட்ட ராகத்தின் சாயை எந்த ராகத்திலாவது தென்பட்டால் சொல், அதை விஸ்தாரமாக வாசிக்கிறேன் '' என்றேன் நான்.

'' நான் கனவில் கேட்ட ராகம், இப்பொழுது சங்கீத உலகில் பழக்கமான எந்த ராகமும் அல்ல என்பது எனக்கு நிச்சயமாகத் தெரிகிறது. ஆகையால் வழக்கத்திலில்லாத ராகங்களை மட்டும் — அது மேள கர்த்தாவில் இருந்தாலும் சரி, காலச் சக்கரத்தில் இருந்தாலும் சரி — வாசியுங்கள். உங்களுக்கும் சிரமம் குறையும் '' என்று சொல்லிக் கொண்டே என் எதிரே வந்து உட்கார்ந்தாள் ராதா.

நான் மேளகர்த்தா ராகங்களில் அதிகமாக வழக்கத்திலில்லாத ராகங்களை வரிசையாகக் கொஞ்சம் கொஞ்சம் வாசித்துக் கொண்டு வந்தேன். ராதா பேசாமலேயே கேட்டுக் கொண்டு வந்தாள். 27வது மேளகர்த்தா ராகமாகிய சரசாங்கி ராகத்தை வாசித்துக் கொண்டு அவள் முகத்தைப் பார்த்தேன். அதுவல்ல என்று மெதுவாகத் தலையசைத்து விட்டாள். அடுத்த இரண்டு ராகங்களும் பழக்கமான ஹரிகாம்போதி, தீரசங்கராபரணம் தானே என்று அவைகளை விட்டு விட்டேன். அடுத்த முப்பதாவது மேளகர்த்தா ராகம் **நாகா நந்தினி!** இந்த ராகத்தில் எனக்குப் பழக்கமேயில்லை. ஆகையால் அந்த ராகத்தில் ஆரோகண அவரோகண ஸ்வரங்களைச் சவுக்க காலத்தில் பிடித்தேன்.

'' இது தான் போலிருக்கிறது, '' என்றாள் ராதா.

நான் அந்த ராகத்தை மெதுவாகக் கொஞ்சம் விஸ்தாரமாக வாசிக்க ஆரம்பித்தேன்.

"இதே தான்! இதே தான்!!" என்று உரக்கக் கூவினுள் ராதா.

குளிர் மதியைக் கண்ட ஆம்பல் போல மலர்ந்தது அவள் முகம். அந்த ராகத்தைக் கண்டு பிடித்ததில் எனக்கும் ஒரு பெருமிதம் உண்டாயிற்று.

"பார்த்தாயா நீ கனவில் கேட்ட ராகம் கூட நம் கர்னுடக சங்கீதத்தில் இருக்கிறது!" என்றேன் நான்.

"அது எதிலேயோ இருந்து கொண்டு போகட்டும். இதன் பெயர் என்ன?" என்று ஆவலுடன் கேட்டாள் ராதா.

"என் இசைக்கு ராகம், தாளம்......" என்று ராதாவின் கனவு மங்கையின் வாக்கியத்தை நான் சொல்லி முடிப்பதற்குள்,

"போதுமே நையாண்டி, சீக்கிரம் இதன் பெயரைச் சொல்லுங்கள்" என்ருள் ராதா.

"நாகாநந்தினி என்றேன் நான்.

"எவ்வளவு அழகான பெயர், நந்தினி!" என்று உள்ளம் பூரித்துக் கூறினுள் ராதா.

அன்றிலிருந்து தினமும் நான் வயலினைக் கையிலெடுக்கும் பொழுதெல்லாம், "நந்தினியை வாசியுங்கள்" என்று ராதா பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொள்வாள். நாகாநந்தினியை அவள் 'நந்தினி' என்று தான் சொல்லுவாள்.

நான் அந்த ராகத்தை வாசிக்கும் பொழுது அவள் முகம் எவ்வளவு பிரகாசமாய் இருக்கும் தெரியுமா? அந்த சமயங்களில் அவள் முகம் பண்பட்ட உள்ளமுடைய ஒரு ஞானியைப் போலத் தோற்றமளிக்கும்.

அந்த நான்கு மாதங்களும் ஒரு நாள் தவராமல் நந்தினி ராகத்தை அவள் ரஸித்துக் கொண்டு வந்தாள்.

★

அன்று வெள்ளிக்கிழமை. உள் அறையில் ராதா பிரசவ வேதனைப் பட்டுக் கொண்டிருந்தாள். முற்றத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த என் மனம், நரக வேதனை பட்டுக் கொண்டிருந்தது. ஒரு லேடி டாக்டரும் இரண்டு நர்ஸுகளும் ராதாவைக் கவனித்துக் கொண்டிருந்தனர். நேரம் அதிகமாக, அதிகமாக என் இதயம் வேகமாகத் துடிக்க ஆரம்பித்தது. நர்ஸ் ஏதோ காரியமாக வெளியே வந்தாள்.

"அவள் எப்படி இருக்கிருள்?" என்று கேட்டேன்.

"சுகப் பிரசவம் இல்லை. என்ருலும் தைரியமாக இருங்கள்" என்று சொல்லி விட்டு நர்ஸ் உள்ளே போய் விட்டாள்.

என் மனக் கலக்கம் அதிகமாயிற்று. என் முன் இருந்தவையெல்லாம் இருண்டு பயங்கரமாகத் தோற்றமளித்தன. என்ன வெல்லாமோ நினைத்து என் மனம் வெதும்பிக் கொண்டிருந்தது.

"ஸார், அவசரம்!" என்ற குரல் கேட்டுத்திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தேன். நர்ஸ் படபடத்த முகத்துடன் நின்று கொண்டிருந்தாள்.

"ஐயோ, என் ராதாவுக்கு ஒன்றுமில்லையே?" என்று வாய் விட்டுக் கதறி விட்டேன் நான்.

சப்தம் போட வேண்டாமென்று சமிக்ஞை செய்து விட்டு நர்ஸ் 'நந்தினி, நந்தினி' என்று பிதற்றுகிருள் உங்கள் மனைவி. உடனே நந்தினியை அழைத்து வாருங்கள்'' என்ருள்.

''நந்தினி என்பது ஒரு ராகம்; அதையல்லவா வாசிக்கச் சொல்லுகிருள்!'' என்று சொல்லிக் கொண்டே வயலினை எடுத்து நாகா நந்தினியை வாசிக்க ஆரம்பித்தேன். என் கைகள் தான் வாசித்தனவே தவிர, மனம் ''என்ன ஆகுமோ?'' என்று ஏங்கிக் கொண்டிருந்தது. பாவி நான், அன்று மனப்பூர்வமாக அந்த ராகத்தை வாசித்திருந்தால் என் ராதா பிழைத்திருப்பாள். அன்றும் அப்படித்தான்; எதிர்பாராத விதமாகத் தந்தி அறுந்து விட்டது! சஞ்சலத்துடன் வேறு தந்தியை நான் எடுப்பதற்குள், லேடி டாக்டர் என் முன் வந்து நின்று கொண்டு, ''ஸார்,'' என்று தழுதழுத்த குரலில் அழைத்தார். அந்த இரண்டு எழுத்துக்களை அவர் உச்சரித்த விதம் என் மனச் சஞ்சலத்தைப் பன் மடங்கு அதிகரித்து விட்டது. அறுந்த தந்தியோடு, நம் வாழ்க்கையின் இன்ப ரேகை மறைந்து விட்டது போன்ற உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது.

''என் ராதாவுக்கு ஒன்றுமில்லையே?'' என்று கேட்டுக் கொண்டே வயலினைக் கீழே போட்டு விட்டு எழுந்து டாக்டரின் முகத்தைப் பார்த்தேன்.

அவர் தலையைக் கீழே குனிந்து கொண்டதும் விஷயம் எனக்கு விளங்கி விட்டது!

''ராதா'' என்று கதறிக் கொண்டு அவள் படுத்திருந்த அறைக்கு ஓடினேன். நீலப் போர்வையால் கழுத்து வரை போர்த்தப் பட்டிருந்தாள். நிர்மலமான நீலவானில் மாசு மறுவற்ற பூரண மதிபோல விளங்கியது என் ராதாவின் முகம்.

அவள் முகத்தில் பூரண சாந்தம் குடி கொண்டிருந்தது. தினமும் நான் நந்தினி ராகம் வாசிக்கும் போது எப்படிப் பிரகாசமாக இருக்குமோ அப்படியே இருந்தது அப்பொழுதும் அவள் முகம்.

தீராத் துயரை எனக்களித்து விட்டு ராதா எங்கோ போய் விட்டாள். அவள் எனக்கு அளித்துப் போன சிறு ஆறுதல் நாகா நந்தினி ராகமும் இக்குழந்தையும் தான். அவள் ஞாபகார்த்தமாகவே தான் இக்குழந்தைக்கு, 'நந்தினி' என்று பெயரிட்டிருக்கிறேன். ரமணு.

என்று ஆனந்த் தன் சோக வாழ்க்கைச் சம்பவத்தை முடித்தான். சாளரத்தின் வழியாக வானில் தெரிந்த பிறைமதியை நீர் நிறைந்த கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்தான் ஆனந்த்.

★

என் மணிக்கட்டின் மீது வெதுவெதுப்பான இரண்டு நீர்த்துளிகள் விழுந்த பின்தான் என் கண்களில் நீர் நிரம்பி விழிகிறது என்பதை உணர்ந்தேன்.

ஆறிப் போன காபியைத் தள்ளி வைத்து விட்டுச் சூடான காபியை மற்ரெரு கோப்பையில் சுகுணு ஊற்றிக் கொண்டிருந்தாள். அவள் கண்களும் கலங்கி இருந்தன.

எங்கோ போகும் புகை வண்டியொன்றின் வீச்சிடும் சப்தம் காற்றில் கலந்து வந்து எங்கள் செவிகளில் புகுந்தது.

(டெல்லி நிலையத்தில் ஒலிபரப்பப்பட்டது)

ரோஜாவும் மல்லிகையும்

'தேவிகா'

ஒரு பெரிய பணக்காரன் வீட்டிற்கு முன்புறம் முல்லை, சண்பகம், இருவாட்சி, மல்லிகை, ரோஜா முதலிய நானாவிதப் புஷ்பச் செடிகள் இருந்தன. மல்லிகையும் ரோஜாவும் பக்கம் பக்கமாக ஒரே வரிசையில் இருந்தன.



அவைகள் சில நாட்கள் சிநேகமாயிருக்கும்; இன்னும் சில நாட்களில் விரோதமாயிருக்கும்.

ஒரு நாள் அவைகள் சிநேகமாயிருக்கும் பொழுது, தங்களுக்குத் தெரிந்தும் தெரியாமலும் இருக்கும் பல விஷயங்களைப் பற்றித்

தங்கள் மனம்போனபடி எல்லாம் பேசிக் கொண்டிருந்த பொழுது, அழகைப் பற்றிப் பேச்சு வந்தது. "இந்த உலகத்திலுள்ள மலர்களில் நான் தான் அழகிற் சிறந்தவள்" என்றது மல்லிகை.

"இல்லை. நானே அழகிற் சிறந்தவள்" என்றது ரோஜா.

"வீண் கர்வம் வேண்டாம். அதோ, வாளியில் நீர் சுமந்து வரும் தோட்டத்து வேலைக்காரனை நம்மில் அழகிற் சிறந்தவள் யார்? என்று கேட்போம்" என்று மல்லிகை சொல்லிற்று. 'சரி' என்று ஒப்புக் கொண்டது ரோஜா.

வாளியில் கொண்டு வந்த தண்ணீரை மல்லிகைப் பாத்தியில் ஊற்றிக் கொண்டிருந்தான் தோட்டக்காரன். "ஐயா, தினமும் தண்ணீர் ஊற்றி எங்களை வளர்த்து வரும் நீங்கள், எங்களுக்கு ஒரு தந்தையைப் போன்றவர். உங்களிடம் ஒன்று கேட்கவேண்டும் என்று ஆசை. என்னருகிலிருக்கும் ரோஜா அழகிற் சிறந்தவளா? அல்லது நானா?" என்று அவனைக் கேட்டது மல்லிகை.

"மல்லிகையே, மண்ணைக் கிளறிக் கொண்டிருக்கும் எனக்கு அழகைப் பற்றி என்ன தெரியும்? அதோ, ஓடி வரும் அந்தச் சிறுமியைக் கேள்" என்று சிறுமியைச் சுட்டிக்காட்டிவிட்டு வேறு செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றச் சென்று விட்டான்.

ஓடிவரும் சிறுமியை "இங்கே வா" என்று உரக்கக் கூப்பிட்டது



மல்லிகை. என்றுமில்லாத ஒரு நூதனக் குரல் இன்று வருவதைச் செவியுற்ற சிறுமி, அக்குரல் எங்கிருந்து வருகிறது என்று அறிய நாற்புறமும் காது கொடுத்துக் கேட்டாள். அவள் தடுமாற்றத்தைக் கண்ட மல்லிகை மறுபடியும் "இங்கே வா" என்று அழைத்ததும் சிறுமி அதனருகில் சென்றாள்.

ஒரு மலர் தன்னுடன் பேசுவதை அவளால் நம்பவே முடிய

வில்லை! புத்தகங்களில் மலர்களும் பேசுவதாகப் படித்தது ஞாபகத்திற்கு வந்ததும், தன் வாழ்க்கையிலும் அம்மாதிரி பிரத்தியட்சமாக நடப்பதைக் கண்டு, அளவற்ற சந்தோஷமும் ஆச்சரியமும் அடைந்தாள் அந்தச் சிறுமி.

"குழந்தாய், உன்னை ஒன்று கேட்க வேண்டும் என்று ஆசை. நான் அழகிற் சிறந்தவளா, ரோஜா அழகிற் சிறந்தவளா? சொல் பார்ப்போம்" என்று மல்லிகை அச்சிறுமியைக் கேட்டது.

"ரோஜா தான் அழகிற் சிறந்தவள்" என்று சிறுமி பதில் சொல்லி விட்டு, அங்கு வந்த ஒரு அழகிய பட்டாம் பூச்சியைப் பிடிக்க ஓடி விட்டாள்.

"பார்த்தாயா? 'வீண் கர்வம்' என்று என்னைத் தூற்றினாய். கள்ளங் கபடமற்ற சிறுமியின் தீர்ப்பே நல்ல தீர்ப்பு" என்று மல்லிகையைக் கிண்டல் செய்தது ரோஜா.

"உலக அனுபவமில்லாத அந்தச் சிறுமியின் தீர்ப்பும் ஒரு தீர்ப்பா? என்ன இருந்தாலும் அவள் ஒரு சிறுமி தானே! அழகைப் பற்றி அவள் அறிந்திருப்பது அவ்வளவு தான் போலும்!" என்று மல்லிகை மறுப்புக் கூறிக் கொண்டிருந்தது.

அதே சமயத்தில் அந்தச் சிறுமியின் தாய் அவ்விரு மலர்ச்செடிகளின் பக்கத்தில் வந்து, வேலைக்காரன் சரியாகத் தண்ணீர் விட்டிருக்கிறானா என்று பாத்திகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தாள். மல்லிகை பேசிற்று:

"அம்மா, எங்களிருவரில் அழகிற் சிறந்தவள் யார்? என்பது பற்றி கொஞ்ச நேரமாக ஒரு பெரிய விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. தயவு செய்து நீங்களே ஒரு முடிவு சொல்லுங்கள்" என்று கெஞ்சிற்று மல்லிகை.

"மலர்களே, அழகைப் பற்றிப் பேசும் பொழுது ஒரே இனத்தைச் சேர்ந்தவற்றை வைத்துக் கொண்டுதான் தீர்ப்புச் சொல்ல வேண்டும். மல்லிகையே, நீ ஒரு இனத்தைச் சேர்ந்தவள்; ரோஜாவோ வேறு இனத்தைச் சேர்ந்தவள். உங்கள் இருவரையும் எப்படி ஒப்பிட முடியும்? எப்படித் தீர்ப்புச் சொல்ல முடியும்? ஒவ்வொருவளும் ஒவ்வொரு விதத்தில் அழகுடையவள். அந்த அழகில் அவளே சிறந்து விளங்குவாள். மல்லிகையின் அழகு ரோஜாவுக்கு வராது: ரோஜாவின் அழகு மல்லிகைக்கும் வராது. வீண் வாதம் வேண்டாம். வாதம் வினையாய் முடியும். என் கூந்தலில் இருவரும் சுகமாக, சந்தோஷமாக இருக்கலாம்" என்று இரு மலர்களையும் பறித்துத் தன் கூந்தலிற் சொருகிக் கொண்டு ஆனந்தமாகத் தன் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.



மலர்ந்த மலர்

கோவை நகரைச் சேர்ந்த சில வாலிபர்களின் தமிழ்ப் பற்றும், எழுத்துத் திறமையும் ஒன்றுகூடி ஆர்வக் கனலாகி, ஆசை வெறியாக மாறியது. அந்த வெறி 'இளைஞன்' என்ற கையெழுத்துப் பத்திரிகையாக உருவெடுத்தது. பல உற்சாகமிக்க இளம் எழுத்தாளர்களும், சித்திரக் காரர்களும் இளைஞனை வரவேற்று நல்வரவு கூறினர்கள். அவர்கள் அளித்த ஆதரவும், காட்டிய அன்பும் இளைஞனைத் தலைநிமிர்ந்து நிற்கச் செய்தன. இளைஞன் ஆசிரியர் திரு. சாரதியின் இடைவிடாத கண்காணிப்பால் 'இளைஞன்' வரவர வேகமாக வளர்ந்து கோவை நகரில் உலவி வரும் சிறந்த கையெழுத்துப் பத்திரிகைகளில் ஒன்ருகத் திகழ்கிறது. அதன் தீபாவளி மலர் ஒரு சிறந்த மணம் மிக்க மலராய் மலர்ந்திருக்கிறது.

கவிஞர் பெ. தூரன் அவர்கள் 'சிம்ம நாதம் செய்யடா' என்ற தலைப்பில் ஒரு சிறந்த கவிதை உதவியிருக்கிருர். கீதா ரகஸ்யம் பற்றி திரு. கி. ரங்கராஜனும், குழந்தைகளின் பயத்தைப் பற்றி திரு. வீ. கோபாலும் இரண்டு அரிய கட்டுரைகள் எழுதியிருக்கிருர்கள். திருவாளர்கள் யோ. ராஜநாயகம், எஸ். பி. மாதையன், எச். விஜயகுமார் கு. சோமசுந்தரம், ஈ. சுந்தரம் முதலியோரின் கதை, கவிதை நாடகம் முதலியவைகள் மலரில் இடம் பெற்றிருக்கின்றன.

'மாசு' பாரதியாரின் குயில் பாட்டுக்குத் தீட்டியிருக்கும் சித்திரங்கள் வெகு அருமை. நந்தன், ஜெகதீஷ், மஹபூப் முதலிய சித்திரக் காரர்கள் தங்கள் தங்கள் கை வண்ணம் காட்டி மலரின் அழகுக்கு அழகு செய்திருக்கிருர்கள். சுருங்கச் சொன்னல், 'முழுதும் கையெழுத்திலுலே ஆன ஒரு மலரா, மற்ற அச்சு மலர்களைவிடச் சிறந்த முறையில் வெளி வந்திருக்கிறது!' என்று பிரமிக்க வைக்கிறது இம்மலர்.

இளைஞன் தீபாவளி மலரின் சிறப்புக்கு முக்கிய காரணமான இளைஞன் ஆசிரியர் திரு. சாரதியையும், மலர் தயாரிப்பதில்பங்கு எடுத்துக் கொண்ட மற்ற கலைஞர்களையும் பெரிதும் பாராட்டுகிருேம்.

'இளைஞன்' (தீபாவளி மலர், 1946) ஆசிரியர்: சாரதி; காரியாலயம்: 193, ரங்கே கவுடர் வீதி, கோயமுத்தூர்.

★

தீராத பிரச்னை

சீ. சாங்கப்பன்

முதல் முதலாக முனிசிபாலிடியில் குமாஸ்தாவாகச் சேர்ந்தபோது முனுசாமிக்கு வயது இரண்டு குறைய இருபதுதான். அதே முனுசாமி, அதே முனிசிபாலிடியில் பத்து வருஷங்கள் உழைத்த பிறகு அறுபது வயதுக் கிழவன் போல திடகாத்திரமுடனும் உற்சாகத்தோடும் காணப்பட்டான்.

ஒவ்வொரு மாதமும் சம்பளம் வாங்கும்போது முனுசாமிக்கு சம்பளத்தைவிட அந்த மாதக் கடன்தான் அதிகமாக இருக்கும். கடனை சம்பளம் வாங்கினதும் தீர்த்துவிட்டு மறுபடியும் வாங்க ஆரம்பிப்பான்.

எந்த விதத்திலும் அவனால் இந்தக் கடன் தொல்லையை நிறுத்த முடியவில்லை. இந்தக் கடனை அடைப்பதற்கு இன்னும் ஒரு மாத சம்பளம் அவனுக்கு எங்கிருந்தாவது கிடைத்தாக வேணும். மாதத்திற்கு ஒரு தடவைதானே முதல் தேதி வருகிறது! ஆகவே இன்னொரு சம்பளத்திற்கு எங்கே போவது? கடனை அடைப்பது எப்படி?

இரவும் பகலுமாக யோசித்துப் பார்த்தான் முனுசாமி. கடன் வாங்காமலிருக்க ஒரு வழியும் அவனுக்குத் தோன்றவில்லை.

'அப்படியே ஒரு மாத சம்பளம் காற்றிலடித்துக் கொண்டு என் முன்னால் வந்து விழுந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!' என்று சில சமயங்களில் அவன் நினைத்துப் பார்ப்பான். ஆனால் மறு நிமிஷமே அவன் தலையில் ஓங்கி ஒரு குட்டுப் போட்டுக் கொள்வான். "உலகம் தூங்கிக் கொண்டா இருக்கிறது? கண்களை அகல விரித்துப் பார்த்துக் கொண்டு தானிருக்கிறது" என்று அவனுக்கே அவன் சமாதானம் சொல்லிக் கொள்வான்.

வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கும் கெட்ட வழக்கத்தை விடுவதற்கு அவனால் முடியவில்லை.

இதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டுமென்று அவன் ஒரு நாள் ஆபீஸில் வேலை செய்யாமலே யோசனை செய்து கொண்டிருந்தான். மேஜையின்மேல் அவனுடைய பேப்பர்கள் வந்து குவிந்து கொண்டிருந்தன. ஆனால் ஒன்றையாவது அன்று அவன் தொடவில்லை. "ஆனது ஆகட்டும், வேலை போனால்கூட பரவாயில்லை. பத்து வருடங்கள்......... உம், இவ்வளவு காலம் ஏதாவது ஒரு சேட் கடையில் வேலை செய்திருந்தாலும் வருஷம் ஒரு தடவை போனசாவது கிடைத்திருக்கும். தரித்திரம் பிடித்த இந்த முனிசிபாலிடியில் வேலை செய்கிறவர்களுக்கெல்லாம் தரித்திரம்தான்?"

இவ்வாறு அவன் முனிசிபாலிடியை திட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தபோது இன்னொரு குமாஸ்தா அவனிடம் அவசரமாக வந்து "என்ன மிஸ்டர் முனிசாமி ஒரு உதவி செய்கிறீர்களா?" என்றார்.

ஏதாவது கடன்கிடன் கேட்கத் தான் அவன் வந்திருக்கிறுன் என்று முனிசாமிக்குத் தெரியும். ஆகவே அந்த குமாஸ்தாவைப் பார்த்து "இல்லை ஸார், இப்போது பணம் ஒன்றும்என்னிடம் இல்லை" என்றுன்.

"ஸார், இப்படிச் சொல்லக் கூடாது. இந்தத் தடவை கண்டிப்பாக அதிர்ஷ்டம் வரப் போகிறது. போன வாரப் போட்டியில் மூன்று தப்புகள் விழுந்து விட்டன. இந்தப் போட்டியில் என்னமோ முதல் பிரைஸ் கண்டிப்பாகக் கிடைக்கும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நீங்கள் ஒரு ரூபாய் கொடுங்கள். பிரைஸ் வந்தால் இரண்டு பேரும் எடுத்துக் கொள்ளலாம்" என்று அந்தக் குமாஸ்தா அடுக்கிக் கொண்டு போகவே முனுசாமிக்கு நாக்கில் ஜலம் ஊறிற்று.

"கடனேடு கடன் இன்னும் ஒரு ரூபாய் அதிகமானல் என்ன? குடியா முழுகிப் போய்விடும்? நம்மைத்தேடி வந்து கொண்டிருக்கிற அதிர்ஷ்டத்தை ஏன் விடவேண்டும். ஒரு சான்ஸ் அடித்தால் கடன் தொல்லையாவது தீரட்டுமே" என்று ஒரு தீர்மானத்திற்கு வந்து அந்த குமாஸ்தாவை உட்கார வைத்து விட்டு முனுசாமி பக்கத்து அறையிலே அவசர அவசரமாக நுழைந்தான். ஐந்து நிமிஷத்திலே ஆனந்தக் களிப்போடு திரும்பி வந்தான். அந்தக் குமாஸ்தாவின் கையில் முழு ரூபாய் ஒன்றை வைத்து "ஸார், நீங்களும் வாரம் வாரம் இந்தப் போட்டிகளைப் போட்டுக் கொண்டு வருகிறீர்கள். ஒரு தடவையும் நீங்கள் பிரைஸ் அடித்ததை நான் பார்த்ததில்லை. இந்தத் தடவை எனக்குக்கூட ஒரு நம்பிக்கை பிறந்திருக்கிறது. கண்டிப்பாக முதல் பிரைஸ் அடிக்கப் போகிறீர்கள்" என்று தைரிய வார்த்தைகள் சொல்லி அனுப்பினன்.

ஒரு மாதத்திற்குப் பிறகு ஒரு நாள் ஆபீஸில் ஒரே கலாட்டாவாக இருந்தது. முனுசாமியிடம் ஒரு ரூபாய் வாங்கி போட்டியில் கலந்து கொண்ட குமாஸ்தாவிற்கு முதல் பிரைஸ் கிடைத்தது. புதிதாக ஐந்து பத்து ரூபாய் நோட்டுகளை முனுசாமியின் கையிலே கொண்டு வந்து வைத்து அந்த குமாஸ்தா சொன்னன்: "சார் உங்கள் கைராசியை நான் என்னவென்று சொல்லுவேன் போங்

கள். முதல் பிரைஸ் பத்து பேர்களுக்கு. நமக்கு நூறு ரூபாய் கிடைத்திருக்கிறது. நான் வாக்களித்தபடி ஐம்பது ரூபாய் நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினான். முனுசாமியின் முகத்தில் அந்த மகிழ்ச்சி எதிரொலித்தது!

முனுசாமி வீட்டிற்குத் திரும்பும்போது ''கடவுள் இருக்கிறார். இல்லையென்று சொல்லுபவன் முட்டாள்'' என்று சொல்லிக் கொண்டே போனான். கடனை எல்லாம் அடைத்துவிடலாம் என்று நினைக்க நினைக்க அவனால் சந்தோஷத்தைத் தாங்க முடியவில்லை.

வீட்டை அவன் அடைந்தபோது அவனுடைய மனைவி அழுது கொண்டே வந்து அவனைக் கட்டிக் கொண்டாள். ''அப்பாவின் மேல் ஒரு மிலிடரி கார் ஏறி ஆஸ்பத்திரியில் கிடக்கிறாராம். ரொம்ப ஆபத்தாக இருக்கிறதாம். உடனே புறப்படும்படி எழுதியிருக்கிறார்கள்'' என்று கண்ணீர் விட்டுக் கொண்டு அவள் சொன்னபோது அவனால் ஒன்றுமே பேசமுடியவில்லை.

தான் மறு நாள் ஆபீஸிலே லீவு எழுதிக் கொடுத்து உத்திரவு வாங்கிக் கொண்டு வருவதாகவும், அவளை அன்றே ஊருக்கு அனுப்பி விடுவதாகவும் சொல்லி அன்றிரவே அவளை ஊருக்கு அனுப்பி விட்டான்.

மறு நாள் ஆபீசுக்குப் போனதும் பிரைஸ் அடித்த அவன் நண்பனை அழைத்து ''சார் அவசரமாக மாமனார் வீட்டிற்குப் போக வேண்டும். செலவு அறுபது எழுபது ரூபாய் வரைக்கும் இழுக்கும் போலிருக்கிறது. ஒரு பத்து ரூபாய் கொடுங்கள்'' என்று சொல்லி விட்டுத்தான் லீவுக்காக மானேஜரைப் பார்க்கச் சென்றான்.

ஊருக்குப் புறப்படும்போது அவன் ''உம்......கடவுளாம் கடவுள்! எந்த முட்டாள் கடவுள் இருக்கிறது என்று சொன்னது?'' என்று முணுமுணுத்துக் கொண்டே சென்றான்.



197249
சென்னை-600 008.

சந்தாதாரர்களுக்கு

'வசந்த'த்திற்கு அனுப்பும் செக்குகள், மணியார்டர், போஸ்டல் ஆர்டர் முதலியவைகளில் 'மானேஜர், வசந்தம்' என்று குறிப்பிடவேண்டும்.

மானேஜர் :

வசந்தம், 4/12A திருச்சி ரோடு, கோயமுத்தூர்.

Telegrams :- "UMAYAL". Telephone :- 56 A.

UMAYAL WEAVING ESTT., LTD.,

Cannanore, N. Malabar.

Manufacturers of:- BEST "UMAYAL" HANDLOOM FABRICS.

BEDSPREADS
TABLE LINEN
FURNISHING FABRICS AND CURTAIN CLOTHS
DRESS MATERIALS FOR LADIES AND GENTS IN UP-TO-DATE DESIGNS AND CHARMING COLOURS
TURKISH TOWELS
BATH GLOVES
BATH MATS
MUFFLERS ETC.

ENQUIRIES EARNESTLY SOLICITED.

ENCOURAGE HANDLOOM INDUSTRY.

"UMAYAL" FABRICS
AN ASSET TO EVERY HOME
EVERYTHING MADE TO ORDERS
POPULAR FABRICS
THROUGHOUT INDIA AND CEYLON.

Distributors for Mysore State :-
SRI UMAYAL STORES,
363, Avenue Road,
BANGALORE CITY.

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's, Underwear, Sport Shirts etc.,

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP" Coimbatore.

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

★

ஆர்யவைத்தியர்

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய பார்மசி

திருச்சி ரோடு :: கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

THE VASANTHA DYEING WORKS,

181. Oppanakara Street

Coimbatore.

Phone No. 155. Estd., 1921.

Proprietor

C. M. Subramanya Chettiar

CONTRACTOR

To

THE VASANTHA MILLS, LIMITED.

SINGANALLUR.

For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheap rates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25, சைனு பஜார் :: மதருஸ்

தற்கால கட்டிட நிர்மாணம்

குடியிருப்பு வசதி

உணவுக்கும் உடைக்கும் அடுத்த படியாக மனிதனுக்கு அவசியமானது குடியிருப்பு வசதி. தற்சமயம் வீடுகளுக்கு மிகுந்த அவசியம் ஏற்பட்டிருப்பது யாவருக்கும் தெரியும். இந் நெருக்கடியை சீக்கிரத்தில் ஓரளவுக்காவது தீர்த்து வைக்க வேண்டியது அவசியம்.

கான்கிரீட்—நாள்பட உழைக்கும் தன்மை, சிக்கனம், சுத்தம், தீ விபத்துக்குள்ளாகாமை முதலிய குணங்க ளுடையதால்—பணக்காரர்களுக்கு மட்டு மல்லாமல் எல்லோருக்கும் ஏற்ற கட்டிட சாதனமாகிறது.

கான்கிரீட்டை நன்கு பயன் படுத்திக் கொள்ள கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியாவின் (199, மவுன்ட் ரோடு, மதருஸ்) உதவி எப்பொழுதும் கிடைக்கும்.

உங்கள் வீடு கம்பீர மான மாளிகை போல் இருக்க வேண்டு மானுலும் சரி, அல்லது சதாரண சிறிய வீடாக இருக்க வேண்டுமானுலும் சரி, சுலபமாகவும், அதி கப்பணச் செலவில்லாமலும் கான்கிரீட்டினுல் கட்டலாம்.

தி ஸிமெண்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்.

CM. 101 A—Tamil.

தி சென்டரல் பேங் ஆப் இந்தியா, லிமிடெட்.

(இந்தியாவிலேயே மிகப் பெரிய இந்தியன் ஜாயின்ட் ஸ்டாக் பேங்)

(ஸ்தாபிதம்: டிசம்பர் 1911)

அதிகாரம் பெற்ற மூலதனம்	...	...	ரூ. 5,25,00,000
வாக்களிக்கப் பட்ட மூலதனம்	...	...	ரூ. 5,04,39,600
செலுத்தப் பட்ட மூலதனம்	...	...	ரூ. 2,51,02,200
ரிசர்வும் மற்ற நிதிகளும்	...	...	ரூ. 2,54,72,000
டிபாசிட்டுகள் 31-12-1944ல் இருந்தபடி		...	ரூ. 94,48,67,000

தலைமை ஆபீசு:

மகாத்மா காந்தி ரோடு, போர்ட், பம்பாய்.

இந்தியா முழுவதிலும் 180க்கு மேற்பட்ட கிளை ஸ்தாபனங்களும், வளங்கும் ஸ்தாபனங்களும் பெற்றது.

மானேஜிங் டைரக்டர்:- Mr. H. C. கேப்டன், J. P.

டைரக்டர்கள்:-

Sir. H. P. மோடி K. B, E. (தலைவர்)
ஹரிதாஸ் மாதவதாஸ்
ஆர்டிஷ B. துபாஷ்
டின்ஷா D. ரோமர்
நூர்முகமத் M. சினய்
பாபுஜி தாதாபாய் லாம்
தரம்ஷே முல்ராஜ் காட்டோவ்
ஹார்மஜி பிரேம்ஜி கனிஷாரியட்
விதல் தாஸ் கான்ஜி

லண்டன் ஏஜண்டுகள் :- மெஸர்ஸ், பார்க்லேஸ்பேங் லிமி மிட்லண்ட்பேங் லிமி.,

நியூயார்க் ஏஜண்டுகள்:- தி காரன்டி டிரஸ்ட் கம்பனி ஆப் நியூயார்க்

எல்லாவிதமான பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும். விண்ணப்பம் செய்து விவரங்களை ஊர்ஜிதம் செய்து கொள்ளலாம்.

தென் இந்தியாவின் கிளை ஸ்தாபனங்கள்:—

அடோனி, ஆலப்பிளை, ஈரோடு, பங்களூர், பெஜவாடா, கள்ளிக்கோட்டை, கொச்சி, கோயமுத்தூர், கடப்பை, தோணி, எர்ணுகுளம், குண்டக்கல், கோவில்பட்டி, கர்நூல், மதராஸ், மதுரை, நந்தியால், பொள்ளாச்சி, சேலம், திருப்பூர், திருச்சூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, உடுமலைப்பேட்டை, விருதுநகர்.

உயர்தரமான :-

- சட்டைத் துணிகள்,
- கோட்டுத் துணிகள்,
- படுக்கை விரிப்புகள்,
- ஸ்நானத் துண்டுகள்

முதலியன

நூதன முறையில் கைத்தறியில்

உற்பத்தி செய்பவர்கள்.

TRINITY WEAVING ESTABLISHMENT Ltd.,

(Incorporated in British India)

CANNANORE : : NORTH MALABAR.

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ. 25.

வசந்தா மில்ஸ்

லிமிடெட்.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

1934-ல் கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சிப் பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல்:
20 நெ.முதல் 44 நெ. வரை, ஒத்தை, முறுக்கு, காரம் சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:
வேஷ்டிகள், லாங்கிளாத்,
டவல், சர்ட்டிங்,
மல், சதர்,

தயாரிக்கிறோம்.

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.
600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.



THE MAN *in* INDUSTRY

கண்ணாடித் தொழிலாளி

கண்ணாடி உருக்குவது இந்தியாவின் புராதனமான தொழில். அதில் ஈடுபட்டுள்ள திறமையும் அனுபவமும் நிறைந்த இன்றையத் தொழிலாளி, பக்குவமாகக் காய்ச்சிய கண்ணாடிக் குழம்பை, தொழில் முறைப்படி ஊதி, கண்ணாடிக் கிண்ணம், பிளாஸ்க் முதலிய பொருள்களை உற்பத்தி செய்கிறார் உருவமே இல்லாத ஒன்றிலிருந்து உருவங்களை அமைக்கிறார்.

இக்காலத்து முன்னேற்றமான முறைகளைக் கொண்டு, நம் நாட்டின் உபயோகத்துக்குத் தேவையான கண்ணாடிப் பொருள் எல்லாவற்றையுமே தயாரிக்க முடியும். ஆனால் அவைகளை நாடெங்கும் மக்களுக்குக் கிடைக்கும்படி செய்ய நல்ல ரோடுகள் தேவை.

இந்தியக் கைத்தொழில் அபிவிருத்திக்கு நல்ல ரோடுகள் தேவை என்னும் நம்பிக்கையுடன் பர்மாஷெல் கம்பெனியாரால் வெளியிடப்பட்டது.

BURMAH-SHELL OIL STORAGE AND DISTRIBUTING CO. OF INDIA LTD. (INCORPORATED IN ENGLAND) GA/DS/8

இந்தியன் பாங்கு லிமிடெட்

தலைமை ஆபீஸ்: 'இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்'

நார்த் பீச் ரோடு :: மதராஸ்

சென்னை ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட்	திருவல்லிக்கேணி
மயிலாப்பூர்	தியாகராயநகர்
புரசவாக்கம்	மவுண்டுரோடு

எக்மோர்

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களுமுள்ளன.

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 69,96,600
செலுத்தப்பட்ட „ „ 50,79,613
ரிஸர்வ் நிதி „ 56,87,200

டிபாஸிட்டுகள் ரூ. 17 கோடிக்கு அதிகம்

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விபரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர், செக்ரடரி

IBN 101

வசந்தம் சந்தா

வருஷ சந்தா	ரூ.	6—0—0
ஆறுமாத சந்தா	ரூ.	3—0—0
தனிப்பிரதி	ரூ.	0—8—0

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

மானேஜர்:—

வசந்தம் காரியாலயம்,
திருச்சிரோட், கோயமுத்தூர்.

நீங்கள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும்

எங்கள் கூட்டுறவு முறையின் மூலம் உண்டாக்கப்படும் பெருவாரியான கைத்தறித் துணிகள் நேராகவே மதராஸிலும் மற்ற நகரங்களிலும் 40 கடைகளில் விற்பனை செய்யப் படுவதின் முக்கிய அனுகூலங்கள் :–

- பயிற்சியுள்ள நெசவாளர்களால் தயாரிக்கப்பட்ட ஆடைகள்.
- சாயம் போகாத நவநாகரிகமான சாக்குகள்.
- புத்தம் புதிய அளவில் வேண்டிய அளவு.

வேஷ்டிகள், புடவைகள், சட்டைகள், டவல்கள், பிரின்ட்ஸ், மேஜைத் துணிகள், படுக்கை விரிப்புகள், லுங்கிகள், கொசுவலைகள் முதலியன கிடைக்கும்.

மதராஸ் கோவாபரேடிவ்
கைத்தறி ஜவுளிகள்

கட்டுப்பாடு விலைகளில் புதிய சரக்குகள்

மதராஸ் ஹான்லூம் வீவர்ஸ் புரோவின்ஷியல் கோவாபரேடிவ் ஸோஸைடி லிட்., 6-A உட்ஸ் ரோடு, மௌண்ட் ரோடு, மதராஸ்.

கொஞ்சம் பொருள் அதிகமாய்ப்பயன் படும்படிச்செய்வது.

AG93TM



பிரசினை: 9 தீக்குச்சிகளைக் கொண்டு 5 முக்கோணங்கள் அமைக்கவும்.



விடை: படத்தில் காட்டியுள்ளபடி தீக்குச்சிகளை அமைக்கவும். ஐந்தாவது முக்கோணம் நிழலுருவமாய் அமைக்கப்பட்டுள்ள தீக்குச்சிகளினால் உண்டாகிறது.

தற்போதைய விலைவாசிகள் இருந்து கொண்டிருக்கிற வரையில்-உணவு விஷயத்திலாகிலும், துணி விஷயத்திலாகிலும், கல்வி விஷயத்திலாகிலும் ஒரு திட்டத்தை அனுசரிக்காமல் காரியங்களைக் கண்டபடி செய்யும் பட்சத்தில் கொஞ்சப் பொருள் அதிகமாய்ப் பயன்படும்படி செய்யமுடியாது. குடும்பத்தின் வரவு செலவு திட்டத்தைச்

ஜூபிடர் பிக்சர்ஸ்

Lessees of:

சென்ட்ரல் ஸ்டுடியோஸ் லிமிடெட்

கோயமுத்தூர்

நவீன யந்திர சாதனங்களைக் கொண்டு தென் இந்தியாவிலேயே மிகப் பிரக்யாதி வாய்ந்த அநேகம் தமிழ்ப் படங்களைத் தயாரித்த

இணையற்ற ஸ்டுடியோ!

★

இப்பொழுது தயாராகிவரும் படங்கள்:

வால்மீகி	— சென்ட்ரல் ஸ்டுடியோஸ்
என் மகன்	— ,, ,,
ஸ்ரீ முருகன்	— ஜூபிடர் பிக்சர்ஸ்
மஞ்சு கோஷா (ரத்னகுமார்)	— முருகன் டாக்கி பிலிம் கம்பெனி
காதம்பரி (குண்டலகேசி)	— K. S. S. பிக்சர்ஸ்

★

அழகுக்கு அழகு செய்யும்

ஆபரணங்கள் !

நம்பிக்கை, நாணயம், வேலைப்பாடு, நாகரிகம்

இவைகளுக்குப் பிரசித்தி பெற்றவர்கள்.

P. A. ராஜா செட்டியார் & பிரதர்

போன் 218A தந்தி "ராஜா"

—: தபால்பெட்டி 139 :—

கடைத்தெரு : கோயமுத்தூர்